

5

# இந்திய வரலாறு

தமிழ்நாட்டுப்
பாடநூல் நிறுவனம்

# இந்திய வரலாறு

## ஐந்தாம் வகுப்பு

தமிழ்நாட்டுப்
பாடநூல் நிறுவனம்
சென்னை

© தமிழ்நாட்டு அரசு
முதல் பதிப்பு — 1982

**ஆசிரியர் :**

திரு. **மா. முத்துவேலு,**
தலைமை ஆசிரியர்,
அரசினர் உயர்நிலைப் பள்ளி,
வியாசர்பாடி, சென்னை

**மேலாய்வாளர்கள் :**

பேரா. எம். வி. சுப்பிரமணியம்,
ஸ்ரீபுரம், திருநெல்வேலி சந்திப்பு

திரு. தி. க. இராஜகோபாலன்,
தலைமை ஆசிரியர்,
அரசினர் உயர்நிலைப் பள்ளி,
பாடலூர், திருச்சி மாவட்டம்

**விலை : ரூ. 2 - 30**

இந்திய அரசு சலுகை விலையில் வழங்கிய 60 ஜி. எஸ் எம். தாளில் இந்நூல் அச்சிடப்பட்டுள்ளது.

அச்சிட்டோர் :
குமரன் ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை-600 001

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | பண்டைக்கால இந்தியா | ... | 1 |
| 2. | புத்த, சமண சமயங்கள் | ... | 8 |
| 3. | பாரசீக, கிரேக்கப் படையெடுப்புகள் | ... | 11 |
| 4. | மௌரியப் பேரரசு | ... | 16 |
| 5. | குஷானர்கள் | ... | 23 |
| 6. | குப்தர்கள் | ... | 27 |
| 7. | ஹர்ஷர்—மகா பல்லவர்கள் | ... | 33 |
| 8. | இந்தியாவில் முஸ்லிம் ஆதிக்கம் | ... | 41 |
| 9. | மொகலாயப் பேரரசு | ... | 49 |
| 10. | இந்தியாவில் ஆங்கிலேயர் ஆதிக்கம் | ... | 62 |
| 11. | அயலாராட்சியின் பொருளாதார விளைவுகள் | ... | 73 |
| 12. | முதல் இந்திய விடுதலைப் போர் | ... | 77 |
| 13. | மேல்நாட்டுக் கல்வியும் இந்தியப் பண்பாடும் | ... | 83 |
| 14. | இந்திய சுதந்திரப் போராட்டம் | ... | 89 |
| 15. | இந்திய அரசியலமைப்பு | ... | 99 |
| 16. | சுதந்திர இந்தியாவின் சாதனைகள் | ... | 107 |
| | இந்திய வரலாறு—கால அட்டவணை | ... | 115 |

உயிர்த் தியாகிகளின் குருதியைவிடக் கல்வியாளர்களின் எழுதுகோலிலுள்ள மை புனிதமானது.

—*நபிகள் நாயகம்*

# 1. பண்டைக்கால இந்தியா


## *முன்னுரை*

"பாரத நாடு பழம் பெரும் நாடு"

இந்தியா நமது தாய்நாடு. இதற்கு *பாரத நாடு* என்றும் பெயர் உண்டு. *அன்னை பாரதம்* அல்லது *பாரத மாதா* என்று இதனை அன்புடன் அழைக்கின்றோம். இந்திய நாகரிகம் மிகவும் பழமையானது. பண்டைய காலத்திலிருந்தே நமது நாட்டினர் நாகரிகத்தில் உயர்ந்து வாழ்ந்து வந்தனர் என்பது தெரிகிறது. சிந்து நதி பாயும் சமவெளியில் 5,000 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த மக்கள் சிறந்த நாகரிகத்துடன் வாழ்ந்து வந்தனர் என்பதற்குப் பல சான்றுகள் கிடைத்துள்ளன.

### *(அ) சிந்துவெளி நாகரிகம்*


கி. பி. 1922ஆம் ஆண்டில் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் சிந்து வெளியில் அகழ்வாராய்ச்சிகளை மேற்கொண்டனர். புதைந்து



படம் 1. *சிந்து சமவெளி நாகரிகம்*

கிடந்த இரு பழைய நகரங்களை அங்கு அகழ்ந்தெடுத்தனர். அவற்றில் ஒன்று, சிந்து நதிக் கரையிலுள்ள *மொகஞ்சதாரோ*. மற்றொன்று,

ராவி ஆற்றங்கரையிலுள்ள *ஹரப்பா*. இங்கு கிடைத்துள்ள சான்றுகளிலிருந்து அங்கு வாழ்ந்த மக்கள் சிறந்ததொரு நாகரிகத்துடன் வாழ்ந்திருக்க வேண்டுமெனப் புலப்படுகிறது. இந்நாகரிகம் கி.மு. 3250-க்கும் கி.மு. 2750-க்கும் இடைப்பட்ட காலத்திற்குரியது எனக் கருதப்படுகிறது. இது சற்றேறக்குறைய 5,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலமாகும். இந்நாகரிகத்தின் சின்னங்கள் குஜராத் மாநிலத்திலுள்ள *லோதால்*, இராஜபுதனத்திலுள்ள *கலிபங்கன்* என்னும் இடங்களிலும் சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.





படம் 2. *சிந்து சமவெளி நகரமைப்பு*

சிந்துவெளியில் வாழ்ந்த மக்கள் நகரங்களில் வாழ்ந்தனர். நகர வீதிகள் அகலமாகவும் நேராகவும் அமைக்கப்பட்டிருந்தன. வீடுகள் சுட்ட செங்கற்களால் கட்டப்பட்டிருந்தன. வீடுகளில் தாழ்வாரங்கள் சமையல் அறைகள், குளிக்கும் அறைகள், கிணறுகள், கழிவுநீர்ப் பாதைகள் ஆகியவை அமைக்கப்பட்டிருந்தன. வீட்டின் கழிவுநீர்ப் பாதைகள் தெருவிலிருந்த மூடிய பாதாளச் சாக்கடையில் கலந்தன. நகர மையத்தில் பொது நீச்சல் குளம் ஒன்று இருந்தது. அதனைச்

சுற்றிலும் குளியலறைகள் இருந்தன. நீச்சல் குளத்தின் நீரை வடிகட்ட வசதி செய்யப்பட்டிருந்தது. தானியக் களஞ்சியங்கள், கால்நடை நிலையங்கள் ஆகியவையும் அமைக்கப்பட்டிருந்தன.

கல்லாலும் மண்ணாலும் செய்யப்பட்ட சுமார் 500 முத்திரைகள் அங்கு கண்டெடுக்கப்பட்டன. அவற்றில் மாடு, யானை போன்ற உருவங்களும் சித்திர எழுத்துகளும் பொறிக்கப்பட்டிருந்தன. விளை யாட்டுப் பொருள்களும் பொம்மைகளும் காணப்பட்டன. அங்கு வாழ்ந்த மக்கள் செம்பினாலும் வெண்கலத்தினாலும் ஆன பாத்திரங்களைப் பயன்படுத்தினர். சிறந்த வேலைப்பாடுகளுடன்கூடிய மட்பாண்டங்கள், தந்தத்தாலான அழகிய பொருள்கள், பொன், வெள்ளி நகைகள் ஆகிய வையும் கண்டெடுக்கப்பட்டன. இரும்புச் சாமான்கள் காணப்படவில்லை யாதலால் இம் மக்கள் இரும்பைப்பற்றி அறிந்திருக்கவில்லையென்று தெரிகிறது.

படம் 3. மொகஞ்சதாரோவில் கண்டுபிடிக்கப்பட்ட முத்திரைகள்

உழவுத் தொழில் அவர்களது முக்கியமான தொழிலாகும். நெசவுத் தொழில், பலவகை சிறு கைத்தொழில்கள் ஆகியவற்றிலும் ஈடுபட்டிருந்தனர். கோதுமை, பார்லி, பருத்தி போன்ற விளைபொருட் கள் உற்பத்தி செய்யப்பட்டன. மக்கள் பருத்தி, கம்பள ஆடைகளை அணிந்தனர். அயல் நாட்டு மக்களுடன் வாணிக உறவு கொண்டிருந் தனர் என்பதற்கான சான்றுகளும் காணப்பட்டன. சிற்பக் கலையில் மக்கள் தேர்ச்சி பெற்றிருந்தனர். நாட்டியம், சதுரங்கம், சூதாட்டம் ஆகியவை இவர்களின் பொழுதுபோக்குகளாகும். ஹரப்பாவில் வெண் கலத்தால் ஆன நடன மாதின் சிலை ஒன்று கண்டெடுக்கப்பட்டது. சக்தியையும் சிவலிங்கத்தையும் இவர்கள் வழிபட்டனர். விலங்குகளால் சூழப்பட்ட சிவபெருமான் உருவமும், களிமண்ணாலான சிவலிங்க

உருவங்களும் காணப்பட்டன. சிந்து சமவெளி மக்கள் மரங்கள், விலங்குகள் ஆகியவற்றையும் வணங்கி வந்தனர். எருதைப் புனித மாகக் கருதினர். சிந்து சமவெளி நாகரிகம் ஒரு நகர நாகரிகமாகும். இது ஆரிய நாகரிகத்திற்கு முற்பட்டது. ஆரியத் தொடர்பில்லாத, பழமையான ஒரு தனித்த நாகரிகத்தைச் சார்ந்ததாகும். *ஹீராஸ் பாதிரியார்* போன்ற வல்லுநர்கள் இதைத் திராவிட நாகரிகம் எனக் கருதுகின்றனர்.

## (ஆ) ஆரிய - திராவிடப் பண்பாடுகளின் இணைப்பு

### I. *திராவிடர்கள்*

ஆரியர்களுக்கு முன்பே இந்தியாவில் வாழ்ந்துவந்த மக்கள் *திராவிடர்கள்* ஆவர். திராவிடர்கள் சிறந்த நாகரிகத்துடன் வாழ்ந்து வந்தனர். தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளுவம் ஆகியவை திராவிட மொழிகளாகும்.

திராவிட சமூகத்தின் தலைவர் மன்னராவார். மன்னர்கள் வலிமை மிக்க படைகளை வைத்திருந்தனர். வில், அம்பு, வேல், வாள் போன்ற கருவிகளைப் பயன்படுத்தினர். பயிர்த் தொழில் திராவிடர் களின் முக்கியத் தொழிலாகும். நீர்ப் பாசனத்திற்காக ஆறுகளின் குறுக்கே அணைகளைக் கட்டினர். துணி நெய்தல், மட்பாண்டம் செய்தல், மரக் கலங்கள் செய்தல் ஆகியவற்றிலும் அவர்கள் தேர்ச்சி பெற்றிருந்தனர். கடல் கடந்து அயல் நாடுகளுடன் வாணிகம் நடத் தினர். தேக்கு, அரிசி, மெல்லிய பருத்தி ஆடைகள், மயில் தோகை போன்றவற்றை சுமேரியா, எகிப்து ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தனர். பொன், மணி, முத்துக்களால் ஆன அணிகலன் களைப் பயன்படுத்தினர். யாழ், குழல் ஆகிய இசைக் கருவிகளைக் கையாண்டனர்.

திராவிடர்கள் லிங்கம், மரங்கள், பாம்பு முதலியவற்றை வழி பட்டனர். பிற்காலத்தில் இவர்கள் முருகக் கடவுளையும் வழிபடலாயினர்.

### II. *ஆரியர்கள்*

ஆரியர்கள் நம் நாட்டில் கி.மு. 2000-ல் குடியேறினார்கள் என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறுகிறார்கள். அவர்கள் மத்திய ஆசியாவிலிருந்து வந்தவர்கள் என்றும் முதலில் பஞ்சாப் சமவெளியிலும் பின்னர் கங்கைச் சமவெளியிலும் குடியேறினார்கள் என்றும் கருதப்படு

கிறது. ஆரியர்களது வாழ்க்கையைப்பற்றி அறிந்துகொள்ள வேதங்கள் பெரிதும் பயன்படுகின்றன. வேதங்கள் நான்காகும். அவை *ரிக், யஜுர், சாமம், அதர்வனம்* ஆகும்.

ஆரியர்கள் பல குடும்பங்களாகக் கிராமங்களில் வசித்துவந்தனர். குடும்பமே ஆரிய சமூக அமைப்பின் அடிப்படையாகும். குடும்பத்தின் தலைவர் தந்தை ஆவார். பெண்கள் மதிப்புடன் நடத்தப்பட்டனர். கிராமத் தலைவர் *கிராமணி* எனப்பட்டார். மன்னர் ஆட்சி முறை அவர்களிடையே நிலவியது. அரசனுக்கு அறிவுரை கூற *சமிதி, சபா* என்ற இரு சபைகள் இருந்தன.

உழவுத் தொழிலும், ஆடு மாடு மேய்த்தலும் ஆரியர்களது முக்கியத் தொழில்களாகும். கம்பள ஆடை நெய்தல், தோல் பதனிடுதல், தச்சு வேலை முதலிய கைத் தொழில்களையும் அவர்கள் அறிந்திருந் தனர். கோதுமை, பார்லி, பால், இறைச்சி முதலியவற்றை உணவாகக் கொண்டனர். பசுவை மிகவும் புனிதமாகக் கருதினர்.

ஆரியர்கள் இயற்கையைத் தெய்வமாக வழிபட்டனர். இடி, மின்னல், காற்று, நெருப்பு, மழை போன்ற இயற்கைத் தெய்வங்களை வணங்கினார்கள். இத்தெய்வங்களை மகிழ்விக்க வேள்விகள் செய்தனர். மக்கள் தொகை அதிகமாகவே ஆரியர்கள் பஞ்சாபிலிருந்து கங்கைச் சமவெளியில் குடியேறினர். அநேக இராச்சியங்கள் அங்கு தோன்றின. இக் காலத்தில்தான் *இராமாயணம், மகாபாரதம்* என்ற வீர காவியங்கள் எழுதப்பட்டன. கங்கைச் சமவெளியில் ஆரியர்கள் பரவிய போது ஆரிய சமூகத்தில் சாதிகள் தோன்றின. தொழிலை அடிப் படையாகக் கொண்டு சமூகம் பிரிக்கப்பட்டது.

## III. *ஆரிய - திராவிடப் பண்பாடுகளின் இணைப்பு*

பஞ்சாபில் முதன்முதலில் குடியேறிய ஆரியர்கள் நாளடைவில் இந்தியா முழுவதும் பரவினார்கள். ஆரிய திராவிட இனங்கள் கலந்தன. ஆரியரது கொள்கைகளும் பண்பாடும் திராவிடப் பண்பாட்டோடு கலக்கத் தொடங்கின. அவர்களது சமூகப் பழக்கவழக்கங்களிலும் காலப் போக்கில் இணைப்பு ஏற்பட்டது. ஆரிய, திராவிட மக்களின் மொழிகளிலும் நாளடைவில் கலப்பு ஏற்பட்டது. இரு நாகரிகங்களும் இணைந்து இந்தியப் பண்பாடாக உருவாயிற்று.

இரு இனங்களும் கலந்த பின் அவரவர் வழிபட்ட தெய்வங்களும், சடங்குகளும், சமயக் கொள்கைகளும் இந்தியப் பண்பாட்டில் இடம் பெற்றன. ஆரியர்கள் இயற்கையை வணங்கினர். திராவிட நாகரிகக் கலப்புக்குப் பின்னர் பிரம்மா, விஷ்ணு, சிவன் முதலிய தெய்வங்களை வணங்கினர். உருவ வழிபாடும் ஆரிய சமூகத்தில் ஏற்பட்டது.

இவ்வாறு இனம், மொழி, சமூகம், சமயம் ஆகிய பல துறைகளிலும் ஆரியர்களும் திராவிடர்களும் ஒன்றாகக் கலந்து இந்திய மக்களாக இன்று விளங்குகின்றனர்.

## வினாக்கள்

I. கோடிட்ட இடங்களை நிரப்புக :

1. ———— ஆற்றங்கரையில் மொகஞ்சதாரோ அமைந்துள்ளது.
2. ஹரப்பா ———— ஆற்றங்கரையில் அமைந்துள்ளது.
3. சிந்துவெளி மக்களுக்கு ———— என்னும் உலோகத்தின் பயன் தெரியாது.
4. ஆரியர்களின் வருகைக்கு முன் நமது நாட்டில் வாழ்ந்துவந்த மக்கள் ————.

II. பின்வரும் உட்பிரிவுகளுள் எது மிகவும் பொருத்தமான விடை என்று கூறுக :

சிந்துவெளி நாகரிகத்தை

(அ) திராவிட நாகரிகமெனக் கூறலாம்.
(ஆ) தமிழர் நாகரிகமெனக் கூறலாம்.
(இ) சுமேரிய நாகரிகமெனக் கூறலாம்.
(ஈ) ஆரியர்களின் வருகைக்கு முற்பட்ட ஆரியத் தொடர்பில்லாத நாகரிகம் எனக் கூறலாம்.

III. சுருக்கமாக விடையளிக்கவும் :

1. சிந்து வெளி நாகரிகத்தின் காலம் என்ன ?
2. சிந்துவெளியில் தோண்டியெடுக்கப்பட்ட இரு நகரங்கள் யாவை?
3. திராவிட மொழிகள் யாவை ?
4. நான்கு வேதங்கள் யாவை ?

IV. **விரிவான விடையளிக்கவும் :**

1. சிந்துவெளி நாகரிகத்தின் சிறப்பியல்புகள் யாவை ?

2. திராவிட நாகரிகத்தைப்பற்றி விளக்கிக் கூறுக.

## பயிற்சி

1. சென்னையிலுள்ள தொல்பொருள் காட்சிசாலைக்குச் சென்று அங்கு வைக்கப்பட்டிருக்கும் சிந்துவெளி நாகரிகப் புதை பொருள்களைக் காணவும்.

2. சிந்துவெளி நாகரிகம் பற்றிய படங்களைச் சேகரித்து உன் படப் புத்தகத்தில் ஒட்டுக.

# 2. புத்த, சமண சமயங்கள்

*முன்னுரை*

இந்திய வரலாற்றில் கி.மு. ஆறாம் நூற்றாண்டு ஒரு முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. வட இந்தியாவில் பல இராச்சியங்களும் சில பேரரசுகளும் தோன்றின. ஆத்மிகத் துறையில் பல ஆராய்ச்சியாளர்கள் தோன்றி, வேதங்களில் கூறப்படும் கருத்துகளைத் திறனாய்வு செய்தனர். முக்கியமாக இரு பெரும் புதிய சமயங்கள் தோன்றின. அவை *புத்த சமயமும் சமண சமயமும்* ஆகும். வேத சமயம் தொடக்கத்தில் மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட போதிலும், நாளடைவில் அதன் செல்வாக்கு குறைய ஆரம்பித்தது. வேதச் சடங்குகள் அனைத்தும் வடமொழியில் நடைபெற்றன. பாமர மக்களால் அவற்றைப் புரிந்துகொள்ள முடியவில்லை. மேலும் சில சடங்குகளில் உயிர்ப் பலியிடும் வழக்கமும் இருந்தது. இதனைப் பலர் வெறுத்தனர். சடங்குகளை அடிப்படையாகக் கொண்ட வேத சமயத்தில் மதத் தலைவர்கள் (குருமார்கள்) ஆதிக்கம் வளர்ந்தது. இதனையும் சிலர் விரும்பவில்லை. இதன் விளைவாகப் புதிய சமயங்களிரண்டு தோன்றின.

## *(அ) புத்த சமயம்*

புத்த சமயத்தைத் தோற்றுவித்தவர் *சித்தார்த்தர்.* கங்கைச் சமவெளியில் *கபிலவாஸ்து* என்னும் நகரம் இருந்தது. *சுத்தோதனர்* என்னும் அரசர் அங்கு ஆட்சி புரிந்துவந்தார். அவரது செல்வ மகன் சித்தார்த்தர். சித்தார்த்தர் பிறந்த ஏழாவது நாளில் அவரது அன்னை *மாயா தேவி* இறந்துவிட்டார். மன்னரே தனது மகனைக் கண்ணெனப் போற்றி வளர்த்தார். *யசோதரை* என்னும் அழகிய இளவரசியை அவருக்கு மணம் செய்துவைத்தார். அவர்களுக்கு *இராகுலன்* என்னும் மகன் பிறந்தான். சித்தார்த்தர் உலக மக்களின் துயரங்களைக் கண்டு துடிதுடித்தார். மக்களின் துன்பங்களுக்கான காரணத்தைக் கண்டறிய விரும்பினார். ஒரு நாள் இரவில் தமது மனைவி, மகன் அனைவரையும் துறந்து காட்டிற்குச் சென்றார். பல ஆண்டுகள் அலைந்து திரிந்தார். பின்னர் ஒரு நாள் *கயை* என்னுமிடத்தில் ஒரு போதி மரத்தடியில் அமர்ந்து தியானத்தில் ஆழ்ந்தார். அப்போது திடீரென்று அவருக்கு மெய்யறிவு தோன்றியது. அது முதல் அவர்

*புத்தர்* அல்லது மெய்யறிவு பெற்றவர் என அழைக்கப்பட்டார். அவருடைய கொள்கைகள் புத்த சமயம் என வழங்கப்படலாயிற்று.



படம் 4. புத்தர்

ஆசையே துன்பங்கள் அனைத்திற்கும் காரணம். ஆசையை நீக்கினால் துன்பமின்றி வாழலாம். மனம், சொல், செயல் ஆகியவற்றில் தூய்மை வேண்டும். எப்போதும் உண்மையே பேச வேண்டும். எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்த வேண்டும். இவையே புத்தரின் போதனைகளாகும்.

புத்தர் நாடெங்கிலும் சென்று அவர் கண்டறிந்த உண்மைகளை மக்களிடையே பரப்பினார். புத்தர் போதித்த உண்மைகள் எளியனவாக இருந்தன. ஆயிரக்கணக்கான மக்கள் அவருடைய சீடர்களாக மாறினர். இறுதியில் புத்தர் தமது 80ஆம் வயதில் உயிர் நீத்தார்.

### *(ஆ) சமண சமயம்*

சமண சமயத்தைத் தோற்றுவித்தவர் *வர்த்தமான மகாவீரர்* ஆவார். இவர் *வைசாலி* நாட்டில் லிச்சாவி எனப்படும் அரச குடும்பத்தில் பிறந்தார். *யசோதா* என்னும் இளவரசியை மணந்தார். இவர்களுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. இவர் தமது முப்பதாம் வயதில் துறவறமேற்றார். 12 ஆண்டுகள் கடுந்தவம் புரிந்தார். முடிவில் தமது ஐம்புலன்களையும் வென்று மெய்யறிவு பெற்றார். அன்று முதல் அவர் *ஜினர்* அல்லது *மகாவீரர்* என்று அழைக்கப்பட்டார். ஜினர் என்றால் ஐம்புலன்களையும் வென்றவர் என்று பொருள். இவர் போதித்த சமயம் *ஜைன சமயம்* அல்லது *சமண சமயம்* என வழங்கப்படலாயிற்று. இவர் தம் 72ஆம் வயதில் உயிர் நீத்தார்.



படம் 5 மகாவீரர்

நல்லறிவு, நன்னம்பிக்கை, நன்னடத்தை ஆகியவற்றை மக்கள் கடைப்பிடிக்க வேண்டும் என்று மகாவீரர் வற்புறுத்தினார். இம் மூன்றும் *மும்மணிகள்* எனப்படும். முக்தி பெற மனம், சொல், செயல் ஆகியவற்றில் தூய்மை வேண்டும். எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்த வேண்டும் என்பவையே சமண சமயக் கொள்கைகளாகும்.

புத்த, சமண சமயங்கள் கொல்லாமை அல்லது அகிம்சையை வற்புறுத்தின. நன்னடத்தைக்கு முக்கியத்துவம் அளித்தன. உருவ வழிபாடு, சடங்குகள் ஆகியவற்றை நீக்கின. ஆனால், வேத சமயத்தின் அடிப்படைக் கொள்கைகளான ஊழ்வினைக் கொள்கை, மறுபிறப்புக் கொள்கை ஆகியவற்றை ஏற்றுக் கொண்டன. பிறப்பில்லாமல் இருப்பதே முக்தி என்று புத்தரும் மகாவீரரும் போதித்தனர்.

### *வினாக்கள்*

**I. *கோடிட்ட இடங்களை நிரப்புக :***

1. புத்தர் என்னும் சொல்லுக்கு ——— என்பது பொருள்.
2. சித்தார்த்தருக்கு ————— என்னும் இடத்தில் மெய்யறிவு உண்டாயிற்று.
3. மகாவீரரின் இயற்பெயர் ———— ஆகும்.
4. மகாவீரர் என்னும் சொல்லுக்கு ——— என்பது பொருள்

**II. *சுருக்கமான விடையளிக்கவும் :***

1. புத்த, சமண சமயங்கள் தோன்றக் காரணங்கள் யாவை ?
2. புத்த சமயத்தைத் தோற்றுவித்தவர் யார் ?
3. புத்தர் போதித்த உண்மைகள் யாவை ?
4. சமண சமயத்தைத் தோற்றுவித்தவர் யார் ?
5. மும்மணிகள் யாவை ?

**III. *விரிவான விடையளிக்கவும் :***

1. புத்தரின் வாழ்க்கை வரலாற்றை எழுதுக.
2. மகாவீரரின் வாழ்க்கை வரலாற்றை விளக்கவும்.

### *பயிற்சி*

1. புத்தர், மகாவீரர் ஆகியோரின் வாழ்க்கை வரலாற்று நூல்களைப் படிக்கவும்.
2. புத்த ஜாதகக் கதைகளைப் படிக்கவும்.
3. புத்தர், மகாவீரர் ஆகியோரின் போதனைகளை அட்டையில் எழுதி வகுப்பறையில் தொங்கவிடுக.
4. இந்தியா தேசப் படத்தில் கபிலவாஸ்து, கயை, வைசாலி ஆகிய இடங்களைக் குறிப்பிடுக.

# 3. பாரசீக, கிரேக்கப் படையெடுப்புகள்

*முன்னுரை*

நமது நாட்டின் மூன்று திசைகளிலும் கடலும், ஒரு திசையில் மலையும் அமைந்திருப்பதால் நமது நாட்டை ஓர் இயற்கை அரண் கொண்ட நாடு எனலாம். 16ஆம் நூற்றாண்டில் மேலை நாட்டினர் கடல் வழிகளைக் கண்டுபிடிக்கும்வரை இந்தியாவிற்குக் கடல் வழியாக அந்நியப் படையெடுப்பு ஏதும் ஏற்படவில்லை. வடக்கே வானளாவிய இமயமலைத் தொடர் அமைந்துள்ளதால் அங்கிருந்தும் அந்நியப் படையெடுப்பு ஏற்பட எந்தவித வாய்ப்புமில்லை. அந்நியர்கள் நம் நாட்டின்மீது படையெடுக்க வேண்டுமெனில், அவர்கள் வடமேற்கிலுள்ள கணவாய்களின் வழியாகத்தான் இந்தியாவிற்குள் நுழைய முடியும். இவ்வளவு பாதுகாப்புடன் அமைந்துள்ள நமது நாட்டின்மீது பழங்காலத்திலிருந்தே பல படையெடுப்புகள் நடந்துள்ளன.

முதன்முதலாக *ஆரியர்கள்* வடமேற்குக் கணவாய்கள்மூலம் இந்தியாவிற்கு வந்து குடியேறினர். பின்னர் *பாரசீகர், கிரேக்கர், குஷானர், ஹூணர், முஸ்லிம்கள்* ஆகியோர் இந்தியாவின்மீது படையெடுத்து வந்துள்ளனர்.

இத்தகைய படையெடுப்புகளுக்கு முக்கிய காரணங்களாவன :

1. நமது நாட்டின் செழிப்பும் செல்வமும் அந்நியர்களின் கவனத்தை ஈர்த்தன.

2. 19ஆம் நூற்றாண்டு வரையிலும் நாடு முழுவதற்கும் ஒரு வலிமையும் திறமையும் கொண்ட அரசு அமையவில்லை.

3. நாட்டு மக்களிடையே ஒருமைப்பாட்டுணர்ச்சியும், நாட்டுப் பற்றும் குன்றி இருந்தது.

மாணவர்களே! இதனின்றும் நீங்கள் அறிந்துகொள்ளவேண்டிய படிப்பினை ஒன்று உள்ளது. நாமனைவரும் ஒற்றுமையுணர்வும், தேசிய உணர்வும் கொண்டவர்களாய் இருந்து நாட்டின் சுதந்திரத்தைப் பேணிக் காத்தல் வேண்டும்.

இந்தப் பாடத்தில் கி. மு. நான்காம் நூற்றாண்டில் நமது நாட்டில் நடைபெற்ற பாரசீக, கிரேக்கப் படையெடுப்புகளைப்பற்றிப் படித்தறிவோம்.

## *(அ) பாரசீகப் படையெடுப்பு—முதலாம் டேரையஸ்*

ஈரான் பீடபூமியில் வாழ்ந்த மக்கள் பாரசீகர் ஆவர். பாரசீகப் பேரரசின் முதல் அரசர் *சைரஸ்*. *முதலாம் டேரையஸ்* பாரசீகப் பேரரசர்களில் மிகவும் சிறப்புப் பெற்றவர். இவர் இந்தியாவின் செழிப்பைப்பற்றிக் கேள்வியுற்று, அதனைத் தமது பேரரசுடன் இணைக்க விரும்பினார். இவர் நமது நாட்டின்மீது படையெடுத்துப் பஞ்சாப், சிந்து மாநிலங்களைத் தம்முடைய பேரரசுடன் இணைத்துக்கொண்டார். பாரசீகப் படையெடுப்பு நடக்கும்போது மகதத்தில் *பிம்பிசாரர்* என்ற மன்னர் ஆண்டு வந்தார். இணைக்கப்பட்ட பகுதி பாரசீகப் பேரரசின் 20ஆவது மாநிலமாக விளங்கியது. ஆனால், பாரசீகப் பேரரசின் மொத்த வரி வருமானத்தில் இம் மாநிலத்தின் பங்கு மூன்றில் ஒன்றாகும். இதிலிருந்து இந்தியா அக்காலத்திலேயே எவ்வளவு செல்வம் மிகுந்த நாடு என்பது உங்களுக்குப் புலப்படும்.

நமது நாட்டில் வெற்றி பெற்ற பாரசீகர்கள் கிரேக்க நாட்டைப் படையெடுத்தபோது, கிரேக்க நகர அரசுகளால் முறியடிக்கப்பட்டனர். இதன் விளைவாக இந்திய மாநிலத்தில் பாரசீகரின் பிடி தளர்ந்தது; பின்னர் அவர்கள் ஆட்சி மறைந்தது.

பாரசீகப் படையெடுப்பின் விளைவாக நமது நாட்டிற்கும் மேற்கு ஆசியாவிற்குமிடையே வாணிகம் வளர்ந்தது. பாரசீகர் ஆட்சிபுரிந்த வடமேற்கு இந்தியாவில் அவர்களது *காரோஷ்டி* எழுத்துகள் பழக்கத்தில் வந்தன. பாரசீகர்களைப் பின்பற்றி மௌரிய மன்னர்களும் தங்களது ஆணைகளைப் பாறைகளிலும், தூண்களிலும் பொறித்தனர்; நீண்ட சாலைகளை அமைத்தனர்; தூண்கள் நிரம்பிய கட்டடங்களைக் கட்டினர்.

## (ஆ) கிரேக்கப் படையெடுப்பு—மகா அலெக்சாந்தர்

கிரீஸ் நாட்டின் வடபகுதி *மாசிடோனியா* என்று அழைக்கப்படுகிறது. இப்பகுதியை ஆண்ட மன்னர் *இரண்டாம் பிலிப்* என்பவரின் மகன் *அலெக்சாந்தர்.* அலெக்சாந்தர் உலகப் புகழ்பெற்ற வீரர். இளமையிலேயே இவர் கூரிய அறிவு பெற்றுத் திகழ்ந்தார். பிற நாடுகளை வெற்றி கொள்ள வேண்டும் என்று பேரார்வம் கொண்டிருந்தார். தமது இருபதாம் வயதில் ஆட்சிப் பொறுப்பேற்றார். ஆட்சிப் பொறுப்பேற்றதும் தமது தந்தை தயாரித்து வைத்திருந்த சிறந்த படையின் உதவியால் பரந்து கிடந்த பாரசீகப் பேரரசை வென்றார். பின்னர் மத்திய ஆசியாவிலுள்ள பல பகுதிகளைத் தமது பேரரசுடன் இணைத்தார்.




படம் 6. மகா அலெக்சாந்தர்

வடமேற்கு இந்தியா பாரசீகப் பேரரசின் 20-வது மாநிலமாக இருந்தது அல்லவா? பாரசீகப் பேரரசை வென்று அதன் பேரரசர் ஆனதும், முன்பு பாரசீக மாநிலமாயிருந்த வடமேற்கு இந்தியாவைக் கைப்பற்ற கி.மு. 326-ல் வடமேற்குக் கணவாய்மூலம் ஒரு படையுடன் அலெக்சாந்தர் இந்தியாவினுள் நுழைந்தார்.

வடமேற்கு இந்தியாவிலிருந்த *தட்சசீல* அரசர் *அம்பி* என்பவர் அலெக்சாந்தருக்கு அடிபணிந்தார். அலெக்சாந்தருக்குப் பணிய மறுத்து அவரைத் தீரமுடன் எதிர்த்துப் போர் புரிந்த மன்னர் *போரஸ்* என்னும் *புருஷோத்தமர்* ஆவார். இவர் பஞ்சாபின் ஒரு பகுதியை ஆண்ட அரசர். *சீலம்* நதிக் கரையில் நடந்த போரில் அலெக்சாந்தர் அவரைத் தோற்கடித்தார். போரஸ் தோல்வியுற்றபோதும், அவரது வீரத்தைப் பாராட்டி அலெக்சாந்தர் தான் வென்ற நாட்டை அவரிடமே ஒப்படைத்தார். அலெக்சாந்தர் கங்கைச் சமவெளியில் இருந்த *நந்தப் பேரரசு* நாடுகளை வெல்ல விரும்பினார்.

அவருடைய போர் வீரர்கள் தம் நாட்டை விட்டு வந்து பல ஆண்டுகள் ஆனதால், அவர்களுக்கு வீட்டு ஏக்கம் அதிகமாயிற்று.

தொடர்ந்து போரில் ஈடுபட அவர்கள் ***பியாஸ்*** நதிக் கரையில் மறுத்து விட்டனர். எனவே, அலெக்சாந்தர் தம் நாட்டை நோக்கித் திரும்ப வேண்டியதாயிற்று. திரும்பிச் செல்லும் வழியில் பாபிலோன் நகரில் நோயினால் கி.மு. 323-ல் இறந்தார். இறக்கும்பொழுது அவருக்கு வயது 32. ஆட்சி செய்த சுமார் 13 ஆண்டுகளுக்குள் உலகின் பெரும் பகுதியை வென்ற பெருமை அலெக்சாந்தரைச் சாரும். அவரது பேரரசு மூன்று கண்டங்களில் பரவியிருந்தது.




படம் 7. வட இந்தியா—பாரசீக, கிரேக்கப் படையெடுப்புகள்

அலெக்சாந்தரின் படையெடுப்பால் ஐரோப்பிய நாடுகளுக்கும் இந்தியாவிற்குமிடையே வாணிகத் தொடர்பு வளர்ச்சியுற்றது. கிரேக்கக் கலை இந்திய கலாச்சாரத்தில் செல்வாக்கு பெற்றது. பாரசீக கிரேக்கப் படையெடுப்புகளினால் இந்திய மக்களுக்கு ஒரு விழிப்புணர்ச்சி ஏற்பட்டது. இந்தியர்கள் ஒற்றுமை உணர்ச்சியின் அவசியத்தை உணர்ந்தனர். அலெக்சாந்தர் படையெடுப்பு மௌரியப் பேரரசு அமைவதற்கு மறைமுகக் காரணமாக இருந்தது.

## வினாக்கள்

### I. கோடிட்ட இடங்களை நிரப்புக :

1. பாரசீகப் பேரரசை உருவாக்கியவர் ———.
2. இந்தியாவின்மீது படையெடுத்த பாரசீகப் பேரரசர்————.
3. அலெக்சாந்தருக்கு அடிபணிந்த இந்திய அரசர்————.
4. போரஸுக்கும் அலெக்சாந்தருக்கும் ———நதிக்கரையில் கடும் போர் நடந்தது

### II. சுருக்கமான விடையளிக்கவும் :

1. முதலாம் டேரையஸ் என்பவர் யார் ?
2. அலெக்சாந்தர் என்பவர் யார் ?
3. அலெக்சாந்தர் எப்போது இந்தியாவின்மீது படையெடுத்தார் ?
4. அலெக்சாந்தரை எதிர்த்துப் போர் புரிந்த இந்திய மன்னர் யார் ?
5. அப்போர் எங்கு நடந்தது ?

### III. விரிவான விடையளிக்கவும் :

1. இந்தியாவின்மீது நடந்த பாரசீகப் படையெடுப்பையும் அதன் விளைவுகளையும் விவரிக்கவும்.
2. அலெக்சாந்தரின் வெற்றிகளை விவரிக்கவும்.

## பயிற்சி

1. பாரசீக, கிரேக்கப் படையெடுப்புகளைப் படத்தில் குறிக்கவும்.
2. அலெக்சாந்தரும் புருஷோத்தமரும் சந்திப்பதை நாடகமாக அமைத்து நடிக்கவும்.

# 4. மௌரியப் பேரரசு

*(கி. மு 325 — 188)*

*முன்னுரை*

பண்டைக் காலத்தில் இந்தியா பல சிறு நாடுகளாகப் பிரிந்திருந்தது. வலிமை மிக்க மன்னர்கள் வட இந்தியாவில் பல பேரரசுகளை நிறுவினர். கங்கைச் சமவெளியில் நிறுவப்பட்ட பேரரசுகளில் முக்கியமானது *மௌரியப்* பேரரசாகும். மௌரியர்களுக்கு முன் மகத நாட்டை இரண்டு வம்சங்கள் ஆண்டு வந்தன. முதலாவதாக *சிசுநாக வம்ச* மன்னர்கள் ஆண்டு வந்தனர். அப்பொழுது மகதத்தின் தலைநகரம் *இராஜகிரகம்* ஆக இருந்தது. சிசுநாக வம்சத்தின் முக்கிய மன்னர்கள் *பிம்பிசாரர், அஜாத சத்ரு*. அவர்கள் காலத்தில்தான் சமண, புத்த சமயங்கள் தோன்றின. சிசுநாக வம்சத்திற்குப் பிறகு *நந்தவம்ச* மன்னர்கள் மகதத்தை ஆண்டு வந்தனர். அவர்கள் காலத்தில் *பாடலி புத்திரம்* மகதத்தின் தலைநகராக விளங்கியது. நந்த மன்னர்கள் அண்டை இராச்சியங்களை வென்று ஒரு பேரரசை நிறுவினர். இந்திய வரலாற்றில் முதன்முதல் தோன்றிய பேரரசு *நந்தப் பேரரசாகும்.*

நந்த அரசர்களில் கடைசி மன்னர் *தனநந்தர்*. அவர் ஒரு கொடுங்கோல் மன்னர். அவரது ஆட்சியை மக்கள் வெறுத்தனர். *சந்திரகுப்தர்* என்பவர் தனநந்தரை வென்று மகத நாட்டின் மன்னரானார்.

## *(அ) சந்திரகுப்த மௌரியர்* (கி.மு. 325 - 301)

சந்திரகுப்தர் தாம் நிறுவிய அரச வம்சத்திற்கு *மௌரிய வம்சம்* எனப் பெயரிட்டார். இவ்வாட்சியை அமைக்க அவருக்குத் துணையாக இருந்தவர் *கௌடில்யர்* என்னும் இராஜதந்திரி ஆவார். இவர் *சாணக்கியர்* என்றும் *விஷ்ணு கோபர்* என்றும் அழைக்கப்படுகிறார். நந்த அரசரை மகதத்திலிருந்து நீக்கியபின் பஞ்சாப், சிந்து மாநிலங்களில் இருந்த கிரேக்கப் படைகளைச் சந்திரகுப்தர் முறியடித்தார். அம் மாநிலங்களில் கிரேக்க ஆட்சி முடிவடைந்தது. சந்திர குப்தரின் வீரமும், சாணக்கியரின் மதியூகமும் மௌரியப் பேரரசை

உருவாக்க உதவின. தமக்கு உதவிய சாணக்கியரையே சந்திரகுப்தர் பிரதம அமைச்சராக்கிக் கொண்டார். சாணக்கியர் *அர்த்தசாத்திரம்* என்னும் நூலை எழுதினார். இது ஒரு சிறந்த அரசியல் நூல். அரசரது கடமைகள், அரசியல் முறைகள், அரசாங்கத் துறைகள் ஆகியவை பற்றி இந் நூல் தெளிவாக விளக்குகிறது.

மகா அலெக்சாந்தர் இறந்தபின் அவரது தளபதிகளில் ஒருவரான செலுகஸ் நிகேடர் இந்தியாவில் மீண்டும் கிரேக்க ஆட்சியை நிலை நிறுத்த முயன்றார். இழந்த பஞ்சாப் பகுதியை மீட்கும் பொருட்டு இந்தியாவின்மீது படையெடுத்தார். போரில் சந்திரகுப்தரே வெற்றி பெற்றார். இருவருக்குமிடையே சமாதான உடன்படிக்கை ஏற்பட்டது. அதன்படி வடமேற்கிலுள்ள *காபூல், காண்டகார், ஹீரட், பலுச்சிஸ்தான்* ஆகிய நிலப் பகுதிகள் சந்திரகுப்தருக்குக் கிடைத்தன. *மெகஸ்தனிஸ்* என்னும் கிரேக்கத் தூதர் சந்திரகுப்தரின் அவைக்கு அனுப்பப்பட்டார். மெகஸ்தனிஸ் எழுதிய *இண்டிகா* என்னும் நூல் அக்காலத்து அரசியல், சமூக, பொருளாதார வாழ்க்கையைப்பற்றி அறிய உதவுகிறது. வட இந்தியா முழுவதும் ஒரே பேரரசின்கீழ் வருவதற்கு வித்திட்டவர் சந்திர குப்தரே ஆவார். அவரது பேரரசு வடக்கே இமயமலை முதல் தெற்கே விந்திய மலை வரையிலும், மேற்கே ஆப்கானிஸ்தானம் முதல் கிழக்கே வங்காளம் வரையிலும் பரவியிருந்தது. சந்திரகுப்தரின் நிர்வாகம் சிறந்த முறையில் அமைந்திருந்தது. மத்திய அரசு வன்மை வாய்ந்ததாக இருந்தது. பேரரசு பல மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது.

மௌரியப் பேரரசின் தலைநகரம் பாடலிபுத்திரம். இது சோன் நதி கங்கை நதியுடன் கலக்குமிடத்தில் உள்ளது. தற்பொழுது இதன் பெயர் பாட்னா. மௌரிய ஆட்சியில் சிறந்து விளங்குவது நகராட்சி முறையேயாகும். முப்பது உறுப்பினர் கொண்ட நகராட்சி மன்றம் நகரத்தின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றிருந்தது. இது ஆறு குழுக்களாகப் பிரிந்து ஒவ்வொன்றும் ஒரு குறிப்பிட்ட பணியைக் கவனித்து வந்தது. கைத்தொழில், அயல்நாட்டினர் நலன், பிறப்பு இறப்புக் கணக்கு, வாணிகம், வரி வசூல், பொருள் உற்பத்தி ஆகிய துறைகளை அக் குழுக்கள் நிர்வகித்தன. விளைச்சலில் ஆறில் ஒரு பங்கு நிலவரியாக வசூலிக்கப் பட்டது. அரசரே நேரில் நீதி வழங்கினார். குற்றவாளிகள் கடுமை யாகத் தண்டிக்கப்பட்டனர். குடிமக்களின் நலனுக்காகப் பல பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மக்கள் அமைதியாக வாழ்ந்தனர். நாட்டின் நடப்பு நிகழ்ச்சிகளை மன்னர் அறிய ஒற்றர் படை ஒன்று அமைக்கப்

பட்டிருந்தது. மௌரிய ஆட்சிமுறை பல அமைப்புகளில் தற்கால அரசியல் முறையைப்போல அமைந்து இருந்தது.

## *(ஆ) அசோகர்* (கி. மு. 263 — 232)


சந்திரகுப்தருக்குப் பின் அவர் மைந்தர் *பிந்துசாரர்* அரசரானார். அவர் சுமார் 25 ஆண்டுகள் ஆட்சிபுரிந்தார். அவர் தக்காணத்தை, கலிங்கம் நீங்கலாக வென்று, மௌரியப் பேரரசுடன் இணைத்தார். அவருக்குப் பின் அவரது மகன் *அசோகர்* ஆட்சியில் அமர்ந்தார். உலக வரலாற்றில் அசோகர் சிறந்த அரசர்களில் ஒருவராகக் கருதப் படுகிறார்.



படம் 8. *அசோகர்*


தக்காணத்தில் கலிங்க நாடு ஒரு சுயேச்சை நாடாக இருந்தது. அதைத் தம் பேரரசுடன் இணைக்க அசோகர் கலிங்க நாட்டின்மீது படையெடுத்தார். போரில் அவரே வெற்றி பெற்றார். ஆனாலும், போரினால் விளைந்த துன்பங்களைக் கண்டு மனம் கலங்கினார். இப் போரே அவரது வாழ்க்கை நெறியை முற்றிலும் மாற்றியது. இனி போரே புரிவதில்லை என்று உறுதி பூண்டார். ஒரு மாபெரும் வெற்றிக்குப் பின் போரை வெறுத்து ஒதுக்கிய மாமன்னர் அசோகர் ஒருவரே. போர் முரசுக்குப் பதில் இனி நாடெங்கும் தர்ம முரசு ஒலிக்கவேண்டுமென்று கட்டளையிட்டார். புத்த சமயத்தைத் தழுவினார்.

தம் வாழ்நாள்களெல்லாம் புத்த தர்மத்தைப் பரப்புவதிலேயே கழித்தார். நாடெங்கும் பல கற்றூண்களை எழுப்பினார். புத்தரின் அருள் மொழிகளை அவற்றில் பொறித்து வைத்தார். மேலும், பாறைகளிலும் அவற்றைப் பொறித்தார். மக்களிடையே புத்த மதத்தைப் பரப்ப நாடெங்கும் அலுவலர்களை நியமித்தார். அவர்கள் *தர்ம மகா மாத்திரர்கள்* என்றழைக்கப்பட்டனர். வெளி நாடுகளில் புத்த சமயம் பரவ வகைசெய்து புத்த சமயத்தை உலக சமயமாக்கினார். தமது மைந்தர் *மகேந்திரனையும்*, மகள் *சங்கமித்திரையையும்* இலங்கைக்கு அனுப்பி




படம் 9. அசோகர் காலத்தில் மௌரியப் பேரரசு

புத்த சமயத்தைப் பரவச் செய்தார். அதே சமயம் இந்துக்களையும், சமண சமயத்தினரையும் சம நோக்குடன் போற்றும் பண்பு அசோகரிடம் இருந்தது. மக்களைத் தம்முடைய அருள் பாலிப்பால் காத்து நின்றார். "மக்கள் அனைவரும் என் குழந்தைகள்" என்று பொறிக்கப்பட்ட கல்வெட்டுச் சாசனம் ஒன்று அவருடைய கருணைக்குச் சான்றாக அமைந்துள்ளது. அசோகரது பேரரசு தமிழகம் நீங்கலாக இந்தியா முழுவதிலும் மட்டுமன்றி ஆப்கானிஸ்தானம், பலுச்சிஸ்தானிலும் பரவி யிருந்தது. அசோகர் நாட்டு மக்களுக்குப் பல நற்பணிகளைச் செய்தார். நாடெங்கும் சிறந்த சாலைகளை அமைத்தார். நிழல் தரும் நன்மரங் களை நட்டார். கிணறுகள் தோண்டி குடிநீர் வசதி செய்தார். அறச் சாலைகள் பலவற்றை அமைத்தார். மக்களுக்கு மட்டுமன்றி விலங்கு களுக்கும் பல மருத்துவமனைகளை அமைத்தார். உணவுக்காக உயிர்க் கொலை செய்வதைச் சட்டமியற்றித் தடுத்தார். குளங்கள், கால்வாய்கள் வெட்டச் செய்து உழவுத் தொழில் வளர்ச்சிக்கு உதவினார். பல கல்விக் கூடங்களை நிறுவினார். அவர் காலத் தில் தட்சசீலத்தில் ஒரு பல்கலைச் கழகம் சிறந்து விளங்கியது.




படம் 10. சாரநாத் சிம்மத் தூண்

அன்பையும், அகிம்சை நெறியையும் அவரது ஆட்சி முறையின் அடிப்படை அம்சங்களாகக் கொண்டார். மக்கள் அவருக்கு 'இராஜ ரிஷி', 'பிரியதரிசி', 'தேவனாம்பிரியர்' என்னும் சிறப்புப் பெயர்களை வழங்கினர். அவரது தர்ம சக்கரமே நமது தேசியக் கொடியில் பொறிக்கப்பட்டுள்ளது.

அசோகர் காலத்துக் கற்றூண்கள் மௌரியக் கலைக்குச் சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குகின்றன. இத் தூண் கள் டில்லி, அலகாபாத், சாரநாத் முதலிய இடங்களில் காணப்படுகின்றன. சாரநாத் கற்றூண் முகப்பு அழகிற்கும் கம்பீரத்திற்கும் புகழ் பெற்றது. அத் தூணின் மீது காணப்படும் வடிவமே இன்றைய நம் இந்திய அரசின் தேசியச் சின்னமாக அமைந்துள்ளது.

அசோகர் நிறுவிய ஸ்தூபிகளைச் சுற்றிலும் சிற்ப வேலைப் பாடமைந்த சுற்று வேலிகள் இடப்பட்டுள்ளன. ஸ்தூபி என்பது வட்ட வடிவமுள்ள அழகிய கட்டடம். அதனுள் புத்தரின் புனிதச் சின்னங்கள் புதைக்கப்பட்டன. *சாஞ்சியிலுள்ள* ஸ்தூபி புகழ் வாய்ந்ததாகும். இது மத்தியப் பிரதேசத்தில் போபாலுக்கு அருகில் உள்ளது. அசோகர் காலத்தில் அமைக்கப்பட்ட *பராபர் குகைகளே* நம் நாட்டில் தோன்றிய முதல் குகைக் குடைவுகளாகும். பிற்காலக் குகைக் கோவில்களுக்கு இவையே அடிகோலின.



படம் 11. சாஞ்சி ஸ்தூபி

அசோகரின் ஆட்சிக்குப் பின் மௌரியப் பேரரசு வலிமை குன்றியது. அவருக்குப் பின் வந்த அரசர்கள் திறமையற்றவர்கள். அவர்களால் நெடுந்தூரத்து மூலையிலிருந்த தலைநகரத்திலிருந்து பரந்த பேரரசை ஆள முடியவில்லை. புத்த மதத்தின் அஹிம்சைக் கொள்கை மக்களைப் போரில் ஈடுபடுத்தத் தடையாக இருந்தது. இத் தகைய காரணங்களால் மௌரியப் பேரரசு மங்கி, மறைந்தது. மௌரிய ஆட்சிக்குப்பின் சுங்க வமிசத்தினர் ஆட்சிக்கு வந்தனர்.

### *வினாக்கள்*

**I. *கோடிட்ட இடங்களை நிரப்புக :***

1. சாணக்கியர் எழுதிய நூல் ———————— ஆகும்.
2. மெகஸ்தனிஸ் எழுதிய நூல் ———————— எனப்படும்.
3. மௌரியப் பேரரசின் தலைநகரம் ———————— ஆகும்.

4. —————— போரே அசோகர் மேற்கொண்ட முதற்போரும் கடைசிப் போரும் ஆகும்.

5. ———— ——— கற்றூண்மீது காணப்படும் வடிவமே இந்திய அரசின் தேசியச் சின்னமாக அமைந்துள்ளது.

II. பின்வரும் உட்பிரிவுகளுள் எது மிகவும் பொருத்தமான விடை என்று கூறுக :

சந்திரகுப்த மௌரியரை எதிர்த்துப் போரிட்ட கிரேக்கத் தளபதி,

(அ) அலெக்சாந்தர்

(ஆ) செலுகஸ் நிகேடர்

(இ) மெகஸ்தனிஸ்

(ஈ) இரண்டாவது பிலிப்

III. சுருக்கமாக விடையளிக்கவும் :

1. சந்திரகுப்தரின் முதல் அமைச்சர் யார் ?

2 அசோகரின் வாழ்வில் கலிங்கப் போர் எவ்வாறு ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியது ?

3. அசோகர் மக்களுக்குச் செய்த நன்மைகள் யாவை ?

4. மக்களிடையே புத்த மதத்தைப் பரப்ப அரசரால் நியமிக்கப்பட்ட அலுவலர்கள் யாவர் ?

5. மௌரியப் பேரரசின் வீழ்ச்சிக்குக் காரணங்கள் யாவை ?

IV. விரிவான விடையளிக்கவும் :

1. மௌரியர் கால நகராட்சி முறையை விவரித்துக் கூறுக.

2. மௌரிய காலத்துச் சிற்பக்கலை, கட்டடக் கலைகளின் சிறப்புகளைக் கூறுக.

### பயிற்சி

1. இந்திய தேசப் படத்தில் அசோகர் பேரரசின் பரப்பு, பாடலிபுத்திரம், சாஞ்சி, கலிங்கம் ஆகியவற்றைக் குறிப்பிடுக.

2. அசோகர் நிறுவிய ஸ்தூபிகள், கட்டடங்கள் முதலியவற்றின் படங்களைச் சேகரித்து உனது படப் புத்தகத்தில் ஒட்டி வைக்கவும்.

3. கலிங்கப் போர் அசோகரின் வாழ்வை எவ்வாறு மாற்றியதென்பதை நாடகமாக நடித்துக் காட்டுக.

# 5. குஷானர்கள்


*முன்னுரை*

கி. பி. முதல் நூற்றாண்டில் *யூச்சி* என்ற நாடோடிக் கூட்டத்தினர் இந்தியாவின்மீது படையெடுத்தனர். இவர்கள் மத்திய ஆசியாவிலிருந்து மங்கோலியர்களால் துரத்தப்பட்டவர்கள். வடமேற்குக் கணவாய்கள் வழியாக இவர்கள் இந்தியாவில் நுழைந்தனர். இந்தியாவின் வடமேற்கில் வலிமை வாய்ந்த பேரரசினை அமைத்தனர். யூச்சி வழிவந்த கூட்டத்தினரின் ஒரு பிரிவினரே *குஷான வமிசத்தினராவர்*. அவ் வமிசத்தைச் சேர்ந்த *முதலாம் காட்பீஸஸ்* என்பவர் குஷான அரசைத் தோற்றுவித்தார். அவருக்குப் பின் ஆண்ட *இரண்டாம் காட்பீஸஸ்* சிந்து, யமுனை, கங்கைச் சமவெளி நாடுகளை வென்றார். குஷான மன்னர்களில் *கனிஷ்கர்* என்பவரே சிறந்தவராகக் கருதப்படுகிறார்.

## *(அ) கனிஷ்கர்* (கி.பி. 78 — 120)

கனிஷ்கர் ஒரு சிறந்த போர் வீரர். அவர் காஷ்மீரத்தை வென்றார். சீனாவின்மீது படையெடுத்து வெற்றி கண்டார். அவ்வெற்றியின் விளைவாக மத்திய ஆசியப் பகுதியிலிருந்த *காஷ்கர், யார்கண்டு, கோட்டான்* ஆகிய நாடுகளைப் பெற்றார். அவரது பேரரசு வடக்கே மத்திய ஆசியாவிலிருந்து தெற்கே நர்மதையாறு வரையிலும், மேற்கே காஸ்பியன் கடலிலிருந்து கிழக்கே கங்கைச் சமவெளி வரையிலும் பரவியிருந்தது. அவரது தலை நகரம் *பெஷாவர்* அல்லது *புருஷபுரம்* ஆகும்.

அசோகரைப்போலவே இவரும் புத்த சமயத்தைப் பரவச் செய்தார். எனவே, இவரை 'இரண்டாம் அசோகர்' என்று கூறுவர். இவர் காலத்தில் புத்த சமயத்தில் சில மாறுதல்கள் ஏற்பட்டன. புதிய புத்த சமயம் *மகாயானம்* என்று அழைக்கப்பட்டது. பழைய புத்த சமயம் *ஹீனயானம்* என்று அழைக்கப்பட்டது. மகாயான முறைப்படி புத்தர் கடவுளாகக் கருதப்பட்டார்; மக்கள் அவருக்கு வழிபாடு செய்தனர். புத்தக் கடவுளுக்குக் கோயில்கள் கட்டப்பட்டன. புத்தருக்குச் சிலைகள் அமைக்கப்பட்டன. புத்த மகான்கள் *போதிசத்துவர்* என்று அழைக்கப்பட்டனர். அவர்களும் வணங்கப்பட்டனர். புத்தர், போதி சத்துவர் ஆகியோரின் சிலைகள் ஒரு புதிய கலைப்பாணியில் அமைக்கப்பட்டன. இக் கலை *காந்தாரக் கலை* என அழைக்கப்படுகிறது. கிரேக்க




படம் 12. கனிஷ்கரது பேரரசு

நாட்டுச் சிற்பக் கலையும், இந்திய சிற்பக் கலையும் இணைந்ததுதான் காந்தாரக் கலையாகும். இக் கலையின் சிற்பங்கள் ஆப்கானிஸ்தானத்தின் ஒரு பகுதியும், பஞ்சாப்பின் வடமேற்குப் பகுதியும் சேர்ந்த *காந்தாரம்* என்னுமிடத்தில் காணப்பட்டதால் அதற்கு அப் பெயர் வந்தது. இந்தப் பகுதியில் தான் அநேக புத்த உருவங்கள் கல்லில் அழகாக செதுக்கப்பட்டன. புத்தர் தலையைச் சுற்றிலும் ஞான ஒளியும், அணிந்துள்ள ஆடையின் மடிப்புகளும் சிற்பிகளால் அழகாக வடிக்கப்பட்டிருந்தன. மகாயானம் தோன்றியதன் விளைவாகவே காந்தாரக் கலை தோன்றியது.



படம் 13.
காந்தாரக்கலை

கனிஷ்கர் கல்விமான்களை ஆதரித்தார். *நாகார்சுனர், அசுவகோசர், வசுமித்திரர்* போன்ற புலவர்கள் அவர் அவையில் இருந்தனர். அசுவகோசர் *புத்த சரிதம், நந்த காவியம்* ஆகிய நூல்களையும், வசுமித்திரர், *மகாவி பாஷா* என்னும் நூலையும் எழுதினார்கள். மேலும் *சரகர், சுசுருதர்* ஆகிய மருத்துவ வல்லுநர்களும் கனிஷ்கர் அவையை அலங்கரித்தனர்.

கனிஷ்கருக்குப் பின்னர் குஷானர்களின் வலிமை குன்றத் தொடங்கியது. இவருக்குப் பின் வந்த மன்னர்கள் திறமையில்லாதவர்கள். கி. பி. 167ஆம் ஆண்டில் இந்தியாவின் வடமேற்கு நாடுகளில் பெரும் கொள்ளை நோய் ஒன்று தோன்றி ஏராளமான உயிர்களைப் பலி கொண்டது. இதன் விளைவாக இந்தியாவின் வடமேற்குப் பகுதியிலும் பரவியிருந்த குஷானப் பேரரசு பெரிதும் பாதிக்கப்பட்டது. மேலும், *சஸ்ஸேனியர்* என்ற இனத்தவர் குஷானப் பேரரசின் பல பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டனர். எனவே குஷானப் பேரரசு மறைவுற்றது.

## *வினாக்கள்*

**I. *கோடிட்ட இடங்களை நிரப்புக :***

1. *குஷான மன்னர்களில் சிறந்தவர் ——— ஆவார்.*
2. *கனிஷ்கரின் தலைநகரம் ——— ஆகும்.*

3. கனிஷ்கர் காலத்தில் புத்த சமய மகான்கள் ——— என்று அழைக்கப்பட்டனர்.

4. கனிஷ்கர் காலத்தில் ——— கலை உருவாயிற்று.

II. சுருக்கமான விடையளிக்கவும் :

1. கனிஷ்கர் காலத்தில் புத்த சமயத்தில் ஏற்பட்ட மாறுதல்கள் யாது ?

2. 'காந்தாரக் கலை' என்பதின் பொருள் யாது ?

3. கனிஷ்கர் அவையிலிருந்த அறிஞர்கள் யாவர் ?

III. விரிவான விடையளிக்கவும் :

1. மகாயான புத்த சமயத்தை விளக்குக.

2. காந்தாரச் சிற்பக் கலையைப் பற்றி விவரிக்கவும்.

பயிற்சி

1. இந்திய தேசப் படத்தில் கனிஷ்கரது பேரரசின் பரப்பினைக் குறிப்பிடுக.

2. காந்தாரக் கலையைச் சார்ந்த சிற்பங்களின் படங்களைச் சேகரித்து உன் படப்புத்தகத்தில் ஒட்டுக.

# 6. குப்தர்கள்

*(கி. பி. 300 – 500)*

## *முன்னுரை*

குஷானப் பேரரசு மறைந்த பின்னர் வட இந்தியாவில் குழப்பம் மேலிட்டது. பல இராச்சியங்கள் சுயேச்சையடைந்தன. சாகர்கள் மாளவம், குஜராத் ஆகியவற்றை ஆண்டனர். வலிமை வாய்ந்த பேரரசு எதுவும் ஏற்படவில்லை. கி.பி. நான்காம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் மகத நாட்டில் குப்த வம்சத்தினர் ஆட்சி புரியலாயினர். குப்த அரசர்கள் தலை சிறந்த மன்னர்கள். அவர்கள் ஒரு பேரரசை வட இந்தியாவில் நிறுவியதுமல்லாமல், கலை, இலக்கியம், அறிவியல் ஆகியவற்றிற்கு சிறந்த தொண்டு செய்தனர். பழங்கால இந்தியாவில் குப்தர்கள் காலம் ஒரு பொற்காலமாகக் கருதப்படுகிறது. இந்த குப்தர்களையும் அவர்களது சாதனைகளையும் பற்றி இப்பாடத்தில் படிப்போம்.

### *(அ) முக்கிய மன்னர்கள்*

**1.** ***ஸ்ரீகுப்தர்*** என்பவர் குப்த வம்சத்தை மகத நாட்டில் தோற்றுவித்தார்.

***2. முதலாம் சந்திரகுப்தர் (கி.பி. 320 - 335):*** ஸ்ரீகுப்தரின் பேரரான *முதலாம் சந்திரகுப்தர்* கி.பி. 320 ஆம் ஆண்டில் மகதத்தின் அரசரானார். அவர் *லிச்சாவி* வமிசத்தைச் சேர்ந்த *குமாரதேவி* என்னும் இளவரசியை மணந்தார். லிச்சாவி வமிசத்தின் உதவி பெற்று தற்போதுள்ள பீகார், உத்திரப் பிரதேசம், வங்காளம் ஆகிய பகுதிகளை வென்றார். இவரது காலம் முதற் கொண்டே குப்த இராச்சியம் ஓர் உண்மையான பேரரசாகத் திகழ்ந்தது. இவர் பாடலிபுத்திரத்தை தலைநகரமாகக் கொண்டு ஆண்டு வந்தார்.

***3. சமுத்திரகுப்தர் (கி.பி. 335 - 380):*** முதலாம் சந்திர குப்தருக்குப் பின் அவரது மகன் சமுத்திரகுப்தர் பட்டத்திற்கு வந்தார். இவர் போர்த் திறமை மிக்கவர். வட இந்தியாவின் பெரும் பகுதியை


வென்று தமது நேராட்சியின் கீழ் கொண்டுவந்தார். தென்னிந்தியாவின் மீதும் படையெடுத்து பல வெற்றிகளைப் பெற்றார். ஆனால் நாடுகளை தம்முடைய பேரரசில் இணைக்கவில்லை. தோல்வி அடைந்த மன்னர் களிடமே அவற்றை திருப்பிக் கொடுத்து விட்டார். தமது வெற்றிகளின் அறிகுறியாக அவர் 'அசுவ மேத யாகம்' ஒன்றை நடத்தினார்.



படம் 14.
*சமுத்திரகுப்தர் நாணயம்*

அவர் வெற்றி வீரர் மட்டுமின்றி சிறந்த அறிஞராகவும் விளங்கினார். இசைக் கலையில் ஆர்வம் கொண்டிருந்தார். இவர் வெளியிட்ட நாணயங்களில் ஒன்றில் இவர் வீணை வாசிப்பது போன்ற உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. சமுத்திர குப்தர் இந்து சமயத்தில் பற்று உடையவராக இருந்தபோதிலும், இலங்கை மன்னர் *மேகவர்ணனுக்கு* கயாவில் ஒரு புத்த மடம் கட்ட அனுமதி கொடுத்தார். இது அவருடைய சமய சகிப்புத் தன்மையை விளக்குகிறது.

***4. இரண்டாம் சந்திரகுப்தர் (கி.பி. 380 - 415):*** சமுத்திர குப்தருக்குப் பின் அவரது மகன் இரண்டாம் சந்திர குப்தர் அரசரானார். தம் முன்னோர்களைப் போலவே வீரத்தில் சிறந்து விளங்கினார். வீரத்தில் சூரியனுக்கு ஒப்பானவர் எனப் பொருள்படும் ***விக்கிரமாதித்தர்*** என்ற விருதுப் பெயர் பெற்றார். சாகர்களை வென்று மாளவத்தையும், கூர்ஜரத்தையும் தமது பேரரசுடன் இணைத்துக் கொண்டார். சாகர்களை வென்றதால் *சாகாரி* என அழைக்கப்பட்டார். இவரது பேரரசு வடக்கில் இமயமலை முதல் தெற்கில் விந்திய மலை, நர்மதை நதி வரையிலும் மேற்கில் யமுனை, சம்பல் நதிகள் முதல் கிழக்கில் பிரம்மபுத்திரா வரையிலும் பரவியிருந்தது. *உஜ்ஜயினி* இவரது பேரரசின் இரண்டாவது தலைநகரமாய் விளங்கியது. இவர் சிறந்த கல்விமான். புலவர் பலரை ஆதரித்தார். இவரது அவையில் ***நவரத்தினங்கள்*** என்று சொல்லப்படும் ஒன்பது கவிஞர்கள் இருந்தனர். அவர்களில் ***காளிதாசர்*** தலைசிறந்தவராவார். இரண்டாம் சந்திரகுப்தர் காலத்தில் ***பாஹியான்*** என்ற சீன யாத்திரிகர் புத்த புனித ஸ்தலங்களைத் தரிசிக்கவும், புத்த புனித நூல்களைத் திரட்டவும் இந்தியா வந்தார். இவர் குப்தப் பேரரசில் ஆறு ஆண்டுகள் தங்கியிருந்தார். பாஹியான் எழுதி வைத்திருக்கும் குறிப்புகள் குப்தர்கால ஆட்சிச் சிறப்பை அறிந்து கொள்ள பெரிதும் உதவியாக உள்ளன.




படம் 16. குப்தப் பேரரசு


விக்கிரமாதித்தியருக்குப் பின்னர் வந்த மன்னர்கள் திறமை யற்றவர்கள். *ஹூணர்கள்* என்ற முரட்டுக் கூட்டத்தினர் இந்தியா வின் மீது படையெடுத்து குப்தர்கள் ஆட்சியை வீழ்த்தினர்.

## (ஆ) குப்தர் காலத்துப் பெருமை

குப்தரது ஆட்சிக் காலம் பழங்கால இந்திய வரலாற்றில் பொற் காலம் என்று போற்றப்படுகிறது. குப்தப் பேரரசர்களின் ஆட்சிக் காலத்தில் மக்களின் வாழ்க்கை செழிப்புற்றிருந்தது. நாட்டில் அமைதி நிலவியது. மக்கள் அச்சமின்றி வாழ்ந்தனர். தாம் குப்தப் பேரரசில் சுற்றுப் பிரயாணம் செய்த போது ஒரு தடவை கூட திருடர்கள் தம்மைத் தாக்கவில்லை என்று பாஹியான் கூறியுள்ளார். உள் நாட்டு, வெளி நாட்டு வாணிகங்களால் நாட்டில் செல்வம் பெருகியது. கைத்தொழில்கள் வளர்ச்சியுற்றன. வறுமை, நோய் முதலிய துன்பங்கள் மக்களை வருத்தாதபடி மன்னர்கள் பாதுகாத்தனர். குப்தர் காலத்தில் இந்து சமயம் மறுமலர்ச்சி பெற்று விளங்கியது. பல கோயில்கள் கட்டப்பட்டன. 'பாகவத புராணம்', 'விஷ்ணு புராணம்' போன்ற பதினெட்டுப் புராணங்கள் இக்காலத்தில் இயற்றப்பட்டன. குப்தரது ஆட்சிக்காலத்தில் வட மொழி இலக்கியம் புத்துணர்ச்சி பெற்றது. உலகப் புகழ் பெற்ற மகா கவியான *காளிதாசர் சாகுந்தலம், மாளவிகாக்கினி மித்திரம்*, *விக்கிரம ஊர்வசியம்* முதலிய நாடகங்களையும், *இரகுவம்சம், குமார சம்பவம்* முதலிய காவியங்களையும், *மேகதூதம், ரிது சம்ஹாரம்* என்ற கவிதைகளையும் இயற்றினார். *மிருச்சகடிகம்* என்னும் நாடகத்தை இயற்றிய *சூத்திரகரும், முத்திரா ராட்சசம்* என்னும் நாடகத்தை இயற்றிய *விசாகதத்தரும், கிராத அர்ஜுன்யா* என்னும் நூலை எழுதிய *பாரவியும்* இக்காலத்தில் வாழ்ந்த கவிஞர்களாவர். சோதிட நூல்களும், வான நூல் சாத்திரமும், மருத்துவமும் உயர் நிலை அடைந்தன. *ஆரிய பட்டர்* எழுதிய வான நூல், *வராகமிகிரர்* எழுதிய சோதிட நூல், *தன்வந்திரி* இயற்றிய மருத்துவ நூல் ஆகியவை மிகச் சிறந்த நூல்களாகும். *பஞ்சதந்திரம்* என்னும் புகழ் பெற்ற நீதி நூல் இக்காலத்தில் எழுதப்பட்டது. *அமரசிம்மர்* வட மொழியில் ஒப்பற்ற அகராதி ஒன்றைத் தொகுத்தார். *நாலந்தா* பல்கலைக் கழகம் குப்தர் காலத்தில் தோற்றுவிக்கப்பட்டது. குப்தர்கள் காலத்தில் சிற்பக் கலை சிறந் தோங்கியிருந்தது. தியோகரில் உள்ள தசாவதாரக் கோயிலும்,

*பித்தர் காவனில்* உள்ள செங்கற் கோயிலும் கட்டடக் கலையின் சிறப்பிற்கு எடுத்துக்காட்டாகும்.

டில்லியிலுள்ள இரும்புத் தூண் குப்தர்களால் அமைக்கப்பட்டது. பல நூற்றாண்டுகளாகியும் இது இன்னும் துருப்பிடிக்காது பளபளப்பாக விளங்குகின்றது. இத் தூண் குப்தர் காலத்து உலோகக் கலையின் சிறப்பிற்கு ஓர் எடுத்துக்காட்டாகும். நாலந்தா பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டுள்ள 24 மீட்டர் உயரமுள்ள புத்தரின் செம்புச் சிலை குப்தர்கள் காலத்துக் கலைத் திறனை விளக்குகின்றது.



*படம் 16. டில்லி இரும்புத் தூண்*



*படம் 17. அஜந்தா ஓவியம்*

அஜந்தா குகைகளில் தீட்டப்பட்டுள்ள அழகிய வண்ண ஓவியங்கள் குப்தர் காலத்தில் வரையப்பட்டனவாகும். குப்த மன்னர்கள் மிகச் சிறந்த நாணயங்களை வெளியிட்டனர். அவற்றில் சமுத்திர குப்தரின் இலக்குமி உருவம் பொறித்த நாணயங்கள் குறிப்பிடத் தக்கவை. இவ்வாறு ஒவ்வொரு துறையிலும் குப்தர்கள் ஆட்சி சிறந்து விளங்கியதால் குப்தர்களின் காலம் ***பழங்கால இந்தியாவின் பொற்காலம்*** எனப் போற்றப்படுகிறது.

## வினாக்கள்

### I. கோடிட்ட இடங்களை நிரப்புக :

1. முதலாம் சந்திரகுப்தர் ———— மரபினருடன் திருமண உறவு கொண்டு தனது செல்வாக்கைப் பெருக்கிக் கொண்டார்.
2. இரண்டாம் சந்திரகுப்தரின் வீரத்தின் காரணமாக அவர் பெற்ற சிறப்புப் பெயர் ———— என்பதாகும்.
3. குப்தப் பேரவையை அணி செய்த அறிஞர்கள் ———— என்று அழைக்கப்பட்டனர்.
4. குப்தர் கால ஓவியங்கள் ———— வில் காணப்படுகின்றன.
5. ———— என்பவர் சிறந்த வான நூலை இயற்றினார்.

### II. சுருக்கமான விடையளிக்கவும் :

1. குப்தப் பேரரசின் சிறந்த மூன்று பேரரசர்கள் யாவர் ?
2. சமுத்திரகுப்தரின் வெற்றிகளைக் குறிப்பிடுக.
3. இரண்டாம் சந்திரகுப்தரின் சிறப்புப் பெயர்கள் யாவை ?
4. காளிதாசர் இயற்றிய நூல்கள் சிலவற்றின் பெயர்களைக் கூறுக.
5. பாஹியான் என்பவர் யார் ? அவர் எதற்காக இந்தியா வந்தார் ?

### III. விரிவான விடையளிக்கவும் :

குப்தர்களின் ஆட்சிக் காலம் 'பழங்கால இந்தியாவின் பொற்காலம்' எனப் போற்றப்படுவதேன் ?

## பயிற்சி

1. இந்தியப் படத்தில் குப்தப் பேரரசின் பரப்பினைக் குறிப்பிடுக.
2. குப்தர் காலச் சிற்பக் கலையை விளக்கும் படங்களைச் சேகரித்து படப் புத்தகத்தில் ஒட்டவும்.
3. அஜந்தா ஓவியங்களின் மாதிரிகளைச் சேகரிக்கவும்.

# 7. ஹர்ஷர் - மகா பல்லவர்கள்


*(கி. பி. ஏழாவது நூற்றாண்டு)*

## *(அ) ஹர்ஷவர்த்தனர் (கி. பி. 606 – 647)*

*முன்னுரை*

குப்தப் பேரரசு வீழ்ச்சியுற்றபின் வட இந்தியாவில் பல சிற்றரசுகள் தோன்றின. கி. பி. ஏழாம் நூற்றாண்டில் டில்லிக்கு அருகிலுள்ள *தானேஸ்வரம்* என்னுமிடத்தில் ஒரு புதிய அரசு நிறுவப் பட்டது. இவ்வரசை நிறுவியவர் *பிரபாகரவர்த்தனர்* என்பவா. அவருக்கு *இராச்சியவர்த்தனர், ஹர்ஷவர்த்தனர்* என்ற இரு புதல்வர்களும், *இராச்சியஸ்ரீ* என்ற புதல்வியும் இருந்தனர். இராச்சியஸ்ரீயைக் கன்னோசி மன்னரான *கிரகவர்மருக்கு* மணம் செய்து கொடுத்தார். பிரபாகரவர்த்தனருக்குப்பின் இராச்சியவர்த்தனர் அரசரானார். அச்சமயத்தில் மாளவ மன்னராகிய *தேவ குப்தர்* கன்னோசி மீது படையெடுத்தார். கிரகவர்மரைக் கொன்று விட்டு இராச்சியஸ்ரீயைச் சிறைப்படுத்தினார். இதனையறிந்த இராச்சியவர்த்தனர் மாளவ மன்னருடன் போர் தொடுத்து அவரைத் தோற்கடித்தார். வெற்றி பெற்றுத் திரும்புகையில் வங்காள மன்னரால் வஞ்சகமாகக் கொல்லப் பட்டார். இராச்சியஸ்ரீ சிறையிலிருந்து தப்பி விந்திய மலைக் காடுகளில் ஒளிந்து கொண்டார்.

**1.** *ஹர்ஷரின் வெற்றிகள்:* இராச்சியவர்த்தனருக்குக் குழந்தை இல்லாததால் ஹர்ஷவர்த்தனர் தானேஸ்வரத்தில் அரசுப் பொறுப்பை கி.பி. 606-ல் ஏற்றார். அப்பொழுது அவருக்கு வயது பதினாறு. முதலில் அவர் தம் சகோதரியைத் தேடிச் சென்றார். தீயில் விழுந்து இறக்கப் போகும் தறுவாயில் அவரைக் காப்பாற்றி அழைத்து வந்தார். தமது சகோதரியின் விருப்பப்படியும், கன்னோசி மக்களின் விருப்பப்படியும் கன்னோசிக்கும் மன்னரானார். கன்னோசியைத் தமது தலைநகராக்கிக் கொண்டார். பின்னர் மாளவம், கூர்ஜரம், சௌராஷ்டிரம், வங்காளம் ஆகிய பகுதிகளை வென்றார். வட இந்தியா முழுவதிலும் தம் ஆதிக்கத்தை நிலை நாட்டினார்.




படம் 18. ஹர்ஷர் பேரரசு

கி.பி. 620-ல் தக்காணத்தின் மீது படையெடுத்தார். அப்பொழுது சாளுக்கிய மன்னரான *இரண்டாம் புலிகேசி வாதாபியைத்* தலை நகராகக் கொண்டு தக்காணத்தை ஆண்டு வந்தார். நர்மதை ஆற்றங்கரையில் அவர் ஹர்ஷரைத் தோற்கடித்தார். இந்தத் தோல்விக்குப் பின் ஹர்ஷர் தமது பேரரசை மேலும் விரிவுபடுத்தும் எண்ணத்தைக் கைவிட்டார். நர்மதை ஆறு ஹர்ஷர் பேரரசின் தெற்கு எல்லையாயிற்று.

2. *ஹர்ஷரும் புத்த சமயமும் :* தொடக்கத்தில் இந்துவாக ஹர்ஷர் இருந்தார். பின்னர் அவர் புத்த சமயத்தைப் பின்பற்றினார். ஆனால் பிற சமயத்தினரிடமும் அன்பு காட்டினார். சமய சகிப்புத் தன்மை நமது நாட்டு மன்னர்கள், மக்களின் பாரம்பரியச் செல்வம். கி. பி. 643-ல் *கன்னோசியில்* ஒரு பெரிய புத்த சமய மாநாட்டைக் கூட்டினார். ஐந்து ஆண்டு கட்கு ஒரு முறை *பிரயாகையில்* பெரிய விழா ஒன்றை நடத்தினார். அவ் விழா விற்கு சிறந்த அறிஞர்களையும், சமயத் தலைவர்களையும் அழைத்தார். ஹர்ஷர் தம் செல்வத்தை ஏழை, எளியவர்களுக் கெல்லாம் வாரி வழங்கினார். ஹர்ஷரு டைய ஆட்சிக் காலத்தில் *யுவான் சுவாங்* என்னும் சீன யாத்திரிகர் இந்தி யாவிற்கு வந்தார். புத்தத் திருத் தலங் களைக் காணவும், புத்த நூல்களையும், புனிதச் சின்னங்களையும் சேகரிக்கவுமே அவர் இங்கு வந்தார். அவர் எழுதிய *சியூக்கி* என்னும் நூல் ஹர்ஷரின் ஆட்சி முறையை அறிந்துகொள்ள உதவுகின்றது.




படம் 19. யுவான் சுவாங்

3. *ஹர்ஷரின் ஆட்சி முறை :* ஹர்ஷர் அரசியல் துறை யிலும் திறமை பெற்றுத் திகழ்ந்தார். மக்களின் நலனில் பெரிதும் அக்கறை கொண்டார். நாடு முழுவதும் சுற்றுப் பயணம் செய்து மக்களின் குறைகளை நேரில் கண்டறிந்தார். நல்லாட்சி நடைபெற வழி செய்தார். நிலத்தின் மொத்த விளைச்சலில் ஆறில் ஒரு பங்கை வரியாகப் பெற்றார். அற நிலையங்கள் பல அமைக்கப்பட்டன.

4. *இலக்கியம், கல்வி :* ஹர்ஷர் ஒரு சிறந்த கல்வியாளர். வட மொழி இலக்கியம் அவரது ஆட்சியில் வளர்ச்சியடைந்தது. அவர்

வடமொழியில் ***நாகானந்தம், இரத்தினாவளி, பிரியதர்சிகா*** என்னும் நூல்களை எழுதியுள்ளார். அவருடைய அவைப் புலவரான ***பாணர் ஹர்ஷ சரிதம், காதம்பரி*** என்னும் நூல்களை இயற்றினார்.



படம் 20. நாலந்தாப் பல்கலைக் கழகம்


குப்தர்களால் நிறுவப்பட்ட நாலந்தா பல்கலைக் கழகம் ஹர்ஷர் காலத்தில் சிறப்புற்று விளங்கியது. தலை சிறந்த பன்னாட்டுப் பல்கலைக் கழகமாகத் திகழ்ந்தது. இங்கு சுமார் 1,500 ஆசிரியர்களும், 10,000 மாணவர்களும் தங்கிக் கல்வி கற்றனர். ஹர்ஷர் கி.பி. 647-ல் காலமானார். அவரது மறைவுக்கு பின் அவருடைய பேரரசு வீழ்ச்சியடைந்தது.

## (ஆ) மகாபல்லவர்கள்

**(கி. பி. 3ஆம் நூற்றாண்டு முதல் 7ஆம் நூற்றாண்டு வரை)**


### *முன்னுரை*

காஞ்சியைத் தலை நகராகக் கொண்டு தொண்டை மண்டலத்தை கி.பி. 3 ஆவது நூற்றாண்டு முதல் 7 ஆவது நூற்றாண்டு வரை ***பல்லவர்கள்*** ஆண்டு வந்தார்கள். அவர்களுள் தலை சிறந்த மன்னர்கள் ***மகா பல்லவர்கள்*** என்று அழைக்கப்படுகின்றனர். இவர்களும் ஹர்ஷரும் சம காலத்தவர்கள். இவர்களுள் முக்கியமானவர்கள் ***மகேந்திரவர்மரும் நரசிம்மவர்மரும்*** ஆவர்.





படம் 21. பல்லவப் பேரரசு

***1. மகேந்திரவர்மர் (கி.பி. 600—630):*** தொடக்கத்தில் சமணராயிருந்த இம்மன்னர் *திருநாவுக்கரசு* நாயனார் அல்லது *அப்பர்* என்பவரின் முயற்சியால் சைவ சமயத்தவராயினர். சாளுக்கிய மன்னரான *இரண்டாம் புலிகேசி* இவரைத் தோற்கடித்தார்.



படம் 22. மாமல்லபுர இரதங்கள்




படம் 23. மாமல்லபுரச் சிற்பங்கள்

***2. நரசிம்மவர்மர் (கி.பி. 630—653):*** பல்லவர்களில் நரசிம்மவர்மர் சிறப்பு மிக்கவர். இவர் மல்யுத்தத்தில் திறமை பெற்றவர். **எனவே, மாமல்லர் என்று அழைக்கப்பட்டார். தமது தந்தையைத்**

தோற்கடித்த இரண்டாம் புலிகேசியின்மீது போர் தொடுத்தார். அவரைப் போரில் வென்று வாதாபியைக் கைப்பற்றி அழித்தார். அதனால் அவர் **வாதாபிகொண்ட மாமல்லர்** எனச் சிறப்புப் பெயர் பெற்றார்.

பல்லவரது ஆட்சி முறை சிறந்து விளங்கியது. இக்காலத்தில் சைவமும் வைணவமும் செழித்து வளர்ந்தன. பல்லவரது ஆட்சி சிறந்த கலைவளம் கொண்டது. மாமல்லபுரக் கற்கோயில்கள் நரசிம்ம வர்மரால் கட்டப்பட்டவை. மாமல்லபுரச் சிற்பங்கள் உலகப் புகழ் பெற்றவையாகும். பல்லவர் காலத்துக் கலையின் மற்றச் சின்னங்கள்



படம் 24. மாமல்லபுரக் கடற்கோயில்



படம் 25.
சித்தன்ன வாசல் ஓவியங்கள்

**சித்தன்னவாசல் ஓவியங்களும்,** மாமல்லபுரம் **கடற்கரைக் கோயிலும்,** காஞ்சியில் உள்ள **கைலாசநாதர் கோயிலும்** ஆகும். புதுக்கோட்டைக்கருகிலுள்ள **குடுமியான் மலைக் கல்வெட்டுகள்** பல்லவர் காலத்து இசைக் கலையின் சிறப்பை எடுத்துக் காட்டுகின்றன.

### வினாக்கள்

**I. கோடிட்ட இடங்களை நிரப்புக :**

1. ஹர்ஷர் தமது நகரைத் தானேஸ்வரத்திலிருந்து———— க்கு மாற்றினார்.

2. ஹர்ஷரை நர்மதை ஆற்றங்கரையில் தோற்கடித்த மன்னர்————.

3. ஹர்ஷரின் அரசவைப் புலவர் ——— ஆவார்.

4. ஹர்ஷர் காலத்தில் புகழ் பெற்ற பல்கலைக் கழகம் ———.

5. பல்லவர்காலச் சிற்பக் கலைக்குச் சிறப்பு வாய்ந்த இடம் ——— ஆகும்.

II. சுருக்கமாக விடையளிக்கவும் :

1. ஹர்ஷர் எவ்வாறு தானேஸ்வரத்திற்கும் கன்னோசிக்கும் மன்னரானார் ?

2. ஹர்ஷப் பேரரசின் எல்லைகள் யாவை ?

3. ஹர்ஷர் இயற்றிய நூல்கள் யாவை ?

4. பாணர் எழுதிய நூல்கள் யாவை ?

5. பல்லவர்களில் மிகச் சிறந்த மன்னர் யார் ?

III. விரிவான விடையளிக்கவும் :

1. ஹர்ஷரின் ஆட்சிச் சிறப்பை விளக்குக.

2. பல்லவர்காலத்தின் கலையையும், சிற்பக் கலையையும் விவரிக்கவும்.

### பயிற்சி

1 இந்தியப் படத்தில் ஹர்ஷப் பேரரசின் எல்லைகளைக் குறிக்கவும்.

2. இந்தியப் படத்தில் தானேஸ்வரம், கன்னோசி, வாதாபி, நாலந்தா, பிரயாகை, நர்மதை ஆறு ஆகியவற்றைக் குறிப்பிடுக

3. மாமல்லபுரச் சிற்பங்களின் படங்களைச் சேகரிக்கவும்.

# 8. இந்தியாவில் முஸ்லிம் ஆதிக்கம்

*(அரேபிய, துருக்கியப் படையெடுப்புகள்)*

*முன்னுரை*

ஆசியாவின் தென்மேற்குப் பகுதியில் *அரேபியா* என்னும் நாடு உள்ளது. இந்நாட்டிலுள்ள மெக்கா என்னும் ஊரில் கி.பி. 570ஆம் ஆண்டில் முகம்மது நபி பிறந்தார். அவர் போதித்த கொள்கைகளே *இஸ்லாம் சமயம்* எனப்படுகிறது. இச் சமயத்தைப் பின்பற்றியவர்கள் *முஸ்லிம்கள்* என அழைக்கப்படுகிறார்கள்.

இச்சமயம் முதன்முதலில் அரேபியா முழுவதும் பரவியது. பின்னர் நாளடைவில் பாரசீகம், துருக்கி, ஆப்கானிஸ்தானம் முதலிய நாடுகளில் பரவியது. முகம்மது நபி காலமானபின் முஸ்லிம்களின் தலைவர்களாக வந்தவர்கள் *கலிபாக்கள்* என அழைக்கப்பட்டனர். இவர்கள் சமயத் தலைவர்களாகவும், அரசியல் தலைவர்களாகவும் விளங்கினர். கலிபாக்கள் காலத்தில் முஸ்லிம் பேரரசு ஐரோப்பா, ஆப்பிரிக்கா, ஆசியா ஆகிய மூன்று கண்டங்களிலும் பரவியிருந்தது.

முஸ்லிம்கள் இந்தியாவின்மீது படையெடுத்துத் தமது ஆதிக்கத்தை நிறுவினர். இந்தியாவின்மீது நடந்த முஸ்லிம் படையெடுப்புகள் மூன்று வகைப்படும்.

**(அ) 8ஆவது நூற்றாண்டில் நடந்த *அரேபியப் படையெடுப்பு*.**

**(ஆ) 11, 12 ஆவது நூற்றாண்டுகளில் நடந்த *துருக்கிய ஆப்கானியப் படையெடுப்பு*.**

**(இ) 16ஆவது நூற்றாண்டில் நடந்த *மொகலாயப் படையெடுப்பு*.**

இப் பாடத்தில் முதல் இரண்டு படையெடுப்புகளையும், அடுத்த பாடத்தில் மொகலாயப் படையெடுப்பையும்பற்றிப் படிப்போம்.

## (அ) அரேபியர் படையெடுப்பு (கி.பி. 712)

பல நூற்றாண்டுகளாகவே அரேபியாவிற்கும் இந்தியாவிற்குமிடையே வாணிகத் தொடர்பு இருந்துவந்தது. கலிபாக்கள் இந்தியாவிலும் கிழக்கு நாடுகளிலும் இஸ்லாம் சமயத்தைப் பரப்ப விரும்பினர். இந்தியாவிலுள்ள சிந்து மாநிலக் கடற்கரையில் இந்திய, அரேபியக் கப்பல் வாணிகர்களுக்கிடையே அடிக்கடி சச்சரவுகள் ஏற்பட்டன. கி.பி. 712 ஆம் ஆண்டில் *முகமது-பின்-காசிம்* என்னும் அரேபியப் படைத் தலைவர் இந்தியாவின்மீது படையெடுத்தார். இவர் கடல் வழியே வந்து சிந்து மாநிலத்தில் இறங்கினார். அப்போது சிந்து நாட்டை ஆண்டுவந்த *தாகிர்* என்னும் மன்னரைப் போரில் தோற்கடித்தார்.

இவ்வாறு சிந்து நாட்டில் முதன்முதலாக அரேபிய முஸ்லிம்கள் ஆட்சி ஏற்பட்டது. சிந்து மாநிலத்தில் அரேபியரின் ஆதிக்கம் ஒரு நூற்றாண்டுக் காலமே நிலைத்திருந்தது. அக்காலத்தில் இராஜபுத்திர மன்னர்கள் மிக்க வலிமையுடன் இருந்ததால் சிந்துவுக்கப்பால் அரேபியர்களால் முன்னேற முடியவில்லை. தார் பாலைவனம் சிந்துவை இந்தியாவின் இதர பாகங்களிலிருந்து பிரித்து வைத்திருந்தது. எனவே, அரேபியர் ஆட்சி இந்தியாவில் நீண்ட காலம் நிலைக்கவில்லை. எனினும், அரேபியர் ஆட்சியால் சில குறிப்பிட்ட விளைவுகள் ஏற்பட்டன. அரேபியாவிற்கும் இந்தியாவிற்குமிடையே வாணிகம் பெருகியது. இந்தியர்களிடமிருந்து அரேபியர்கள் கணிதம், தத்துவம், மருத்துவம், வானியல், அரசியல்முறை ஆகியவற்றைக் கற்றுக் கொண்டனர். அவற்றை ஐரோப்பிய நாடுகளில் பரப்பினர். 0 முதல் 9 வரையுள்ள அரேபிய எண்கள் என்பவை நம் நாட்டிலிருந்தே பரவியவையாகும். அரேபிய வாணிகர்களும், வரலாற்று ஆசிரியர்களும் இந்தியாவைப்பற்றி எழுதியுள்ள குறிப்புகள் புகழ் பெற்றவைகளாகும்.

## (ஆ) துருக்கிய - ஆப்கானியப் படையெடுப்பு
## (11, 12 ஆவது நூற்றாண்டுகள்)

மேற்கு ஆசியாவில் நாளடைவில் அரேபியர்கள் ஆதிக்கம் குன்றியது. துருக்கியர் என்பவர்கள் எழுச்சி பெற்றுப் பல அரசுகளை நிறுவினர். அவற்றுள் ஆப்கானிஸ்தானத்தில் நிறுவப்பட்ட துருக்கிய அரசு முக்கியமானது. ***ஆல்ப்டிஜின்*** என்பவர் ***கஜினி*** என்னுமிடத்தில் அரசு ஒன்றை நிறுவினார். அவருக்குப் பின் சபுக்டிஜின் என்பவர்

அரசரானார். அவர் காலமான பின்னர் அவரது மகன் ***கஜினி முகம்மது*** ஆட்சியில் அமர்ந்தார்.

## I. *கஜினி முகம்மது*

கஜினி முகம்மது சிறந்த போர் வீரர். சிறுவயதிலேயே இந்தியாவின் அளவற்ற செல்வச் செழிப்பைப்பற்றிக் கேள்விப்பட்டிருந்தார். அச் செல்வத்தைக் கவர்ந்து செல்ல வேண்டுமென்று விரும்பினார். வட இந்தியாவில் அப்பொழுது ஆண்டுவந்த மன்னர்கள் ஒற்றுமையின்றி இருந்தனர். இந்நிலையும் அவரது படையெடுப்பிற்குச் சாதகமாக அமைந்திருந்தது. எனவே, கி. பி. 1026ஆம் ஆண்டு வரை பதினேழு முறை அவர் இந்தியாவின்மீது படையெடுத்தார். வட மதுரை, தானேஸ்வரம், கன்னோசி ஆகிய நகரங்களை எளிதாக வென்றார். ஒவ்வொரு முறையும் ஏராளமான செல்வங்களை எடுத்துச் சென்றார். அவருடைய படையெடுப்புகளில் 1025-ல் நடந்த *சோமநாத்* படையெடுப்பு முக்கியத்துவம் வாய்ந்தது. குஜராத்தி லுள்ள சோமநாதபுரம் கோயிலைத் தாக்கி அங்கிருந்த பொன்னையும் பொருளையும் வாரிச் சென்றார்.



படம் 26.
கஜினி முகம்மது

கஜினி முகம்மது இந்தியாவின்மீது படையெடுத்ததன் நோக்கம் இந்நாட்டில் அவருடைய ஆட்சியை நிறுவ வேண்டுமென்பதல்ல. இங்குள்ள செல்வங்களை எடுத்துச் சென்று தமது நாட்டை வளப்படுத்த வேண்டுமென்பதேயாகும். அவ்வாறே கஜினி, நகரை வளம் பொருந்திய நகரமாக ஆக்கினார். பல அழகிய கட்டடங்களையும் மசூதிகளையும் அங்கு கட்டினார். பல்கலைக் கழகம் ஒன்றை அமைத்தார். *அல்பெருனி, பிர்தௌசி* ஆகிய புலவர்களை ஆதரித்தார். பிர்தௌசி என்பவர் *ஷாநாமா* என்ற சிறந்த நூலை இயற்றினார். கஜினி முகம்மது கி. பி. 1030-ல் காலமானார். அவருக்குப் பின் கஜினி இராச்சியம் வீழ்ச்சியடைந்தது.

## II. *கோரி முகம்மது*

ஆப்கானிஸ்தானத்தில் கஜினி நாட்டிற்கு அண்டை நாடாகக் *கோரி* என்னும் சிறிய நாடு ஒன்று இருந்தது. அந்நாட்டு அரசர்களில் தலை சிறந்தவர் *கோரி முகம்மது* என்பவர் ஆவார். அவர் இந்தியாவில், ஒரு முஸ்லிம் அரசை நிறுவ விரும்பினார். அப்போது வட இந்தியாவில் ஆண்டுவந்த இராசபுத்திர மன்னர்கள் ஒற்றுமை யின்றி இருந்தனர். டில்லி-ஆஜ்மீர் நாட்டைப் *பிருதிவிராஜர்* என்னும் மன்னரும், கன்னோசியை *ஜெயச்சந்திரர்* என்னும் மன்னரும் ஆண்டு வந்தனர். ஜெயச்சந்திரரின் மகளான *சம்யுக்தையைப்* பிருதிவிராஜர், ஜெயச்சந்திரரின் விருப்பத்திற்கு மாறாகத் திருமணம் செய்து கொண்டார். இதனால் இவ் விருவரிடையே பெரும்பகை இருந்து வந்தது. படையெடுக்க விரும்பிய கோரி மன்னருக்கு இச் சூழ்நிலை மிகவும் சாதகமாக அமைந்தது. கோரி முகம்மது கி.பி. 1191ஆம் ஆண்டில் இந்தியாவின்மீது படையெடுத்து வந்தார். தானேஸ்வரத்திற் கருகிலுள்ள *தரேயின்* என்னுமிடத்தில் பிருதிவிராஜருக்கும் கோரி முகம்மதுவுக்குமிடையே பெரும் போர் நடந்தது. இப்போரில் கோரி முகம்மது தோல்வியுற்றுத் தம் நாடு திரும்பினார். அடுத்த ஆண்டில் (1192) அதே இடத்தில் மீண்டும் போரிட்டு, பிருதிவிராஜரைத் தோற் கடித்தார். ஆஜ்மீரையும் டெல்லியையும் கோரி முகம்மது கைப்பற்றினார். பின்னர் ஜெயச்சந்திரரை வென்று அவருக்குச் சொந்தமான கன்னோசி, கூர்ச்சரம், குவாலியர் ஆகிய இடங்களைக் கைப்பற்றினார். இவ்வாறாக, இந்திய மன்னர்களின் ஒற்றுமையின்மையின் காரணமாக இந்தியாவில் முஸ்லிம் ஆட்சி நிறுவப்பட்டது. கோரி முகம்மது தாம் வென்ற பகுதி களைத் தமது பெயரால் ஆளும்படி *குத்புதீன் ஐபெக்* என்பவரிடம் விட்டுவிட்டுத் தம் நாட்டிற்குத் திரும்பிவிட்டார்.




படம் 27
கோரி முகம்மது

## III. *டெல்லி சுல்தான்கள் ஆட்சி (கி. பி. 1206—1526)*

கி. பி. 1206 முதல் கி. பி. 1526 வரை ஐந்து வமிசங்கள் ஒன்றன் பின் ஒன்றாக டெல்லியை ஆண்டுவந்தன.


**1.** *அடிமை வமிசம்* (கி. பி. 1206—1290): *குத்புதீன் ஐபெக்* என்பவர் கோரி முகம்மதிடம் அடிமையாயிருந்தவர். கோரி

முகம்மதுவின் மறைவிற்குப் பின் குத்புதீன் டெல்லியைத் தலைநகராகக் கொண்டு அரசை நிறுவினார். இதுவே டெல்லியில் ஏற்பட்ட முதல் முஸ்லிம் அரசு ஆகும். அவரது வழிவந்த அரசர்கள் *அடிமை வமிசத்தினர்* எனப் பட்டனர். குத்புதீன் நான்கு ஆண்டுகள் நல்ல முறையில் ஆட்சி புரிந்தார். டெல்லிக்கு அருகே *குதுப்மினார்* என்னும் உயரமான கோபுரம் ஒன்றை இவர் கட்டத் தொடங்கினார். அவருக்குப் பின் அரசரான அவரது மருமகன் *அல்டாமிஷ்* என்பவரே இதனைக் கட்டி முடித்தார். அல்டாமிஷ் இறந்த பின் அவரது மகள் *ரஸியா பேகம்* என்பவர் அரசுப் பொறுப்பை ஏற்றார். டெல்லியை ஆண்ட முதல் பெண்ணரசி இவரேயாவார். அவருக்குப் பின்னர் வந்த *பால்பன்* என்பவர் அடிமை வமிச மன்னர்களில் தலை சிறந்தவர் எனக் கருதப்படுகிறார். அவரது ஆட்சிக் காலத்தில் படையெடுத்து வந்த மங்கோலியர்களை அவர் தோற்கடித்தார். அமைதியான ஆட்சியை நிலவச் செய்தார். பால்பனுக்குப் பின்னர் வந்த மன்னர்கள் வலிமையற்றவர்கள். அடிமை வமிசத்தின் கடைசி மன்னரான *கைகுபாத்* அவருடைய தளபதி *ஜலாலுதீன் கில்ஜி* என்பவரால் கொல்லப்பட்டார். ஜலாலுதீன் டெல்லி சுல்தானாக ஆட்சியில் அமர்ந்தார். அவர் நிறுவிய அரச வமிசம் *கில்ஜி வமிசம்* எனப்பட்டது.



படம் 28. குதுப்மினார்

**2.** *கில்ஜி வமிசம்* (கி. பி. 1290—1320): கில்ஜி மன்னர்களில் சிறந்தவராகக் கருதப்பட்டவர் *அலாவுதீன் கில்ஜி* என்பவராவார். அவர் மாளவம், கூர்ச்சரம், சித்தூர் ஆகிய பகுதிகளைக் கைப்பற்றினார். *மாலிக்காபூர்* என்பவரின் தலைமையில் ஒரு பெரும் படையைத் தக்காணத்திற்கு அனுப்பினார். மாலிக்காபூர் தேவகிரி, வாரங்கல், துவார சமுத்திரம், மதுரை, இராமேஸ்வரம் ஆகிய நகரங்களைத் தாக்கி ஏராளமான செல்வங்களுடன் டெல்லிக்குத் திரும்பினார். அலாவுதீன் சிறந்த நிர்வாகத் திறமையுடையவர். பொருள்களின் விலைகளைக் கட்டுப்படுத்தினார். மதுபானம் அருந்துவதைத் தடை செய்தார். மக்கள் மீது கடும் வரி விதித்தார். *அமீர்குஸ்ரு* என்னும் பாரசீகக் கவிஞர் அவரால் ஆதரிக்கப்பட்டவர்.




படம் 29. அலாவுதீன் கில்ஜி பேரரசு

**3. *துக்ளக் வமிசம்*** **(கி. பி. 1320—1413):** கில்ஜி வமிசத்தினருக்குப் பின்னர் துக்ளக் வமிச மன்னர்கள் டெல்லியில் ஆட்சிக்கு வந்தனர். துக்ளக் மன்னர்களில் முக்கியமானவர் *முகம்மது பின் துக்ளக்* என்பவர். அவர் கல்வி அறிவு மிக்கவராவார். எனினும், மன உறுதியும் அனுபவமும் அற்றவர். அவருடைய செயல்கள் நாட்டில் பல குழப்பங்களை விளைவித்தன.

தமது தலைநகரம் அரசின் மத்தியில் இருக்க வேண்டுமென்று எண்ணினார். எனவே, டெல்லியிலிருந்து தலைநகரத்தை *தேவகிரிக்கு* மாற்றினார். தேவகிரிக்கு *தௌலதாபாத்* என்று பெயரிட்டார். பின்னர் தலைநகராக இருக்க அந்நகரம் தகுதியற்றதென்று உணர்ந்து மீண்டும் டெல்லிக்கே தலைநகரை மாற்றினார். மக்கள் இம்மாற்றத்தை விரும்பவில்லை. இம்மாற்றத்தினால் மக்களில் பலர் மடிந்தனர். நாட்டின் பொருளாதாரத்தைச் சீர்திருத்தக் கருதி தங்க, வெள்ளி நாணயங்களுக்குப் பதிலாகச் செப்பு நாணயங்களை வெளியிட்டார். தகுந்த ஏற்பாடு நடவடிக்கைகளை மேற்கொள்ளாததால், தங்க, வெள்ளி நாணயங்கள் மறைந்தன. கள்ள நாணயங்கள் பெருகின. இதனால் பொருளாதாரம் பெருமளவில் பாதிக்கப்பட்டது.

முகம்மது பின் துக்ளக் இமயமலைப் பிரதேசத்தில் உள்ள ஒரு நாட்டின்மீது படையெடுத்து அதனைக் கைப்பற்ற விரும்பினார். பெரும் போர்ப் படையொன்றைக் குளிர்காலத்தில் அனுப்பி வைத்தார். பனியாலும் குளிராலும் பல்லாயிரக்கணக்கான வீரர்கள் வழியிலேயே மாண்டனர். இவ்வாறு இவரது திட்டங்களால் மிகுந்த பொருட்சேதமும் உயிர்ச் சேதமும் ஏற்பட்டன. இவருக்குப் பின் அரசாண்ட *பிரோஷா* என்பவர் பல சீர்திருத்தங்களைச் செய்து மக்கள் குறைகளை நீக்கினார். கி. பி. 1398ஆம் ஆண்டில் சாமர்க்கண்டின் அரசரான *தைமூர்* என்பவர் டெல்லியின்மீது படையெடுத்து வந்து கொள்ளையடித்துச் சென்றார். தைமூர் சென்ற பின்னர் டெல்லி சுல்தானாக முடிசூட்டிக் கொண்டவர் *கிஸிர்கான்* என்பவராவார்.

**4. *சையது வமிசம்*** **(கி. பி. 1413—1451):** *கிஸிர்கான்* சையது வமிசத்தைச் சேர்ந்தவர். இவருக்குப் பின் மூன்று அரசர்கள் டெல்லியில் ஆட்சி புரிந்தனர்.

**5. *லோடி வமிசம்*** **(கி. பி. 1451—1526):** சையது வமிசத்தினரையடுத்து லோடி வமிச மன்னர்கள் டெல்லியை ஆண்டனர். *இப்ராஹிம் லோடி* என்பவர் இவ்வமிசத்தின் கடைசி மன்னர் ஆவார்.

கொடுங்கோல் மன்னரான அவரை மக்கள் வெறுத்தனர். அவர் மீது வெறுப்புக் கொண்ட சிலர் காபூலை ஆண்டுவந்த *பாபர்* என்ற மொகலாய மன்னரை இந்தியாமீது படையெடுத்து வருமாறு அழைத்தனர். 1526ஆம் ஆண்டில் பாபர் இந்தியாவின் மீது படையெடுத்து இப்ராஹிம் லோடியைப் *பானிபட்* போரில் தோற்கடித்தார். டெல்லியில் மொகலாய அரசை நிறுவினார். பாபரின் படையெடுப்பால் டெல்லி சுல்தான்களின் ஆட்சி முடிவெய்தியது.

## *முஸ்லிம் ஆட்சியின் விளைவுகள்*

டெல்லி சுல்தான்களின் ஆட்சியின் விளைவாக இந்தியாவில் இஸ்லாம் மதம் பரவியது. பாரசீக மொழி, அரபு மொழி, வடமொழி ஆகியவற்றின் கலப்பால் உருது என்ற ஒரு பொது மொழி தோன்றியது. இந்துக்களும் முஸ்லிம்களும் ஒருவரையொருவர் மதித்து நடந்தனர். இரு மதங்களுக்கும் பொதுவான கருத்துகளை வெளியிடும் *கபீர்தாஸ்*, குரு *நானக்* போன்ற சமயப் பெரியோர்கள் பலர் தோன்றினர். இந்திய சிற்பக்கலையில் இஸ்லாமியக் கலையின் இணைப்பு ஏற்பட்டது. இவ்விணைப்பால் இந்தியப் பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றில் பல மாறுதல்கள் தோன்றின.

### *வினாக்கள்*

**I. *கோடிட்ட இடங்களை நிரப்புக :***

1. *அடிமை மரபை நிறுவியவர் ————— .*
2. *டெல்லியை ஆண்ட முதல் பெண்ணரசி ————— .*
3. *அலாவுதீன் கில்ஜியின் சிறந்த தளகர்த்தர் ————— .*
4. *லோடி வமிசத்தின் கடைசி மன்னர் ————— .*
5. *டெல்லி சுல்தான்களின் ஆட்சி முடிவடைந்த ஆண்டு—————.*

**II. *சுருக்கமான விடையளிக்கவும் :***

1. *கலிபா என்பவர் யார் ?*
2. *சிந்து நாட்டின் மீது படையெடுத்த முதல் முஸ்லிம் தலைவர் யார் ?*
3. *அரேபியரின் ஆட்சி இந்தியாவில் நீண்ட காலம் நிலை பெறவில்லை. ஏன் ?*
4. *கஜினி முகம்மது இந்தியாவின்மீது படையெடுக்கக் காரணம் என்ன ?*
5. *கோரி முகம்மது இந்தியாவின்மீது படையெடுக்கக் காரணம் என்ன ?*

**III. *விரிவான விடையளிக்கவும் :***

1. *முகம்மது பின் துக்ளக்கின் திட்டங்கள் யாவை ?*
2. *டெல்லி சுல்தான்களின் ஆட்சியால் ஏற்பட்ட விளைவுகள் யாவை ?*

### *பயிற்சி*

1. *இந்தியா படத்தில் அலாவுதீன் கில்ஜியின் பேரரசைக் குறிப்பிடுக.*
2. *இந்து, முஸ்லிம் ஒற்றுமையை விளக்கும் நாடகங்களை நடிக்கவும்.*

# 9. மொகலாயப் பேரரசு

*(கி. பி. 1526—1707)*

*முன்னுரை*

டெல்லி சுல்தான்களில் கடைசி மன்னரான *இப்ராஹிம் லோடி* என்பவரை பாபர் தோற்கடித்தார் என்று முன் பாடத்தில் படித்தோம். கி. பி. 1526-ல் நடைபெற்ற இப்போர் *முதல் பானிப்பட்டுப் போர்* எனப்படும். இப்போரில்தான் முதன்முதலாக பீரங்கிப் படை பயன்படுத்தப்பட்டது. அப்படையை பாபர் பயன்படுத்தியதால் அவர் எளிதாக வெற்றிபெற முடிந்தது. முதல் பானிப்பட்டுப் போர் வரலாற்றுச் சிறப்பு மிக்கதாகும். அதன் விளைவாக டில்லியில் மொகலாய ஆட்சி ஏற்பட்டது. பாபர் டெல்லியையும் ஆக்ராவையும் கைப்பற்றி கி. பி. 1526-ல் மொகலாய ஆட்சியை நிறுவினார். நம் நாட்டில் மொகலாயரின் ஆட்சி சுமார் 200 ஆண்டுகள் நீடித்தது.

## *(அ) பாபர் (கி. பி. 1526—1530)*

பாபரது ஆட்சியை இராஜபுத்திரர்கள் விரும்பவில்லை. *இராணா சங்கா* என்பவர் தலைமையில் பாபரை எதிர்த்துப் போரிட்டனர். ஆக்ராவிற்கருகிலுள்ள *கண்வா* என்னும் இடத்தில் நடந்த இப்போரில் பாபர் வெற்றி பெற்றார். *கோக்ராவில்* நடைபெற்ற மற்றொரு போரில் பீகாரையும் வங்காளத்தையும் ஆண்ட ஆப்கானிய மன்னரை பாபர் தோற்கடித்தார். அவரது பேரரசு காபூலிலிருந்து வங்காளம் வரையிலும், இமயத்திலிருந்து குவாலியர் வரையிலும் பரவி இருந்தது. பாபர் நான்கு ஆண்டுகள் ஆட்சி புரிந்தார்.



படம் 30. பாபர்

பாபர் ஆற்றல் மிக்க வீரர் மட்டுமன்றி சிறந்த கவிஞராகவும், கல்விமானாகவும் விளங்கினார். *பாபர் நாமா* என்னும் தமது வாழ்க்கை வரலாற்றைத் துருக்கிய மொழியில் எழுதினார். கி. பி. 1530-ல் பாபர் காலமானார்.

## *(ஆ) ஹுமாயூன் (1530—1540, 1555—1556), ஷெர்ஷா (1540—1545)*

பாபருக்குப் பின் அவருடைய மகன் ஹுமாயூன் அரசரானார்.

ஹுமாயூன் திறமையற்றவராக இருந்தார். அவரது பலவீனத்தைப் பயன்படுத்திக் கொண்ட *ஷேர்கான்* என்ற ஆப்கானிய வீரர் அவரைத் தோற்கடித்தார். *ஷெர்ஷா* என்ற பட்டத்துடன் டெல்லியில் தமது ஆட்சியை அமைத்தார். சூர் வமிசத்தைச் சேர்ந்த இவர் அரசாண்ட சிறிது காலத்திற்குள் பல நல்ல சீர்திருத்தங்களைச் செய்தார். அவரது நிலவரித் திட்டம் மிகவும் போற்றுதற்குரியதாகும். நிலங்களைச் செவ்வனே அளந்து நிலவரியை நிர்ணயித்தார். விளைச்சலில் மூன்றில் ஒரு பங்கு நில்வரியாக வசூலிக்கப்பட்டது. இவருடைய நிலவரித் திட்டத்தை அக்பர் பின் பற்றினார். எனவே, ஷெர்ஷாவை *அக்பரின் முன்னோடி* என்று அழைப்பது வழக்கம். கி. பி. 1545 ஆம் ஆண்டில் ஷெர்ஷா காலமானார். அவருக்குப் பின் சூர் மரபில் அமைதியற்ற சூழ்நிலை நிலவியது.

பாரசீகரது துணையுடன் கி.பி. 1555-ல் ஹுமாயூன் டெல்லியைக் கைப்பற்றி மீண்டும் அரசரானார். அரசை மீட்ட ஆறு மாதங்களுக்குள் ஹுமாயூன் இறந்துவிட்டார்.

## *(இ) அக்பர் (கி.பி. 1556—1605)*

### I. *இரண்டாம் பானிப்பட் போர்*, 1556

ஹுமாயூனுக்குப் பின் அக்பர் அரசரானார். ஹுமாயூன் ஆட்சியை இழந்து அலைந்துத் திரிந்தபோது *அமரக் கோட்டை* என்னும் இடத்தில் அக்பர் பிறந்தார். அரசுப் பொறுப்பை ஏற்றபொழுது அக்பருக்கு வயது பதின்மூன்று. *பைராம்கான்* அவரது பாதுகாப்பாளராக அவர் சார்பில் ஆட்சி புரிந்தார். அக்பருக்கு எதிராகத் தோன்றிய *ஹேமு* என்பவரைப் பைராம்கான் கி.பி. 1556-ல் பானிப்பட் போரில் தோற்கடித்தார். இதுவே இரண்டாம் *பானிப்பட் போர்* எனப்பட்டது. இப் போரின் விளைவாக மொகலாய ஆட்சி இந்தியாவில் நிலைபெற்றது.




படம் 21. அக்பர்

## II. மொகலாயப் பேரரசு அமைக்கப்படல்

அக்பர் சிறந்த போர் வீரர். உடல் வலிமையும் மன வலிமையும் உடையவர். அவர் தம் இரரச்சியத்தை விரிவாக்க விரும்பிப் பல போர்களில் ஈடுபட்டார். முதலில் மாளவத்தைக் கைப்பற்றினார். காண்ட்வான்ாப் பிரதேசத்தை ஆண்ட அரசி *துர்க்காவதி* வீரம் மிக்கவராய் விளங்கினார். பெரும்படையுடன் அக்பர் அவரை எதிர்த்துப் போரிட்டுத் தோற்கடித்தார். மீவாரைச் சேர்ந்த *இராணா பிரதாப் சிங்* என்பவரும் அக்பரது தாக்குதலை எதிர்த்துப் போரிட்டார். போரில் தோற்கடிக்கப்பட்ட போதிலும் அவர் அக்பருக்கு அடிபணியவில்லை. ஆரவல்லிக் குன்றுகளுக்குச் சென்று அங்கிருந்து அக்பருக்குத் தொல்லை கொடுத்து வந்தார். காபூல், காஷ்மீரம், கூர்ச்சரம், வங்காளம், சிந்து, ஒரிசா, பீகார் முதலிய பகுதிகளையும் அக்பர் வென்றார். தக்காணத்தையும் தம் ஆட்சியின்கீழ் கொண்டுவர எண்ணிய அக்பருக்குப் பெரும் எதிர்ப்புத் தோன்றியது. அகமத் நகரை ஆண்ட அரசி *சாந்த் பீபி* அக்பரை எதிர்த்து வீரத்துடன் போர் புரிந்தார். அவர் இறந்தபின்தான் அகமத் நகரை அக்பர் கைப்பற்ற முடிந்தது. அக்பரது பேரரசு வடமேற்கில் ஆப்கானிஸ்தானையும், இந்துகுஷ் மலையையும், தெற்கில் பீராரையும், மேற்கில் குஜராத்தையும், கிழக்கில் வங்காளத்தையும் எல்லைகளாகக் கொண்டிருந்தது.

## III. ஆட்சி முறை

குடிமக்கள் அனைவரது அன்பையும் பெற்றால்தான் நிலையான ஆட்சியை நிறுவமுடியும் என்ற உண்மையை அக்பர் நன்கு உணர்ந்தார். எனவே, அக்பர் இந்துக்களை அன்புடன் நடத்தினார். இந்துக்களுக்கு ஆட்சியில் பெரும்பங்கு அளிக்கப்பட்டது. அவர்கள்மீது விதிக்கப் பட்டிருந்த ஜிசியா என்ற வரியை நீக்கினார். பசுவதையைத் தடை செய்தார். இராஜபுத்திரப் பெண்களுக்கும் மொகலாய அரச வமிசத்து இளைஞர்களுக்கும் திருமணம் செய்வித்தார். இந்துக்களுக்கு எல்லா வழிபாட்டு உரிமைகளையும் வழங்கினார். சதி அல்லது உடன் கட்டை ஏறுதல் என்னும் கொடிய வழக்கத்தைத் தடுத்தார். சமயத்துறையிலும் அக்பர் *தீன் இலாஹி* அல்லது *தெய்வீகச் சமயம்* என்ற புதிய சமயத்தைத் தோற்றுவித்தார். அவரது சமயம் பிற சமயங்களிலுள்ள நல்ல கொள்கைகளைத் தன்னகத்தே கொண்டிருந்தது. எனினும், அவருக்குப் பின் அவரது சமரச சமயம் அழிவுற்றது.




படம் 32. அக்பரது பேரரசு


அக்பரது அரசு சிறந்த ஆட்சி முறையைக் கொண்டது. அவரது பேரரசு 15 *சுபாக்கள்* அல்லது மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. சுபாவின் தலைவர் *சுபேதார்* எனப்பட்டார். அரசருக்கு அறிவுரை கூற அமைச்சர்கள் பலர் இருந்தனர்.

அக்பர் செயல்படுத்திய நிலவரித் திட்டம் மிகப் புகழ் பெற்றது. இது ஷெர்ஷாவின் முறையைப் பின்பற்றியது. இத்திட்டத்தை வகுப்பதில் இவருக்கு உதவி புரிந்தவர் *இராசா தோடர்மால்* என்னும் அமைச்சராவார். நிலங்கள் தர வாரியாக அளக்கப்பட்டு விளைச்சலுக்குத் தக்க வரி விதிக்கப்பட்டது. விளைச்சலில் மூன்றில் ஒரு பங்கு வரியாக வசூலிக்கப்பட்டது. உழவர்களிடமிருந்து நேரிடையாக நிலவரி வாங்கப் பட்டது. வரியைப் பணமாகவோ தானியமாகவோ குடியானவர்கள் செலுத்தலாம்.

படைகளைக் கண்காணிக்க *மான்சப்தார்கள்* என்னும் படைத் தலைவர்கள் நியமிக்கப்பட்டனர். மான்சப்தார்கள் குதிரை வீரர்களுடன் அக்பருக்குப் போர்க்களத்தில் துணை புரியவேண்டும். ஒவ்வொரு மான் சப்தாரும் வைத்துக்கொள்ள வேண்டிய குதிரைப் படைக்குத் தக்கவாறு அவர் சம்பளம் அல்லது நிலத்தைப் பெற்றார்.

## IV. இலக்கியம், கலை

இலக்கியத்திலும், கலைகளிலும் அக்பருக்குச் சிறந்த ஆர்வம் இருந்தது. *அபுல் பாசல், அபுல் பைஜீ, இராஜா பீர்பால்* ஆகிய அறிஞர்கள் அவரது அவையை அலங்கரித்தனர். அபுல் பாசல் என்பவர் *அயினி அக்பரி* என்னும் அரசியல் நூலையும், *அக்பர் நாமா* என்னும் வரலாற்று நூலையும் எழுதினார். அக்பர் அவையிலிருந்த *தான்சேன்* சிறந்த இசை மேதை. இராஜா பீர்பால் நகைச் சுவையில் சிறந்தவர். இராமாயணத்தை இந்தி மொழியில் எழுதிய *துளசிதாசர்* இவர் காலத்தவரே. பல அரிய நூல் களைக் கொண்ட நூலகம் ஒன்றை அக்பர் அமைத்தார். கட்டடக் கலையும் ஓவியக் கலையும் அக்பர் காலத்தில் உன்னத நிலையை அடைந்தன.



படம் ௨௨. பதேபூர் சிக்ரி


டெல்லியிலும் ஆக்ராவிலும் பல சிறந்த கட்டடங்கள் கட்டப்பட்டன. அவற்றுள் *பதேபூர் சிக்ரி* என்ற நகரமும் டெல்லியிலுள்ள ஹுமாயூன் கல்லறையும் முக்கியமானவை. இந்தியாவை ஆண்ட மாபெரும் மன்னர் களில் அக்பரும் ஒருவர். அவர் ஒரு தேசிய அரசராக விளங்கினார். அக்பரின் வெற்றிகளும், நல்லாட்சியும், கலைத்தொண்டும் சமய சகிப்புத் தன்மையும் அவருக்கு உலக வரலாற்றில் சிறந்த இடத்தை அளித்திருக் கின்றன. அவர் *மகா அக்பர்* என்று பாராட்டப்படுகிறார்.

## (ஈ) *ஜஹாங்கீர்* (1605—1627)

அக்பருக்குப் பின் அவரது மகன் *ஜஹாங்கீர்* 1605ஆம் ஆண்டில் அரசரானார். அக்பரது திறமை அவருக்கில்லாவிடினும் தந்தையின் அடிச்சுவட்டை அவர் பின்பற்றினார். உண்மையான அதிகாரம் அவர் காலத்தில் அவருடைய மனைவியான *நூர்ஜஹானிடம்* இருந்தது.

## (உ) *ஷாஜஹான்* (1628—1658)


ஜஹாங்கீரின் மகன் *ஷாஜஹான்* ஒரு சிறந்த கலைஞர். அவரது ஆட்சிக் காலத்தில் பல அழகிய கட்டடங்கள் கட்டப் பட்டன. உலகப் புகழ்பெற்ற *தாஜ்மகால்* என்னும் கட்டடம்




படம் 34. தாஜ்மகால்

ஆக்ராவில் யமுனை நதிக்கரையில் கட்டப்பட்டது. டெல்லியில் *செங்கோட்டை, ஜும்மா மசூதி* ஆகிய கட்டடங்களை அமைத்தார்.

புகழ்மிக்க மயிலாசனம் அவரால் அமைக்கப் பெற்றது. இலக்கியம், இசை, ஓவியம் ஆகியவற்றை ஷாஜஹான் வளர்த்தார்.




படம் 35. டில்லி செங்கோட்டை



படம் 36. ஜும்மா மசூதி

## (ஔ) ஔரங்கசீப் (கி. பி. 1658—1707)

ஷாஜஹானுக்குப் பின் அவரது மகன் ஔரங்கசீப் மொகலாய மன்னரானார். அவர் ஆடம்பரங்களை வெறுத்து எளிய வாழ்கையை மேற்கொண்டார். தம் சொந்தச் செலவுகளுக்காகத் திருக்குர்ரான் பிரதிகளைத் தம் கையாலேயே எழுதி விற்றுப் பொருளீட்டினார். குல்லாய்கள் செய்து விற்றார். சமய நூலில் கூறியவாறு தம் வாழ்க்கையை அமைத்துக் கொண்டார். எனினும், அவருடைய குறுகிய சமயப் பற்று அவருக்குப் பல பகைவர்களைத் தோற்றுவித்தது. அக்பரால் நீக்கப்பட்டிருந்த ஜிசியா




படம் 37. ஔரங்கசீப் பேரரசு

என்னும் வரியை மீண்டும் இந்துக்கள்மீது விதித்தார். இதனால் இந்துக்களின் வெறுப்பை அவர் பெற்றார். இவருக்கு எதிராக எழுந்த *சிவாஜி* என்ற மராத்திய வீரரை அடக்க முயன்றார். ஆனால், தோல்வியடைந்தார். சீக்கிய சமயத் தலைவரான *தேஜ்பகதூரை* ஔரங்கசீப் சிரச்சேதம் செய்தபடியால் சீக்கியர் ஔரங்கசீபின் பகைவர்களாயினர். தக்காணத்திலுள்ள பீஜப்பூர், கோல்கொண்டா ஆகிய அரசுகளின்மீது படையெடுத்து அவற்றைக் கைப்பற்றினார். அவரது காலத்தில் மொகலாயப் பேரரசு வடக்கில் காஷ்மீரத்திலிருந்து தெற்கில் காவிரியாறு வரையிலும், கிழக்கில் வங்கக் கடலிலிருந்து மேற்கில் அரபிக்கடல் வரையிலும் பரவியிருந்தது. கி. பி. 1707ஆம் ஆண்டில் அகமத் நகரில் அவர் உயிர் நீத்தார். அவருக்குப்பின் மொகலாயப் பேரரசு வீழ்ச்சி அடைந்தது.

### *பேரரசின் வீழ்ச்சிக்குக் காரணங்கள்*

1. ஔரங்கசீபுக்குப் பின்னர் வந்த மன்னர்கள் திறமையற்றவர்கள்.


2. மொகலாயப் பிரபுக்கள் ஆடம்பர வாழ்க்கையை நடத்தியதால் தமது திறமையையும் பலத்தையும் இழந்தனர்.

3. ஔரங்கசீபின் மதக் கொள்கை பொதுவாக இந்துக்களின் பகையையும் சீக்கியர்களின் பகையையும் தேடித்தந்தது.

4. மொகலாயப் பேரரசின் வீழ்ச்சிக்கு மற்றொரு காரணம் *நாதர்ஷா* படையெடுப்பாகும். அவர் 1739-ல் டில்லியைக் கொள்ளையடித்து, எண்ணற்ற மக்களைக் கொன்று, ஷாஜஹானின் மயிலாசனம் உட்பட விலை மதிப்புமிக்க பல பொருள்களைக் கவர்ந்து சென்றார்.

## *(எ) மராத்தியர்கள் : சிவாஜி*

மேற்குத் தொடர்ச்சி மலைக்கும், அரபிக் கடலுக்குமிடையே உள்ள குன்றுகள் நிறைந்த பிரதேசம் *மகாராஷ்டிரம்* எனப்படும். அங்குள்ள மக்களே மராத்தியர் என அழைக்கப்பட்டனர். அவர்கள் உடல் வலிமை பெற்றவர்கள் ; சிறந்த குதிரை வீரர்கள். மராத்தியத் தலைவர்களுள் மிகச் சிறந்தவர் *சிவாஜி* என்பவர் ஆவார்.




படம் 38. சிவாஜியின் அரசு

சிறு சிறு குழுக்களாகச் சிதறிக் கிடந்த மராத்தியர்களை சிவாஜி ஒற்றுமைப்படுத்தினார். பீஜப்பூர் சுல்தானுக்குச் சொந்தமான சில கோட்டைகளைக் கைப்பற்றினார். அதனால், சுல்தான் கோபங்கொண்டு *அப்சல்கான்* தலைமையில் ஒரு படையை அனுப்பினார். சிவாஜி அப்சல்கானைக் கொன்று, அவரது படையை முறியடித்தார். சிவாஜி வலுப்பெற்று வருவதைக் கண்ட ஔரங்கசீப் அவரை அடக்க *ஷெயிஸ்டகான்* தலைமையில் ஒரு படையை அனுப்பினார். சிவாஜி மொகலாயப் படையையும் தோற்கடித்தார்.



படம் 39. *சிவாஜி*

ஔரங்கசீப் தந்திரமாக சிவாஜியை ஆக்ராவிற்கு வரவழைத்து அவரைச் சிறைப் படுத்தினார். ஆனால், சிவாஜி தந்திரமாகத் தப்பி மகாராஷ்டிரத்திற்குத் திரும்பினார்.

சிவாஜி கி. பி. 1674ஆம் ஆண்டில் *சத்ரபதி* என்ற பட்டத்துடன் மராத்திய மன்னராக *ராய்கார்* என்னுமிடத்தில் முடிசூட்டிக்கொண்டார். சிவாஜியின் ஆட்சி வடக்கே சாத்பூரா மலையிலிருந்து தெற்கே கோவா வரையிலும், மேற்கே அரபிக்கடலிலிருந்து கிழக்கே பென்கெங்கா ஆறு வரையிலும் பரவியிருந்தது.

சிவாஜி *அஷ்டப்பிரதான்* என்ற எட்டு அமைச்சர்கள் கொண்ட சபையின் உதவியால் சிறப்பாக ஆட்சி செய்தார். சிவாஜி இந்து சமயத்தில் ஆழ்ந்த பற்றுடையவராயிருந்தார். ஆயினும், அவர் பிற சமயங்களைப் பெரிதும் மதித்தார். இந்துக்களும் முஸ்லிம்களும் எவ்வித வேறுபாடுமின்றி அவருடைய படையில் சேர்த்துக்கொள்ளப் பட்டனர். தமது ஆட்சி அறத்தின் ஆட்சி என்பதைக் குறிக்க காவி நிறக் கொடியை மராத்தியக் கொடியாக அமைத்துக்கொண்டார். வரலாற்றுப் புகழ்மிக்க, சிறந்த வீரராக அவர் விளங்கினார்.

### (ரு) *சீக்கியர்கள்*

வட இந்தியாவில் ஔரங்கசீபுக்கு எதிராகக் கிளம்பியவர்களுள் முக்கியமானவர் *சீக்கியர்கள்*. *சீக்கிய* மதத்தைத் தோற்றுவித்தவர் **குருநானக் ஆவார்.** ஆரம்பத்தில் *சீக்கியர்கள்* முஸ்லிம்களுடன் நல்ல

உறவு கொண்டிருந்தனர். ஐந்தாம் சீக்கிய குரு அர்ஜுன் என்பவர் ஜஹாங்கீரால் கொல்லப்பட்டார். அது முதல் சீக்கியர்கள் முஸ்லிம்களுக்கு எதிராகத் தங்கள் சமயத்தை வலுப்படுத்தினர். சீக்கியர்களின் ஒன்பதாவது குருவான தேஜ்பகதூரை இஸ்லாம் சமயத்தை ஏற்றுக்கொள்ளுமாறு ஔரங்கசீப் வற்புறுத்தினார். தேஜ்பகதூர் அதற்கு இணங்காததால் அவரைக் கொலைசெய்தார். இதனால், சீக்கியர்கள் ஔரங்கசீபின் பகைவர்களாக மாறினர். குரு தேஜ்பகதூரின் மைந்தர் குரு கோவிந்தர் சீக்கியர்களை ஒன்றுபடுத்தினார். அவரது காலத்தில் சீக்கியர்கள் இராணுவ அமைப்புடன்கூடிய ஒரு சமுதாயமாக மாறினர்.

## வினாக்கள்

**I. கோடிட்ட இடங்களை நிரப்புக :**

1. முதலாவது பானிப்பட் போர் ———— ஆம் ஆண்டு நடைபெற்றது.
2. அக்பர் சபையில் இருந்த இசை வல்லுநர் ———— ஆவார்.
3. அக்பர் ஒரு புதிய நகரத்தை ———— ல் அமைத்தார்.
4. தாஜ்மகாலைக் கட்டியவர் ———— ஆவார்.
5. ஔரங்கசீபால் கொல்லப்பட்ட சீக்கிய குரு ———— ஆவார்.

**II. பின்வரும் விடைகளில் மிகவும் பொருத்தமானதைத் தேர்ந்தெடுத்து எழுதுக :**

அக்பர் தமது பேரரசில் மக்களின் அன்பைப் பெற்றதற்குக் காரணம்

1. அவர் பைராம்கானை ஆதரித்தார்.
2. அவர் தீன் இலாஹி சமயத்தைப் போதித்தார்.
3. அவர் அநேக வெற்றிகளை அடைந்தார்.
4. அவர் எல்லா சமயத்தினரையும் ஆதரித்தார்.

**சுருக்கமாக விடையளிக்கவும் :**

1. இரண்டாம் பானிப்பட் போர் யார் யாருக்கிடையே நடைபெற்றது
2. 'தீன் இலாஹி' என்பது யாது ?
3. இந்தியில் இராமாயணத்தை இயற்றியவர் யார் ?
4. ஔரங்கசீப் இந்துக்களின் பகையை எவ்வாறு தேடிக்கொண்டார் ?
5. மராத்தியர்களை ஒன்றுபடுத்திய மராத்தியத் தலைவர் யார் ?

**IV. விரிவான விடையளிக்கவும் :**

1. அக்பரின் ஆட்சி முறையை விளக்குக.

2. மொகலாயப் பேரரசின் வீழ்ச்சிக்குக் காரணங்கள் யாவை ?

3. மொகலாயர் காலத்துக் கட்டடக்கலை, இலக்கியம் ஆகியவற்றைப் பற்றி எழுதுக ?

## பயிற்சி

1. இந்தியா படத்தில் கீழ்க் கண்ட பேரரசுகளின் பரப்பினைக் குறிப்பிடுக :

   1. அக்பர் 2. ஔரங்கசீப்.

2. மொகலாயக் கட்டடக்கலைக்கு எடுத்துக்காட்டாக உள்ள படங்களைச் சேகரித்து உனது படப் புத்தகத்தில் ஒட்டுக.

# 10. இந்தியாவில் ஆங்கிலேயர் ஆதிக்கம்

*முன்னுரை*

இந்தியாவிற்கும் ஐரோப்பிய நாடுகளுக்குமிடையே நீண்ட நாள்களாக வர்த்தகத் தொடர்பு இருந்து வந்தது. கி. பி. 1498ஆம் ஆண்டு *வாஸ்கோடகாமா* என்னும் போர்ச்சுகீசிய மாலுமி இந்தியாவிற்குக் கடல்வழி கண்டுபிடித்தார். அதன் பின் போர்ச்சு கீஸியரும் டச்சுக்காரரும் வாணிகத்திற்காக இந்தியாவிற்கு வந்தனர். இந்தியாவில் பல இடங்களில் வாணிகத்தலங்களை அமைத்துக்கொள்ள அனுமதி பெற்றனர். இவர்களைத் தொடர்ந்து ஆங்கிலேயர்களும் வாணிகத்திற்காக இந்தியாவிற்கு வரத் தொடங்கினர். கி. பி. 1600ஆம் ஆண்டில் ஆங்கிலேய வர்த்தகர்கள் ஒன்றுகூடி *ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி* என்னும் வர்த்தகச் சங்கத்தைத் தோற்றுவித்தனர். இந்தியாவில் *சூரத், பம்பாய், மசூலிப்பட்டினம், சென்னை, கல்கத்தா* ஆகிய இடங்களில் வாணிகத் தலங்களை அமைத்துக் கொண்டனர்.

ஆங்கிலேயரையடுத்து பிரெஞ்சுக்காரர்களும் வாணிகம் செய்ய நம் நாட்டிற்கு வந்தனர். அவர்கள் அமைத்த வாணிகத் தலங்களில் முக்கியமானது *பாண்டிச்சேரி.* ஆங்கிலேயர்களுக்கும் பிரெஞ்சுக் காரர்களுக்குமிடையே பலத்த வாணிகப் போட்டி ஏற்பட்டது. பிரெஞ்சுக் காரர்கள் இந்தியாவில் தங்களது ஆதிக்கத்தை நிறுவ முயன்றனர். இந்தியாவில் உள்ள உள்நாட்டு மன்னர்களின் விவகாரங்களில் தலையிட லாயினர். சில மன்னர்கள் பிரெஞ்சுக்காரர்களுடைய உதவியை நாடினர். எனவே, ஆங்கிலேயர் அம்மன்னர்களின் எதிரிகளுக்கு உதவியளித்தனர். நாளடைவில் பிரெஞ்சு ஆதிக்கம் வீழ்ச்சியடைந்தது. ஆங்கிலேயரின் செல்வாக்கும் ஆதிக்கமும் ஓங்கியது. வாணிகம் நடத்த வந்த ஆங்கிலேயர்கள் நாளடைவில் இந்தியாவில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றனர்.


## (அ) இராபர்ட் கிளைவ்

இந்தியாவில் ஆங்கிலேயரின் ஆட்சிக்கு அடித்தளமிட்டவர் *இராபர்ட் கிளைவ்* ஆவார். கிழக்கிந்தியக் கம்பெனியில் எழுத்

தராக வேலைக்கமர்ந்த இவர் பின்னர் இராணுவத்தில் சேர்ந்தார். கர்நாடகத்தில் வாரிசு உரிமைப்போர் *முகம்மது அலிக்கும் சந்தா சாகிபுக்கும்* ஏற்பட்டது. சந்தா சாகிபை பிரெஞ்சுக்காரரும், முகம்மது அலியை ஆங்கிலேயரும் ஆதரித்தனர். 1751ஆம் ஆண்டில் கர்நாடக நவாபின் தலைநகரான ஆர்க்காட்டை கிளைவ் கைப்பற்றி முகம்மது அலியை நவாப் ஆக்கினார். அதனால் கர்நாடகத்தில் ஆங்கிலேயரின் செல்வாக்கு ஓங்கியது. பின்னர் வடசர்க்கார் பகுதியைக் கைப்பற்றி ஐதராபாத்திலும் அவர்களது செல்வாக்கை மேம்படுத்தினார். வங்காளத்தில் கி.பி. 1757ஆம் ஆண்டில் நிகழ்ந்த *பிளாசிப்* போரில் கிளைவ் வங்காள நவாபான *சிராஜ் உத்-தௌலாவை* வஞ்சகமாகத் தோற்கடித்தார். அவர் வெற்றிக்கு உதவிய *மீர் ஜாபரை* நவாப் ஆக்கினார். அதற்குப் பரிசாகக் கல்கத்தாவைச் சுற்றியுள்ள இருபத்து நான்கு பர்கானாக்கள் எனப்படும் பகுதியைப் பெற்றார். இப் பகுதியில்தான் ஆங்கிலேயர் முதன்முதலாக இந்தியாவில் ஆட்சி அமைத்தனர். 1758ஆம் ஆண்டில் கிளைவ் வங்காள கவர்னராக நியமிக்கப்பட்டார். அதன்பின் அவர் இங்கிலாந்து சென்றார். கிளைவ் இங்கிலாந்தில் இருக்கும்போது 1764ஆம் ஆண்டில் நடைபெற்ற *பக்ஸார்* போரில் ஆங்கிலேயர் வங்காள நவாப், அயோத்தி நவாப், மொகலாயப் பேரரசர் ஆகியோரைத் தோற்கடித்தனர். அதன் பின்னர் கிளைவ் இந்தியாவிற்குத் திரும்பியதும் 1765ஆம் ஆண்டில் மொகலாய மன்னருடன் கிளைவ் *அலகாபாத்தில்* ஓர் உடன்படிக்கை செய்துகொண்டார். அதன்படி ஆங்கிலேயருக்கு வங்காளம், ஒரிஸ்ஸா, பீகார் ஆகிய மாநிலங்களில் வரி வசூலிக்கும் திவானி உரிமை அளிக்கப்பட்டது. நிதியுரிமையும் பாதுகாப்பு உரிமையும் ஆங்கிலேயர் வசம் வந்தது. நவாப் பெயரளவில்தான் வங்காளத்தின் ஆட்சியாளராக இருந்தார். உண்மையில் முழு அதிகாரமும் ஆங்கிலேயரிடமிருந்தது. இவ்வாறாக வங்காளத்தில் *இரட்டை ஆட்சிமுறை* ஏற்பட்டது. இவ்வாட்சி முறையால் ஆங்கில வியாபாரக் கம்பெனி ஆளும் கம்பெனி ஆயிற்று.



படம் 40. கிளைவ்




படம் 41. கிளைவ் கால இந்தியா

## (ஆ) வாரன் ஹேஸ்டிங்ஸ்

## (கவர்னர் 1772 - 1774, கவர்னர் ஜெனரல் 1774 - 1785)

கிளைவ் இங்கிலாந்துக்குத் திரும்பிச் சென்ற பின் வாரன் ஹேஸ்டிங்ஸ் வங்காள கவர்னராக பதவி ஏற்றார். தாம் பொறுப் பேற்றதும் வங்காள நிர்வாகத்தில் பல சீர்திருத்தங்களைச் செய்தார். *இரட்டை ஆட்சி* முறையை நீக்கினார். வரி வசூலிப்பதைக் கண்காணிக்க ஒவ்வொரு மாவட்டத்திலும் கலெக்டர் என்னும் அதிகாரி ஒருவரை நியமித்தார். மாவட்டங்கள் தோறும் நீதி மன்றங்கள் நிறுவப்பட்டன. கலெக்டர்களே நீதிபதிகளாக பணிபுரிந்தனர். அமைதியைக் காக்கக் காவல்துறை திருத்தி அமைக்கப் பட்டது.



படம் 42. வாரன் ஹேஸ்டிங்ஸ்

ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் நிர்வாகத்தைச் சீர்திருத்த ஆங்கிலப் பாராளு மன்றம் கி. பி. 1773ஆம் ஆண்டில் *ஒழுங்கு முறை சட்டத்தை* இயற்றியது. அதன் படி வங்காள கவர்னர், கவர்னர் ஜெனரலாகப் பதவி உயர்வு பெற்றார். சென்னை, பம்பாய் கவர்னர்கள் அவருடைய ஆணைக்குட்படுத்தப்பட்டனர். கவர்னர் ஜெனரலுக்கு ஆலோசனை கூற நான்கு உறுப்பினர்கள் கொண்ட குழு ஒன்று நிறுவப்பட்டது. வாரன் ஹேஸ்டிங்ஸ் முதல் கவர்னர் ஜெனரலானார்.

ஆங்கில ஆதிக்கத்தை இந்தியாவில் விரிவாக்க வாரன் ஹேஸ்டிங்ஸ் பல போர்களில் ஈடுபட்டார். மராத்தியருடன் நடத்திய முதல் மராத்தியப் போரின் விளைவாக ஆங்கிலேயருக்கு பம்பாய்க்கு அருகிலுள்ள *சால்செட்* தீவு கிடைத்தது. ஆங்கிலேயர்கள் மைசூர் அரசர் *ஹைதர்அலி* இறந்த பின்னர் அவர் மகன் *திப்புசுல்தானுடன்* உடன்படிக்கை செய்து கொண்டார். கி.பி. 1784-ல் இங்கிலாந்து பாராளு மன்றம் *பிட் இந்தியச் சட்டத்தை* நிறைவேற்றியது. இதன்படி இந்தியாவில் கம்பெனியின் அலுவல்களைக் கண்காணிக்க இங்கிலாந்தில் ஆறு உறுப்பினர்கள் கொண்ட போர்ட் ஆப் கண்ட்ரோல் (Board of Control) என்னும் குழு ஒன்று அமைக்கப்பட்டது.


## (இ) காரன்வாலிஸ் பிரபு
## (கி.பி. 1786 - 1793)

வாரன் ஹேஸ்டிங்ஸுக்குப் பிறகு கி.பி. 1786-ல் காரன்வாலிஸ் கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்பட்டார். இவர் ஆரம்பத்தில் இந்திய உள் நாட்டு மன்னர்களின் விவகாரங்களில் தலையிடாக் கொள்கையைப் பின்பற்றினார். ஆட்சி முறையில் பல சீர்திருத்தங்களைச் செய்தார். 1793-ல் இவர் *நிலையான நிலவரித் திட்டத்தை* ஏற்படுத்தினார். இதன்படி நிலங்கள் யாவும் ஜமீன்தார்களுக்குச் சொந்தமாக்கப்பட்டன. நிலவரி வசூலிக்கும் உரிமை அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர்கள் கம்பெனிக்குச் செலுத்தவேண்டிய தொகை நிரந்தரமாக நிர்ணயிக்கப்பட்டது.



படம் 43. காரன்வாலிஸ் பிரபு


மைசூர் மன்னர் திப்புசுல்தான் கி. பி. 1789-ல் ஆங்கிலேயர்களுடன் நட்பு கொண்டிருந்த திருவாங்கூர் மன்னர்மீது படையெடுத்தார். இதனால் மைசூர் மன்னருடன் மீண்டும் போர் மூண்டது. காரன்வாலிஸ் திப்புவின் தலைநகரான சீரங்கப்பட்டணத்தைத் தாக்கினார். இப்போர் *மூன்றாம் மைசூர் போர்* என்றழைக்கப்பட்டது. திப்பு சுல்தான் ஆங்கிலேயருடன் சமாதான உடன்படிக்கை செய்துக்கொண்டார். இதன் பயனாக ஆங்கிலேயருக்கு *சேலம், திண்டுக்கல், மலபார்* ஆகிய பகுதிகள் கிடைத்தன.



படம் 44. வெல்லெஸ்லி பிரபு

## (ஈ) வெல்லெஸ்லி பிரபு
## (கி.பி. 1798 - 1805)

காரன்வாலிஸுக்குப் பின் *சர் ஜான் ஷோர்* கவர்னர் ஜெனரலானார். இவர் தலையிடாக் கொள்கையை முழுவதும் பின்பற்றி நடந்தார். இவருக்குப் பிறகு கி. பி. 1798-ல் *வெல்லெஸ்லி* பதவியேற்றார். இவர் மிகத் திறமை வாய்ந்தவர். இவர் பதவியேற்றபொழுது இந்திய மன்னர்களிடையே ஆங்கிலேயரின்




படம் 45. வெல்லெஸ்லி கால இந்தியா

செல்வாக்கு மிகவும் குன்றியிருந்தது. பிரெஞ்சுக்காரர்களின் செல்வாக்கு மிகுந்திருந்தது. மராத்தியர்கள், திப்பு சுல்தான் மற்றும் சில இந்திய மன்னர்கள் பிரெஞ்சுக்காரர்களின் உதவியைப் பெற்றிருந்தனர். ஆங்கில ஆதிக்கத்தை மீண்டும் நிலை நிறுத்த ஒரு புதிய திட்டத்தை வெல்லெஸ்லி வெளியிட்டார். அதுவே *துணைப் படைத் திட்டம்* ஆகும்.

இத்திட்டத்தின்படி இந்திய மன்னர்கள் ஒவ்வொருவரும் ஆங்கிலப் படை ஒன்றையும், ஆங்கிலப் பிரதிநிதி ஒருவரையும் வைத்துக் கொள்ள வேண்டும். அப்படைகளின் பராமரிப்பிற்காக சில பிரதேசங்களை ஆங்கிலேயருக்கு அளிக்க வேண்டும். ஆங்கிலேயரின் அனுமதியின்றி பிற ஐரோப்பியர்களுடனும், பிற இந்திய மன்னர்களுடனும் எவ்விதத் தொடர்பும் வைத்துக் கொள்ளக் கூடாது. இத்திட்டத்தை ஏற்றுக் கொள்ளும் மன்னருக்கு முழு பாதுகாப்பையும் ஆங்கிலக் கம்பெனி அளிக்கும்.

இத்துணைப் படைத்திட்டத்தை ஹைதராபாத் நைஜாமும் அயோத்தி நவாபும் ஏற்றுக் கொண்டனர். திப்பு சுல்தானும், மராத்தியர்களும் இத் திட்டத்தை ஏற்க மறுத்தனர். கி. பி. 1799-ல் வெல்லெஸ்லி திப்பு சுல்தான் மீது போர் தொடுத்தார். *நான்காம் மைசூர் போர்* என்றழைக்கப்படும் இப்போரில் ஆங்கிலேயர் வெற்றி பெற்றனர். திப்பு சுல்தான் கடைசிவரை போர் புரிந்து உயிரிழந்தார். *கன்னடம், வயநாடு, கோயமுத்தூர்* ஆகிய பகுதிகளை ஆங்கிலேயர் பெற்றனர். மைசூர் பகுதி பழைய இந்து மன்னரான *கிருஷ்ண ராஜ உடையாருக்கு* வழங்கப்பட்டது. வெல்லெஸ்லி காலத்தில் தஞ்சாவூரும் கர்நாடகமும் ஆங்கிலேய அரசுடன் சேர்த்துக் கொள்ளப்பட்டன. ஆங்கிலேயருக்கு ஏற்கனவே சொந்தமாயிருந்த வடசர்க்கார் மாவட்டங்கள், மைசூர் போரின் விளைவாகக் கிடைத்த பகுதிகள், தஞ்சாவூர், கர்நாடகம் ஆகியவற்றை ஒன்றாக இணைத்து *சென்னை மாநிலத்தை* வெல்லெஸ்லி உருவாக்கினார்.

மராத்தியர்களுக்கும், ஆங்கிலேயருக்கும் நடந்த இரண்டாம், மூன்றாம் மராத்தியப் போர்களிலும் ஆங்கிலேயர் வெற்றி பெற்றனர். இதன் விளைவாக மராத்திய மன்னர்களும் வெல்லெஸ்லியின் துணைப் படைத் திட்டத்தை ஏற்றுக் கொண்டனர். இந்தியாவில் ஆங்கிலப் பேரரசை நிலை நாட்டிய பெருமை கிளைவ், வாரன் ஹேஸ்டிங்ஸ் ஆகியோருக்கு அடுத்தபடி வெல்லெஸ்லியைச் சாரும்.

## (உ) ஹேஸ்டிங்ஸ் பிரபு (1813 - 1823)

இந்திய மன்னர்களின் விவகாரங்களில் ஆங்கிலேயர் குறுக்கிடக் கூடாதென்று முதலில் ஹேஸ்டிங்ஸ் பிரபு கருதியிருந்தார். ஆயினும், சூழ்நிலைகள் காரணமாக அவர் போர்களில் ஈடுபட்டு, இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சியினைப் பெருக்கினார்.



படம் 46. ஹேஸ்டிங்ஸ் பிரபு


**1. *நேபாளப் போர்* (1814—1816) :** நேபாளம் இமயமலையின் தென் சரிவில் உள்ளது. அங்கு வாழும் மக்கள் ***கூர்க்கர்கள்*** என்று வழங்கப்படுகின்றனர். அவர்கள் சிறந்த போர் வீரர்கள். அவர்கள் ஆங்கில ஆதிக்கத்திற்குட்பட்ட அயோத்தியில் சில இடங்களைக் கைப்பற்றினர். எனவே, ஹேஸ்டிங்ஸ் பிரபு போர் தொடுத்தார்.

ஆங்கிலப் படைகள் முதலில் தோல்வியடைந்தன. இறுதியில் வெற்றியடைந்து, நேபாளத்துடன் *சகௌலி* என்னும் இடத்தில் உடன்படிக்கை செய்து கொண்டன. அதன்படி நேபாளத்தின் ஒரு சிறிய பகுதி ஆங்கிலேயருக்கு வழங்கப்பட்டது. நேபாளத்தில் ஓர் ஆங்கிலத் தூதுவரை ஏற்றுக்கொள்ள மன்னர் ஒப்புக்கொண்டார்.

**2. *பிண்டாரிகள் : மூன்றாம் மராத்தியப் போர்* (1817—1818) :** கொலை, கொள்ளைக் குற்றங்களில் ஈடுபட்டு மக்களைத் துன்புறுத்தி வந்த *பிண்டாரிகள்* என்னும் கூட்டத்தினரை ஹேஸ்டிங்ஸ் ஒழித்தார். மூன்றாம் மராத்தியப் போரில் ஹேஸ்டிங்ஸ் மராத்தியர்களை ஒடுக்கி, அவர்கள் ஆண்ட பகுதிகளை இணைத்து, பம்பாய் மாகாணத்தை உருவாக்கினார். பீஷ்வா பதவி நீக்கம் செய்யப்பட்டு, உபகாரச் சம்பளம் வழங்கப்பட்டார்.


## (ஊ) டல்ஹௌசி (1848 - 1856)

ஹேஸ்டிங்ஸ் பிரபுவுக்குப் பிறகு பதவி வகித்த கவர்னர் ஜெனரல்களுள் முக்கியமானவர் *டல்ஹௌசி* ஆவார். ஆங்கிலப் பேரரசை விரிவுபடுத்த இவர் போரிடுதல், லாப்ஸ் கொள்கை, நல்லாட்சியில்லா நாடுகளைச் சேர்த்தல் ஆகிய மூன்று முறைகளைக் கையாண்டார்.




படம் 47. டல்ஹௌசி கால இந்தியா

டல்ஹௌசி *சீக்கியர்கள்* மீது போர் தொடுத்தார். மிகக் கடும் போருக்குப்பின் *சீக்கியர்* தோல்வியுற்றனர். பஞ்சாப் முழுவதும் ஆங்கிலேய ஆட்சியின்கீழ் வந்தது. பர்மியப் போரின் விளைவாக இரங்கூன் உட்பட *கீழ் பர்மா* ஆங்கிலேய ஆட்சியோடு இணைக்கப்பட்டது. *லாப்ஸ்* (நாடு இழப்புக்) கொள்கையின்படி இந்திய மன்னர்களுக்குப் பிள்ளைப் பேறு இல்லையென்றால் அவர்களுடைய நாடுகள் ஆங்கில அரசுடன் இணைக்கப்படும் என்று டல்ஹௌசி அறிவித்தார். இக்கொள்கையின்படி *சதாரா, ஜான்ஸி, நாகபுரி* ஆகிய நாடுகள் கம்பெனி அரசுடன் இணைக்கப்பட்டன.



படம் 48. டல்ஹௌசி பிரபு

அயோத்தி நவாப் நாட்டை நல்ல முறையில் ஆட்சி செய்யவில்லை என்று காரணங்காட்டி அயோத்தியை ஆங்கில அரசுடன் சேர்த்துக்கொண்டார். இவ்வாறாக இந்தியா முழுவதும் ஆங்கில ஆதிக்கத்தைப் பரப்பினார். இந்தியாவில் ஆங்கிலப் பேரரசை விரிவாக்கியவர்களுள் டல்ஹௌசிப் பிரபுவும் ஒருவர் ஆவார்.

டல்ஹௌசி இந்தியாவின் முன்னேற்றத்திற்கான சீர்திருத்தங்கள் பலவற்றைச் செய்தார். கல்வியைப் பரப்ப பலதிட்டங்களை வகுத்தார். மாநிலங்களில் பல்கலைக் கழகங்கள் ஏற்படுத்தப்பட்டன. கி. பி. 1853-ல் முதல் முதலில் பம்பாய் முதல் தாணா வரை இருப்புப் பாதை போடப்பட்டது. தபால் தந்தி முறைகள் ஏற்படுத்தப்பட்டன. நெடுஞ்சாலைகளும், கால்வாய்களும் அமைக்கப்பட்டன. கல்வித் துறையும், பொதுப் பணித்துறையும் ஏற்படுத்தப்பட்டன. இச் சீர்திருத்தங்களின் விளைவாக இந்தியாவில் புதிய நாகரிகம் பரவியது.

### *வினாக்கள்*

*I. கோடிட்ட இடங்களை நிரப்புக:*

1. *இந்தியாவில் ஆங்கிலேயரின் ஆட்சிக்கு அடிகோலியவர் ——————— ஆவார்.*

2. *இந்தியாவில் முதல் கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்பட்டவர் ———————*

3. சென்னை மாநிலத்தை முதல் முதலாக உருவாக்கியவர் ————.

4. முதல் முதலாக இந்தியாவில் ————லிருந்து ———— வரையில் இருப்புப்பாதை அமைக்கப்பட்டது.

II. பின் வரும் உட்பிரிவுகளுள் மிகவும் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

வெல்லெஸ்லி பிரபு துணைப் படைத் திட்டத்தைக் கொண்டு வந்ததற்குக் காரணம்

(அ) மராத்தியர்களின் ஆதிக்க வளர்ச்சி

(ஆ) திப்பு சுல்தானின் ஆதிக்க வளர்ச்சி

(இ) ஐதராபாத் நிஜாமின் ஆதிக்க வளர்ச்சி

(ஈ) பிரெஞ்சு பயம்

III. குறுகிய விடைகள் அளிக்கவும் :

1. பிளாசிப் போர் யார் யாருக்கு நடந்தது ?
2. ஒழுங்கு முறைச் சட்டத்தின் முக்கிய விதிகள் யாவை ?
3. துணைப் படைத் திட்டத்தின் விதிகள் யாவை ?
4. நேபாளப் போரை விளக்குக.

IV. விரிவான விடையளிக்கவும் :

1. வங்காளத்தில் ஆங்கிலேயரின் அதிகாரம் எவ்வாறு ஏற்பட்டது ?
2. வாரன் ஹேஸ்டிங்ஸ் பதவிக்காலத்தின் முக்கிய நிகழ்ச்சிகளைக் கூறுக.
3. டல்ஹௌசி நாடு சேர்க்கக் கையாண்ட முறைகளை விவரித்துக் கூறுக.

## பயிற்சி

1. இந்தியப் படத்தில் குறிப்பிடுக.

   (அ) வெல்லெஸ்லி காலத்து ஆங்கிலேய ஆட்சியின் பரப்பு.

   (ஆ) டல்ஹௌசி காலத்து ஆங்கிலேய ஆட்சியின் பரப்பு.

2. இந்தியப் படத்தில் கீழ்க்கண்ட இடங்களைக் குறிக்கவும். சென்னை, பம்பாய், கல்கத்தா, டில்லி, மைசூர்.

# 11. அயலாராட்சியின் பொருளாதார விளைவுகள்

## *முன்னுரை*

பண்டைக் காலத்தில் நம் நாட்டில் பல கைத்தொழில்கள் சிறந்து விளங்கின. ஆடை, அணிவகைகள் செய்வதில் இந்தியர்கள் ஈடிணையற்றவர்களாக விளங்கினார்கள். இந்நாட்டில் நெய்யப்பட்ட பருத்தி, பட்டாடைகளை அயல்நாட்டார் விரும்பி வாங்கினார்கள். டாக்கா மஸ்லின், காஷ்மீர் பட்டு, சால்வைகள், முர்ஷிதாபாத் தந்தச் சாமான்கள் போன்ற பொருள்களுக்கு உலகச் சந்தையில் பெருமதிப்பு இருந்தது.

ஆங்கிலேயராட்சி இந்தியாவில் ஏற்பட்டபின் இந்தியாவில் நடைபெற்றுவந்த பண்டைத் தொழில்கள் யாவும் அழியத் தொடங்கின. இங்கிலாந்தில் தொழிற்புரட்சி ஏற்பட்டது. அதன் விளைவாக அங்கு ஆலைகள் பல நிறுவப்பட்டன. அவ்வாலைகளுக்குத் தேவையான பருத்தி, பட்டு போன்ற மூலப் பொருள்கள் இந்தியாவிலிருந்து கொண்டு செல்லப்பட்டன. இங்கிலாந்தின் செய்பொருள்கள் யாவும் இந்தியாவில் குவிக்கப்பட்டன. இங்கிலாந்து நாட்டுப் பொருள்களை விற்பனை செய்யும் சந்தையாக இந்தியா மாற்றப்பட்டது. இந்தியத் தொழில்கள் நாளடைவில் அழிவுற்றன. இந்தியப் பொருளாதாரம் குன்றியது.

மேலும், இந்தியப் பொருள்களை வாங்கி ஆதரித்து வந்த இந்திய மன்னர்கள் ஆங்கில ஆட்சியில் தங்கள் இராச்சியங்களை இழந்ததால், அவர்களது ஆதரவை இந்தியத் தொழில்கள் இழந்தன.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இந்தியர்களில் பலர் ஆங்கிலேய நாகரிகத்தைப் பின்பற்றி, ஆங்கிலேயர்களைப்போல் ஆடைகள் அணியவும், வாழ்க்கை நடத்தவும் முற்பட்டனர். அவர்கள் ஆங்கில நாட்டுப் பொருள்களையே வாங்கினபடியால், நமது இந்தியத் தொழில்கள் அழிந்தன.

## *இந்தியத் தொழில்கள் அழிதல்*

18ஆம் நூற்றாண்டுக்கு முன் இந்தியாவில் பல தொழில்கள் சிறந்து விளங்கின. பருத்தி, பட்டாடை நெய்தல், கம்பள வேலை, தந்த

வேலை, மர வேலை, உலோகக் கலன்கள் செய்தல், அணிகலன் செய்தல் போன்ற பல தொழில்கள் சிறப்புற்றிருந்தன. டாக்கா நகர் மஸ்லின் துணிகள், காஷ்மீரத்துப் பட்டு, சால்வைகள், டெல்லி, ஆக்ரா, காசிப் பட்டாடைகள், பூனா, காசி, ஐதராபாத், விசாகப்பட்டினம், தஞ்சாவூர் ஆகிய இடங்களில் செய்யப்பட்ட செம்பு, வெண்கலப் பாத்திரங்கள், ஜெயபுரி சலவைக்கற் பொருள்கள், மைசூர் சந்தனமரப் பொருள்கள், மூர்ஷிதாபாத் தந்தப் பொருள்கள் ஆகியவை புகழ்பெற்று விளங்கின. இப்பொருள் அனைத்தையும் வெளி நாட்டினர் விரும்பி வாங்கினர். இத்தொழில்களில் இந்தியர்கள் காட்டிய தொழில் நுட்பத் திறமையும் கைவண்ணமும் வியக்கத்தக்கதாக இருந்து வந்தது. 18ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயர் ஆட்சி இந்தியாவில் ஏற்பட்ட பின் அத்தொழில்கள் யாவும் அழிவுற்றன.

வாணிகம் செய்வதற்காக இந்தியாவிற்கு வந்த ஆங்கிலேயர்கள் நாளடைவில் நாட்டைக் கைப்பற்றுவதிலேயே நாட்டம் செலுத்தினர். ஆங்கிலேயரின் ஆதிக்கத்தால் நம் நாட்டின் தொழில்களும் வாணிகமும் நலிவுற்றன. இங்கிலாந்தில் ஏற்பட்ட தொழிற் புரட்சியின் விளைவாக பல புதிய தொழிற்சாலைகள் அங்கு தோன்றின. லங்காஷயர் பகுதிகளில் பருத்தி ஆலைகள் நிறுவப்பட்டன. மான்செஸ்டர் பருத்தி ஆலைத் தொழிலுக்குப் புகழ்பெற்ற இடமாக விளங்கிற்று. இங்கிலாந்தின் ஆலைத் தொழில்களுக்குத் தேவையான மூலப் பொருள்கள் யாவும் இந்தியா விலிருந்து எடுத்துச் செல்லப்பட்டன. இந்திய மண்ணில் விளைந்த நீண்ட இழைப்பருத்தி இங்கிலாந்திற்கு ஏற்றுமதி செயயப்பட்டது. அங்குள்ள நெசவாலைகள் தங்குதடையின்றி இயங்க இது உதவிற்று. பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் அமைக்கப்பட்ட இருப்புப்பாதைகள் அவர்களது வாணிக வளர்ச்சிக்குப் பெரிதும் உதவின. நம் நாட்டின் கச்சாப் பொருள்கள் ரயில்கள் மூலமாக துறைமுகங்களுக்கு எடுத்துச் செல்லப் பட்டு அங்கிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டன.

இங்கிலாந்தின் உற்பத்திப் பொருள்கள் இந்தியாவில் ஏராளமாகக் குவிக்கப்பட்டன. இயந்திரங்களால் நெய்யப்பட்ட ஆடைகள் கையால் செய்யப்பட்ட இந்திய ஆடைகளைவிட மலிவாக இருந்தன. இந்தியத் துணிகளின் விற்பனை குறைந்தது. நம் நாட்டு நெசவுத் தொழில் நலிவுற்றது. இங்கிலாந்து ஆலைகளில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் மலிவாகவும் நேர்த்தியாகவும் இருந்ததால் அப்பொருள்களை இந்தியர்கள் மனமுவந்து வாங்கினார்கள். இங்கிலாந்தின் செய்பொருள்

களோடு இந்தியப் பொருள்கள் போட்டியிட முடியவில்லை. இங்கிலாந்தின் உற்பத்திப் பொருள்கள் மிகுதியானவை இந்தியாவில் இறக்குமதி செய்யப் பட்டன. இங்கிலாந்தின் உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்யும் சந்தையாக இந்தியா பயன்படுத்தப்பட்டது. இக்காரணங்களால் இந்தியத் தொழில்களும் வாணிகமும் நலிவுற்றன. கைத்தொழில்கள் சிறப்புற்று விளங்கிய நம் நாட்டில் பொருளாதாரச் சீர்கேடு ஏற்பட்டது.

*பொருளாதார விளைவு*

ஆங்கிலேயராட்சியினால் இந்தியப் பொருளாதாரத்திற்கு விளைந்த பெருங்கேடு இந்தியாவின் செல்வம் இங்கிலாந்திற்கு எடுத்துச் செல்லப்பட்டதேயாகும். பிரிட்டிஷ் ஆட்சிக்கு முன்பும் இந்தியாவில் குஷாணர்கள், அரேபியர்கள், துருக்கியர், மொகலாயர் போன்ற வெளி நாட்டினர் ஆட்சிசெய்து வந்தனர். அவர்கள் இந்தியாவிலேயே தங்கிய படியால், இந்தியாவின் செல்வம் வெளிநாடுகளுக்குப் போகவில்லை. ஆனால், ஆங்கில ஆட்சியில் கவர்னர் ஜெனரல், கவர்னர், மேலும் சிவில் ராணுவ ஆங்கில அதிகாரிகளுக்கு கொடுக்கப்பட்ட சம்பளம், பென்ஷன் ஆகியவை இந்தியாவிலிருந்து வெளியே சென்றது. கிழக்கு இந்தியக் கம்பெனி நடத்திய பல போர்களின் செலவுகளுக்கு, இந்தியா இங்கிலாந் திற்கு பணம் அளிக்க வேண்டியிருந்தது. இவ்வாறு இந்தியாவின் செல்வம் கரைந்தது. இந்தியப் பொருளாதாரம் சீர்குலைந்தது.

இந்தியாவில் நடைபெற்றுவந்த பண்டைத் தொழில்கள் அழிவுற்றதால் பல தொழில்கள் நலிந்தன; தொழில்திறமை குன்றியது. நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டது. மக்களின் வாழ்க்கைத்தரம் குறைந்தது.

வேலையிழந்த நெசவாளர்களும் கைத்தொழில் வினைஞர்களும் விவசாயத் தொழிலில் ஈடுபடலாயினர். வேளாண்மைத் தொழில் இந்தியர்களின் முதன்மையான தொழிலாக ஆயிற்று. இந்தியாவின் பொருளாதாரம் விவசாயப் பொருளாதாரமாக மாறியது. இந்தியா ஒரு விவசாய நாடாக மாறிற்று. இவ்வாறு, அயலார் ஆட்சியின் விளைவாக இந்தியப் பொருளாதாரநிலை குன்றியது.

### *வினாக்கள்*

**I. *கோடிட்ட இடங்களை நிரப்புக:***

*1. டாக்கா ——— துணி உற்பத்திக்குப் புகழ் பெற்றது.*

2. முர்ஷிதாபாத் ———— தொழிலுக்குப் பெயர் பெற்றிருந்தது.

3. மைசூர் ———— மரப் பொருள்களுக்குப் புகழ்பெற்றது.

4. இங்கிலாந்து நாட்டின் நெசவாலைக்குத் தேவையான ———— இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டது.

II. குறுகிய விடைகள் அளிக்கவும்.

1. ஆங்கிலேயராட்சி ஏற்படுமுன் நம் நாட்டின் கைத்தொழில்கள் எந்நிலையிலிருந்தன ?

2. நம் நாட்டின் நெசவுத் தொழில் நசிவுற முக்கிய காரணம் யாது ?

3. இந்தியப் பொருளாதாரம் எவ்வாறு விவசாயப் பொருளாதாரமாக மாறியது ?

III. விரிவான விடைகள் அளிக்கவும் :

1. இங்கிலாந்தில் ஏற்பட்ட தொழிற்புரட்சி இந்தியப் பொருளாதாரத்தை எவ்வாறு பாதித்தது ?

2. ஆங்கிலேயர் ஆட்சியினால் இந்தியக் கைத்தொழில்கள் எவ்வாறு அழிவுற்றன ?

## பயிற்சி

1. ஆங்கிலேயர் வருகைக்கு முன் நம் நாட்டு மக்களின் உடை, அணிகலன்கள், கருவிகள் போன்றவற்றைப் பொருட்காட்சிக்குச் சென்று பார்த்து வரவும்.

2. நம் நாட்டின் ஏற்றுமதி, இறக்குமதிப் பொருள்களைப் பற்றிய பட்டியல் ஒன்று தயாரிக்கவும்.

# 12. முதல் இந்திய விடுதலைப்போர் (1857)

***முன்னுரை***

வாணிகர்களாக இந்தியாவிற்கு வந்த ஆங்கிலேயர் நாளடைவில் ஆட்சியாளர்களாக மாறினர். இந்திய மக்களிடையே காணப்பட்ட ஒற்றுமையின்மையைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டனர். ஆங்கிலேயரின் ஆதிக்கம் நாடு முழுவதும் பரவியது. 1757-ல் நடைபெற்ற பிளாசிப் போரிலிருந்து 1857 வரையிலான ஒரு நூற்றாண்டுக்குள் இந்திய வரலாற்றில் ஒரு பெரும் மாற்றம் ஏற்பட்டது.

இந்தியர்கள் ஆங்கிலேயரின் ஆட்சியினின்று விடுபட விழைந்தனர். மக்கள் உள்ளத்தில் விடுதலை உணர்ச்சி வளரத் தொடங்கியது. நீண்ட நாள்களாக இந்திய மக்களின் உள்ளத்தில் இருந்த விடுதலை உணர்ச்சி கி. பி. 1857ஆம் ஆண்டில் மாபெரும் புரட்சியாக மாறியது. ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக ஏற்பட்ட உரிமைப் போராட்டங்களில் இதுவே முதலாவதாகும். இந்திய வரலாற்றில் முதல் விடுதலைப்போர் என வழங்கப்படும் இப்போராட்டத்தினைப் பற்றி இப்பாடத்தில் படிப்போம்.

## *போருக்கான காரணங்கள்*

### I. *அரசியல் காரணங்கள்*

வெல்லெஸ்லியின் துணைப்படைத் திட்டமும், டல்ஹௌசியின் லாப்ஸ் கொள்கையும் இந்திய மன்னர்களின் உரிமைகளைப் பறித்தன. இவை மன்னர்கள், மக்களிடையே ஆங்கில ஆட்சியின் மீது மிகுந்த வெறுப்பையும் அதிருப்தியையும் உண்டாக்கின. இந்திய மன்னர்களிடையே அச்சம் அதிகரித்தது. மக்கள் தங்கள் மன்னர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியைக் கண்டு மனங் குமுறினர். சுவீகாரம் செய்து கொள்ளும் உரிமை மறுக்கப்பட்டதால் *ஜான்சி ராணி இலட்சுமிபாயும்*, உதவித்தொகை நிறுத்தப்பட்டதால் பீஷ்வா இரண்டாம் பாஜிராவின் தத்துப் புத்திரரான *நானாசாகிப்பும்*, அயோத்தியை ஆங்கிலப் பேரரசுடன் இணைத்துக்கொண்டதால் ***அயோத்தி நவாப்பும்***, பதவி இழந்த மொகலாய மன்னர் *பகதூர்*

ஷாவும், ஆங்கிலேயரின் பகைவர்களானார்கள். மன்னர்கள் நாடிழந்த தால் மக்கள் நில உரிமையையும், உயர் பதவிகளையும் இழந்தனர். அவர்களும் ஆங்கிலேயர்களின் எதிரிகளாக மாறினர்.

## II. *சமூகக் காரணங்கள்*

ஆங்கிலேயர்கள் செய்த சமூகச் சீர்திருத்தங்களால் தங்களது பண்டையப் பண்பாடு பாதிக்கப்படும் என இந்தியர்கள் அஞ்சினர். கிறிஸ்தவப் பாதிரிமார்கள் இந்தியாவில் தங்களது சமயத்தைப் பரப்புவதில் தீவிரம் காட்டினர். ஆங்கிலேயர்கள் அவர்களுக்கு ஊக்கமளித்து உதவினார்கள். இத்தகைய செயல்களால் தங்கள் சமயங்களுக்குப் பேராபத்து ஏற்படுவதாக இந்துக்களும் முஸ்லிம்களும் கருதினார்கள்.

## III. *பொருளாதாரக் காரணங்கள்*

ஆங்கில ஆட்சியின் விளைவால் நம் நாட்டின் கைத்தொழில்கள் அழிந்தன. ஆயிரக் கணக்கான மக்கள் வேலை இழந்தனர். மக்களிடையே தங்களது எதிர்கால நல்வாழ்வு பற்றிய அவநம்பிக்கையும், அச்சமும் பரவின. ஆங்கில அதிகாரிகளுக்கும் பொதுமக்களுக்கு மிடையே நெருங்கிய தொடர்பு ஏற்படவில்லை. தங்கள் குறைகளை அரசிடம் தெரிவிக்கவோ அவற்றை நீக்கிக்கொள்ளவோ எவ்வித வாய்ப்பும் வசதியும் இல்லை. ஆங்கிலேயரின் பொருளாதாரக் கொள்கை இந்திய மக்களைப் பெரிதும் பாதித்தது.

## IV. *இராணுவக் காரணங்கள்*

இராணுவத்தில் பணியாற்றிவந்த இந்தியப் போர் வீரர்களுக்கு உயர் பதவிகள் மறுக்கப்பட்டன. குறைந்த ஊதியமே கொடுக்கப்பட்டது. டல்ஹெளசி பல அரசுகளை ஆங்கிலப் பேரரசுடன் இணைத்ததால் அவ்வரசுகளின் படைகள் கலைக்கப்பட்டன. பல இந்தியப் போர் வீரர்கள் வேலை இழந்தனர்.

## V. *உடனடிக் காரணம்*

போர் வீரர்களுக்குப் புதிதாக வழங்கப்பட்ட *என்பீல்ட்* துப்பாக்கித் தோட்டாக்கள், மக்களின் உள்ளத்தில் வெறுப்புணர்ச்சியை ஊட்டியது. அத்தோட்டாக்களில் பசுவின் கொழுப்பும் பன்றியின் கொழுப்பும் தடவப் பட்டிருந்தன. பசுவைப் புனிதமாகக் கருதும் இந்து வீரர்களும், பன்றியை வெறுக்கும் முஸ்லிம் வீரர்களும் தங்களுக்கு இழைக்கப்பட்ட அவமான

மென்று கருதினர். அவர்களது சமய உணர்வை அழிக்க ஆங்கிலேயர்கள் கையாண்ட திட்டமிட்ட முயற்சி என்று எண்ணினார்கள். எனவே இத் தோட்டாக்களைத் தொட மறுத்தனர். இதுவே விடுதலைப் போர் ஏற்படுவதற்கு உடனடிக் காரணமாக அமைந்தது. இப்போரில் இந்துக் களும் முஸ்லிம்களும் ஒன்றாக இணைந்து ஆங்கிலேயரை எதிர்த்துப் போர் புரிந்தனர்.

## போரின் போக்கு

கல்கத்தாவிற்கு அருகேயுள்ள *பாரக்பூர்* என்னுமிடத்தில் முதலில் கிளர்ச்சி தோன்றியது. அங்கு *மங்களபாண்டே* என்ற இந்திய வீரர் ஆங்கிலேய அதிகாரி ஒருவரை வெட்டி வீழ்த்தினார். அவரை ஆங்கிலேயர்கள் கொன்றனர். இதனால் ஆத்திரமடைந்த இந்தியப் போர் வீரர்கள் மே மாதம் 10ஆம் நாள் *மீரத்* நகரில் வெளிப்படையாகக் கிளர்ச்சியைத் தொடங்கினார்கள். சிறைகளிலிருந்து இந்திய வீரர்களை விடுவித்தனர். ஆங்கிலேயர் பலரைக் கொன்று குவித்தனர். டெல்லி சென்று அந்நகரைக் கைப் பற்றினர். பதவி இழந்த மொகலாய மன்னர் *பகதூர் ஷா*வை இந்தியப் பேரரசர் என அறிவித்தனர்.



படம் 49. ஜான்சிராணி இலட்சுமிபாய்

மீரத்தில் தொடங்கிய கிளர்ச்சி லட்சுமணபுரி, கான்பூர், ஆக்ரா, அயோத்தி, ஜான்சி, குவாலியர், ரோஹில்கண்ட், பந்தல்கண்ட் ஆகிய இடங்களுக்குப் பரவியது. கான்பூரில் நடந்த போராட்டத்திற்கு *நானாசாகிப்* தலைமை தாங்கினார். அவருக்கு உதவிய அவரது நண்பர் *தாந்தியா தோபே* மிகுந்த வீரத்துடன் போராடினார். பந்தல்கண்ட் பகுதியில் போராட்டத்தின் தலைமையை ஏற்ற *ஜான்சி ராணி இலட்சுமிபாய்* வெள்ளையரை எதிர்த்து வீரமுடன் போராடினார். அப் போரில் வீரமரணமடைந்தார். தாய்நாட்டின் விடுதலைக்காக, போர்க் கொடியேந்தி வீரமரணமடைந்த அவ்வீராங்கனையின் புகழை இன்றும் நம்

நாட்டு மக்கள் போற்றி வருகின்றனர். ஆயிரக்கணக்கான வீரர்கள் இப்போரில் உயிரிழந்தனர். முடிவில் ஆங்கிலேயர்களே இப்போரில் வெற்றி பெற்றனர். டெல்லி மீண்டும் ஆங்கிலேயர் வசமாயிற்று. பகதூர் ஷா கைது செய்யப்பட்டு ரங்கூனுக்கு அனுப்பப்பட்டார்.

## தோல்விக்குக் காரணங்கள்

இக்கிளர்ச்சி தோல்வியடைந்ததற்குப் பல காரணங்கள் இருந்தன. இந்தியப் படைகளை ஒன்றுசேர்த்து திட்டமிட்டு நடத்துவதற்கு திறமை வாய்ந்த தலைவர்கள் இல்லாதது ஒரு பெருங்குறையாகும். இந்தியா முழுவதிலும் இக்கிளர்ச்சி பரவவில்லை. நர்மதையாற்றுக்குத் தெற்கேயுள்ள பகுதிகள் இப்போராட்டத்தில் கலந்துகொள்ளவில்லை. இந்திய வீரர்களிடம் புதுமையான போர்க் கருவிகளோ பணபலமோ இல்லை. ஆங்கிலேயரிடமோ ஏராளமான போர்க் கருவிகளும் பணமும் குவிந்து கிடந்தன. எனவே,முதல் விடுதலைப் போர் இந்தியர்களின் தோல்வியில் முடிந்தது. எனினும், இப்போர் இந்திய வரலாற்றில் ஒரு புதிய திருப்பத்தைத் தோற்றுவித்தது. உறங்கிக் கிடந்த மக்களிடையே ஒரு விழிப்புணர்வு தோன்றியது. நாடு முழுவதும் விடுதலை உணர்ச்சி பரவத் தொடங்கியது.



படம் 50. *கானிங் பிரபு*

## போரின் விளைவுகள்

முதல் இந்திய விடுதலைப் போரின் விளைவாக ஆங்கிலேயரின் ஆட்சி முறையில் மாற்றம் ஏற்பட்டது. இந்தியாவில் ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சி முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. ஆங்கில அரசாங்கமே நேரிடையாக இந்திய ஆட்சி நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டது. கி. பி. 1858-ல் இங்கிலாந்து பாராளுமன்றத்தில் இதற்காக ஒரு சட்டம் இயற்றப்பட்டது. இந்திய நிர்வாகத்தைக் கண்காணிக்க இங்கிலாந்தில் ஒரு செயலாளர் நியமிக்கப்பட்டார். அவருக்கு உதவியாக 15 உறுப்பினர்கள் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டது. இந்திய கவர்னர்-ஜெனரல் *வைசிராய்* அல்லது *அரசப் பிரதிநிதி* என அழைக்கப்பட்டார். *கானிங் பிரபு* இந்தியாவின் முதல் வைசிராய் ஆக நியமிக்கப்பட்டார்.

கி. பி. 1858ஆம் ஆண்டு நவம்பர் முதல் நாளன்று **விக்டோரியாப் பேரரசி** ஓர் அறிக்கையை வெளியிட்டார். அமைதியை நிலைநாட்டி மக்களின் நலனைப் பாதுகாப்பதே அரசின் குறிக்கோள் என அறிவிக்கப்பட்டது. இந்தியர்களின் சமயக் கொள்கைகளில் அரசு தலையிடாது என்றும் லாப்ஸ் கொள்கை கைவிடப்படும் என்றும், இந்தியருக்கு அரசாங்கப் பதவிகள் அளிக்கப் படுமென்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப் பட்டது. போராட்டத்தில் கலந்துகொண்ட இந்திய வீரர்களில் ஒருசிலரைத் தவிர மற்ற வர்கள் விடுவிக்கப்பட்டனர்.



படம் 51.
விக்டோரியா மகாராணியார்

இப்பேரறிக்கை இந்திய மக்களின் அச்சத்தைப் போக்கி அவர்களது நல்வாழ்வு பற்றிய நம்பிக்கையை அளிப்பதாக அமைந்தது. முதல் வைசிராயாக இருந்த கானிங் பிரபு இந்திய மக்களிடம் மிகுந்த கருணை காட்டியபடியால் **கருணைமிகு கானிங்** என அவர் அழைக்கப்பட்டார்.

### *வினாக்கள்*

**I. கோடிட்ட இடங்களை நிரப்புக :**

1. இந்தியாவின் முதல் விடுதலைப் போர் ———— ஆம் ஆண்டில் நடைபெற்றது.
2. கான்பூர் கிளர்ச்சிக்கு ———— தலைமை தாங்கினார்.
3. இந்திய முதல் விடுதலைப் போரின் புரட்சி வீரர்கள் ———— என்பவரை இந்தியப் பேரரசராக அறிவித்தனர்.
4. இந்தியாவின் முதல் வைசிராய் ———— .

**II. கீழ்க்கண்ட விடைகளில் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக :**

முதல் இந்திய விடுதலைப் போர் தோல்வி அடைந்ததற்கு முக்கிய காரணம்

(அ) இந்தியர்களிடம் திறமையான தலைவர்கள் இல்லை.

(ஆ) இந்திய வீரர்களுக்கு நல்ல ஆயுதங்கள் இல்லை.

(இ) நாடு முழுவதும் ஆங்கிலேயரை எதிர்க்கவில்லை.

(ஈ) ஆங்கிலேயருக்குப் பணபலம் அதிகம்.

III. குறுகிய விடை அளிக்கவும்:

1. முதல் இந்திய விடுதலைப் போருக்கு உடனடியான காரணம் யாது?
2. முதல் இந்திய விடுதலைப் போரில் பங்கேற்ற இந்தியத் தலைவர்கள் யாவர்?
3. முதல் இந்திய விடுதலைப் போரின் முக்கிய விளைவு யாது?
4. விக்டோரியாப் பேரரசியின் அறிக்கையின் முக்கிய அம்சங்கள் யாவை?

IV. விரிவான விடையளிக்கவும்:

1. முதல் இந்திய விடுதலைப் போரின் அரசியல் காரணங்கள் யாவை?
2. முதல் இந்திய விடுதலைப் போரின் போக்கினை விவரிக்கவும்.
3. முதல் இந்திய விடுதலைப் போர் தோல்வியுற்றதேன்?

## பயிற்சி

1. இந்திய முதல் விடுதலைப் போர் நடைபெற்ற இடங்களை இந்தியப் படத்தில் குறிப்பிடுக.
2. இந்திய முதல் விடுதலைப் போரில் போராடிய இந்திய வீரர்களின் படங்களைச் சேகரித்து உன்னுடைய படப் புத்தகத்தில் ஒட்டவும்.

# 13. மேல்நாட்டுக் கல்வியும் இந்தியப் பண்பாடும்

***முன்னுரை***

ஆங்கிலேய ஆட்சியின் விளைவாக இந்தியாவில் மேல்நாட்டுக் கல்வியும் கருத்துகளும் பரவின. அவற்றின் செல்வாக்கு இந்தியர்களின் சமய, சமூகத் துறைகளில் ஏற்படலாயிற்று. கல்வி வளர்ச்சியின் பயனாக இந்தியர்கள் தங்கள் நாட்டின் பண்டைய வரலாற்றுச் சிறப்புகளையும் பெருமைகளையும் நூல்கள் வாயிலாக உணரத் தொடங்கினர். தேசிய உணர்வும் நாட்டுப் பற்றும் வளர்ந்தன. இருப்புப்பாதை, அஞ்சல் தந்தி வசதிகளினால் நாட்டில் பரவியிருந்த இந்தியர்களிடையே தொடர்பு கொள்வது எளிதாயிற்று. இந்திய மக்களனைவரும் ஒரே நாட்டினர் என்ற உணர்வு பரவியது. ஆங்கிலக் கல்வி அவ்வொற்றுமையை மேலும் வளர்த்தது.

இந்திய சமூகத்தில் அந்நாளில் பல குறைபாடுகள் காணப்பட்டன. இளமை மணம், கைம்பெண் மணம் மறுக்கப்படுதல், சதி அல்லது உடன் கட்டையேறுதல், சாதிப் பிரிவுகள் முதலிய குறைகள் இருந்தன. இந்திய மக்களின் சமூக, சமயப் பழக்க வழக்கங்களில் காணப்பட்ட குறைபாடுகளை அகற்றப் பல பெரியார்கள் பாடுபட்டனர். இவர்கள் இந்திய சமூகத்திலிருந்த குறைகளைக் களைந்தும், ஆங்கிலப் பண்பாட்டில் காணப்பட்ட சில நல்ல கூறுகளை ஏற்றுக்கொண்டும், புதிய இந்தியாவை உருவாக்க முயன்றனர். அவர்களாற்றிய சிறந்த சமூகப் பணிகளைப்பற்றி இப்பாடத்தில் படிப்போம்.

## *பிரம்ம சமாஜம்*

### *இராசாராம் மோகன்ராய் (1774—1833)*

இந்து சமய *சீர்திருத்தவாதிகளிலே* முதன்மையானவரும் இந்து மறுமலர்ச்சியின் தந்தையாகவும் விளங்கியவர் ***இராசாராம் மோகன் ராய்*** ஆவார்.

வங்கத்திலுள்ள *பர்துவான்* மாவட்டத்தில் ***ராதா நகர்*** என்ற ஊரில் 1774ஆம் ஆண்டில் இராசாராம் மோகன்ராய் பிறந்தார்.

மக்களின் சமயம், பழக்க வழக்கங்கள் ஆகியவற்றைத் தெரிந்துகொள்ளப் பல இடங்களில் பயணம் செய்தார். பல மொழிகளைக் கற்றார்.

கல்கத்தாவில் அவர் வாழ்ந்தபொழுது இந்துக்களின் உருவ வழிபாட்டையும், உடன்கட்டையேறும் பழக்கத்தையும் கண்டித்துப் பிரச்சாரம் செய்தார். இளம் கைம்பெண்களின் மறு மணத்தை மக்களிடையே வற்புறுத்திவந்தார். தமது சீர்திருத்தக் கருத்துகளைப் பல மொழிகளிலும் நூல்களாக வெளியிட்டார். அவரது இடைவிடாத பிரச்சாரத்தின் விளைவாக 1829-ல் *வில்லியம் பெண்டிங் பிரபு* காலத்தில் சதி அல்லது உடன்கட்டை ஏறுவதைத் தடுக்கும் சட்டம் இயற்றப்பட்டது.



படம் 52.
இராசா ராம் மோகன்ராய்

ஆங்கில மொழியைக் கற்று அதில் தேர்ச்சியடைந்தால் மேல் நாட்டு அரசியல், அறிவியல், பொருளாதார நூல்களைக் கற்று நம் நாட்டு மக்கள் முன்னேற முடியும் என்பது அவர் கருத்து. எனவே, ஆங்கிலக் கல்வி நம் நாட்டில் பரவுவதற்கு அரசாங்கம் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளை அவர் ஆதரித்தார்.

இராசாராம் மோகன்ராய் 1828ஆம் ஆண்டு பிரம்ம சமாஜம் என்ற இயக்கத்தைத் தோற்றுவித்தார். எல்லாச் சமயங்களின் சிறந்த கருத்துகளையும் கொண்ட அமைப்பாக இது விளங்கியது. ஒரே கடவுளான பரம்பொருளை வழிபடுவதே இச்சபையின் நோக்கம். அறிஞர்கள் பலர் இவ்வியக்கத்தை ஆதரித்தனர். நாளடைவில் நாடெங்கிலும் இவ்வியக்கம் பரவியது. 1833ஆம் ஆண்டில் அவர் இயற்கை எய்தினார்.

## *ஆரிய சமாஜம்*

### *தயானந்த சரஸ்வதி (1824—1883)*

ஆரிய சமாஜத்தை நிறுவியவர் *சுவாமி தயானந்த சரஸ்வதி* ஆவார். *வேத காலத்திற்குத் திரும்புங்கள்* என்பது ஆரிய சமாஜத்தின் அழைப்பாகும். வேதத்தில் கூறப்பட்டுள்ளபடி சமுதாயத்தைத் திருத்தி அமைக்க வேண்டுமென்பது ஆரிய சமாஜத்தின் நோக்கம்.

தயானந்தரின் இயற்பெயர் *மூலசங்கரர்*. இவர் குஜராத் மாநிலத்தில் 1824ஆம் ஆண்டில் பிறந்தார். வடமொழியில் சிறந்த புலமை பெற்றிருந்தார். 1875ஆம் ஆண்டு பம்பாயில் ஆரிய சமாஜத்தை நிறுவினார். வேதங்களை மொழிபெயர்த்து நூல்களாக எழுதினார். அவற்றுள் முக்கியமானது *சத்யார்த்த பிரகாசம்* என்ற நூலாகும்.



படம் 53.
சுவாமி தயானந்த சரஸ்வதி

பிரம்ம சமாஜத்தைப போன்றே ஆரிய சமாஜமும் 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்'' என்ற கொள்கையைப் பரப்பியது. பெண் கல்வி, கைம்பெண் திருமணம், ஆண் பெண் **சம உரிமை** ஆகியவற்றை வலியுறுத்தியது. உருவ வழிபாட்டையும் இளமை மணத்தையும் எதிர்த்தது. இந்து சமயத்திலிருந்து பிரிந்து வேறு சமயத்தைத் தழுவியவர்களை மீண்டும் இந்து சமயத்தில் சேர்ப்பதற்காக ஆரிய சமாஜத்தில் *சுத்தி இயக்கம்* ஏற்படுத்தப்பட்டது. இந்தியர்களிடையே சமய, சமூக, தேசிய ஒற்றுமையை ஏற்படுத்த இவ்வியக்கம் பெரிதும் உதவியது.

இந்து சமுதாயத்தின் ஆற்றல் மிக்க பெருந்தலைவராக சுவாமி தயானந்தர் திகழ்ந்தார். ஆரிய சமாஜத்தின் வாயிலாகப் பல கல்லூரி களையும், குருகுலங்களையும், அனாதை ஆசிரமங்களையும் இந்தியாவில் நிறுவினார். ஆரிய சமாஜத்தின் பணிகள் மக்களின் தேசிய எழுச்சிக்கும் சமுதாய மறுமலர்ச்சிக்கும் அடிகோலின. 1883ஆம் ஆண்டில் தயானந்தர் உயிர் நீத்தார். அவரது மறைவுக்குப்பின் *லாலா லஜபதிராய், பண்டித குருதத்தர், சுவாமி சிரத்தானந்தர்* போன்ற பெரியார்கள் அவரது பணிகளை வளர்த்தனர்.

## இராமகிருஷ்ண இயக்கம்

### I. *இராமகிருஷ்ண பரமஹம்சர்* (1836—1886)

இந்து சமய மறுமலர்ச்சிக்குப் பாடுபட்ட இயக்கங்களில் *இராம கிருஷ்ணரின் இயக்கம்* முதன்மையானதாகும். 'எல்லா சமயங்களின் குறிக்கோளும் ஒன்றே. பல்வேறு வழிகளைப் பின்பற்றிய போதிலும் அவற்றின் நோக்கம் ஒன்றே' என்று *இராமகிருஷ்ணர்* கருதினார்.

இராமகிருஷ்ணர் ஹூக்ளி மாவட்டத்திலுள்ள *காமர்புகூர்* என்ற சிறிய கிராமத்தில் 1836-ல் பிறந்தார். தமது 17ஆம் வயதில் அவர் கல்கத்தாவிற்கு வந்தார். கல்கத்தா விற்கருகிலுள்ள *தட்சிணேசுவரத்தில்* காளி கோவில் பூசாரியாகச் சில ஆண்டுகள் இருந்தார். அவருக்குக் காளியிடம் அளவு கடந்த பக்தி ஏற்பட்டது. அவரது தவ வலிமையை அறிந்த பலர் அவரிடம் வந்து ஆன்மிக ஞானம் பெற்றனர்.



படம் 54. இராமகிருஷ்ண பரமஹம்சர்

இராமகிருஷ்ணர் உருவ வழிபாட்டு முறையை ஆதரித்தார். அவ்வழிபாட்டு முறையே ஆன்மிக நிலையை அடையச் சிறந்த வழி எனப் போதித்தார். தன்னலமற்ற தொண்டின் மூலமே இறைவனை அடைய முடியும் என்று கூறினார். அவர் தவ வலிமையினால் அறிந்த உண்மைகளை மக்களுக்குச் சிறிய எளிய கதைகள்மூலம் விளக்கினார்.

## II. *சுவாமி விவேகானந்தர்* (1863—1902)

*நரேந்திரநாத் தத்தா* என்ற இயற்பெயர் கொண்ட சுவாமி விவேகானந்தர் இராமகிருஷ்ணரின் முதன்மைச் சீடராக விளங்கினார். அவர் கல்கத்தாப் பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றவர். வங்காள, ஆங்கில மொழி களில் புலமைபெற்று விளங்கினார். அவரது கல்வி ஞானமும் சொல்லாற்றலும் எல்லா மக்களையும் கவர்ந்தன.

அமெரிக்காவில் சிகாகோ நகரில் 1893ஆம் ஆண்டில் நடைபெற்ற *சமயங் களின் பாராளுமன்ற* மகாநாட்டில் இந்தி யாவின் பிரதிநிதியாக விவேகானந்தர் கலந்து கொண்டார். அம்மகாநாட்டில் அவர் ஆற்றிய சொற்பொழிவு உலக மக்கள் அனைவருடைய பாராட்டுதலையும் பெற்றது. இந்து சமயத்தின் சிறப்பினை உலக மக்கள் நன்கு அறிந்து கொள்ள விவேகானந்தரின் சொற்பொழிவு உதவியது.



படம் 55. சுவாமி விவேகானந்தர்

தமது குருநாதரின் போதனைகளைப் பரப்ப இராமகிருஷ்ணரின் பெயரால் விவேகானந்தர் ஓர் இயக்கத்தைத் தொடங்கினார். அவரது முயற்சியால் அவ்வியக்கம் இந்தியாவிலும், அந்நிய நாடுகளிலும், குறிப் பாக அமெரிக்காவிலும் பரவியது.

இராமகிருஷ்ண இயக்கத்தினர் சமய, சமூகப் பணிகள் வாயிலாகச் சீர்திருத்தக் கருத்துகளைப் பரப்பி வருகின்றனர். 'மனிதனுக்குப் பணி செய்வதே கடவுள் பணியாகும்' என்பதே இவ்வியக்கத்தின் குறிக்கோள். கல்வி நிறுவனங்கள், மருத்துவ மனைகள், அனாதை இல்லங்கள், குரு குலங்கள் ஆகியவை மூலம் இவ்வியக்கம் மக்களுக்குத் தொண்டாற்றி வருகிறது.

## *அலிகார் இயக்கம்*

### *சர் சையது அகமது கான்* (1817—1898)

ஆங்கிலேயர் ஆட்சியின் பயனாக இந்துக்களிடையே மட்டுமன்றி, முஸ்லிம்களிடையேயும் விழிப்புணர்ச்சி ஏற்பட்டது. அதற்குக் காரணமாக இருந்தவர்களுள் முக்கியமானவர் *சர் சையது அகமது கான்* என்பவராவார்.



படம் 56.
சர் சையது அகமத் கான்

சர் சையது அகமது கான் 1817ஆம் ஆண்டு பிறந்தார். முஸ்லிம்களின் முன்னேற் றத்திற்குக் கல்விதான் முக்கியம் என அவர் கருதினார். எனவே, அவர்கள் ஆங்கிலக் கல்வி பெறவேண்டும் என்ற தம் கருத்தைத் தீவிரமாகப் பிரச்சாரம் செய்தார். 1875ஆம் ஆண்டில் அவர் அலிகாரில் தொடங்கிய ஒரு பள்ளி, பின்னர் முஸ்லிம் ஆங்கில ஓரியன்டல் கல்லூரியாக வளர்ந்தது. அது பிற்காலத்தில் அலிகார் பல்கலைக்கழகமாக மாறிற்று. முஸ்லிம்களிடம் முற்போக்குக் கருத்துகள் வளர்ச்சியடையப் பாடுபட்டார். 'இந்துக்களும் முஸ்லிம்களும் இந்தியாவின் இரு கண்கள்' எனக் கூறினார். முஸ்லிம் சமுதாயத்திற்கு அரும்பாடு பட்ட சர் சையது அகமது கான் கி.பி. 1898-ல் காலமானார்.

## வினாக்கள்

**I. கோடிட்ட இடங்களை நிரப்புக :**

1. பிரம்ம சமாஜத்தை நிறுவியவர் ———— ஆவார்.
2. ஆரிய சமாஜத்தைத் தோற்றுவித்தவர் ———— ஆவார்.
3. ———— நகரில் நடைபெற்ற உலக சமய மாநாட்டில் இந்தியப் பிரதிநிதியாக விவேகானந்தர் கலந்து கொண்டார்.
4. ——— என்பவர் அலிகார்ப் பல்கலைக் கழகத்திற்கு அடிகோலினார்.

**II. குறுகிய விடைகள் அளிக்கவும் :**

1. இராசா ராம் மோகன்ராய் செய்த சமூகச் சீர்திருத்தங்கள் யாவை ?
2. ' சுத்தி இயக்கம் ' என்றால் என்ன ?
3. இராமகிருஷ்ணரின் அறிவுரைகள் யாவை ?
4. இராமகிருஷ்ண இயக்கத்தின் முக்கியப் பணிகளைக் கூறுக.
5. சர் சையது அகமது கான் முஸ்லிம் சமூகத்திற்கு ஆற்றிய பணிகள் யாவை ?

**III. விரிவான விடையளிக்கவும் :**

1. தயானந்தர் இந்து சமயத்திற்கு ஆற்றிய பணிகளை விவரிக்கவும்.
2. சுவாமி விவேகானந்தர் அவருடைய குருநாதரின் போதனைகளை எவ்வாறு பரப்பினார் ?

## பயிற்சி

1. இராசா ராம் மோகன்ராய், தயானந்தர், இராமகிருஷ்ணர், விவேகானந்தர் ஆகியோரின் அறிவுரைகளை அட்டைகளில் எழுதி வகுப்பறையில் வைக்கவும்.
2. இராமகிருஷ்ணரின் சிறுகதைகளைப் படிக்கவும்.

# 14. இந்திய சுதந்திரப் போராட்டம்

*முன்னுரை*

இந்தியாவில் ஆங்கிலேயராட்சி தோன்றிய நாள் முதல் ஆங்காங்கு எதிர்ப்புகள் தோன்றி வந்தன. நாட்டுப்பற்று மிக்க இந்தியர்கள் அந்நியருக்கு அடிமைப்பட்டிருக்க விரும்பவில்லை. அந்நியர் ஆட்சியினின்று விடுதலை பெற விரும்பினர். அவர்களில் முக்கியமானவர்கள் *வீரபாண்டிய கட்டபொம்மன், ஊமைத்துரை, மருதுபாண்டியர், புலித்தேவர், வேலுத்தம்பி* ஆகியோராவர். அவர்களுடைய முயற்சிகள் ஆங்கிலேயரின் சூழ்ச்சியால் முறியடிக்கப்பட்டன.

1857-ல் நடைபெற்ற முதல் இந்திய உரிமைப் போர் இந்திய மக்களின் தேசிய உணர்வைத் தட்டி எழுப்பியது. அப்போரில் இந்தியர்கள் தோல்வியுற்ற போதிலும் அவர்கள் உள்ளங்களில் பொங்கி எழுந்த விடுதலை வேட்கை அடங்கவில்லை. ஆங்கிலக் கல்வி கற்ற இந்தியர்களிடையே மக்களாட்சி மலர வேண்டுமென்ற உணர்வு பரவியது. பொதுவாக நாடெங்கிலும் இந்திய மக்களிடையே ஒரு புதிய விழிப்புணர்ச்சி தோன்றியது. அந்நிய ஆட்சியிலிருந்து விடுதலை பெறுவதற்காக பல ஆண்டுகள் இந்தியர் போராட்டம் நடத்தி முடிவில் வெற்றி பெற்றனர். அச்சுதந்திரப் போராட்டத்தின் வரலாற்றினைப்பற்றி இப்பாடத்தில் தெரிந்து கொள்வோம்.



படம் 57.
ஆலன் ஆக்டேவியன் ஹியூம்

## (அ) இந்திய தேசியக் காங்கிரஸ்

கி. பி. 1885ஆம் ஆண்டில் இந்தியர்களின் உரிமைகளைக் காத்துக்கொள்ளும் பொருட்டு *இந்திய தேசியக் காங்கிரஸ்* என்னும் சபை ஒன்று அமைக்கப்பட்டது. அதனைத் தோற்றுவித்தவர் *ஆலன் ஆக்டேவியன் ஹியூம், வில்லியம் வெட்டர்பர்ன்* என்ற ஆங்கிலேயர்களும், *தாதாபாய் நௌரோஜி, சுரேந்திரநாத் பானர்ஜி* என்ற இந்தியர்களுமாவர். அரசாங்கத்தில் இந்தியர்களுக்கு அதிக உயர் பதவிகளைப் பெறுவதும், கொஞ்சம்

கொஞ்சமாகப் பொறுப்பாட்சி அடைவதும் காங்கிரஸின் ஆரம்ப நோக்கங்களாகும். இந்திய தேசியக் காங்கிரஸ் சபை ஆண்டுதோறும் நிறைவேற்றும் பணிவானத் தீர்மானங்களால் பலன் ஒன்றுமில்லை என்பதை உணரத் தொடங்கியது. பணிவான வேண்டுகோள் முறைகளை விடுத்து தீவிர இயக்கத்தில் ஈடுபடவேண்டுமென தீவிரவாதிகள் கோரினர். ஆனால், மிதவாதிகளும், அவர்களின் தலைவருமான *கோபாலகிருஷ்ண கோகலேயும்* பிரிட்டிஷ் அரசாங்கத்திடம் மனுப்போட்டு, சிறிது சிறிதாகப் பொறுப்பாட்சி அடைய விரும்பினர்.



படம் 58.
கோபாலகிருஷ்ண கோகலே

கி.பி. 1905ஆம் ஆண்டில் *கர்ஸான் பிரபு* நிர்வாகம் சிறப்பாக நடைபெற வங்காளத்தை இரண்டாகப் பிரித்தார். பிரிக்கப்பட்ட ஒரு மாகாணத்தில் இந்துக்கள் பெரும்பான்மையினராகவும் மற்றொரு மாகாணத்தில் முஸ்லிம்கள் பெரும்பான்மை மக்களாகவும் இருந்தபடியால், இந்திய மக்களைப் பிரித்தாளும் திட்டமென இப்பிரிவினையை இந்திய தேசியக் காங்கிரஸ் எதிர்த்தது. அதன் காரணமாகத் தோன்றிய கிளர்ச்சி நாடு முழுவதும் பரவியது. வங்காளத்தில் *விபின் சந்திரபால்*, மகாராஷ்டிரத்தில் *லோகமான்ய பாலகங்காதர திலகர்*, பஞ்சாபில் *லாலா லஜபதி ராய்*, தமிழ்நாட்டில் *வ. உ. சிதம்பரம் பிள்ளை*, மகாகவி *சுப்பிரமணிய பாரதியார், சுப்பிரமணிய சிவா*, வ. வே. சு. அய்யர் ஆகியோர் தீவிரமாக இக்கிளர்ச்சியில் இறங்கினர். 'சுதந்திரம் எனது பிறப்புரிமை. அதனை அடைந்தே தீருவேன்' என்று திலகர் வீர முழக்கமிட்டார். ஆங்கிலேயர்மீதுள்ள வெறுப்பினை வெளிப்படுத்த சுதேசி இயக்கம் தோன்றியது. மக்கள் அந்நிய நாட்டுச் சரக்குகளைப் புறக்கணித்தனர். ஆங்கில அரசு இக்கிளர்ச்சிகளை ஒடுக்கக் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டது. திலகர் நாடு கடத்தப்பட்டார். கப்பலோட்டிய தமிழன் என்று மக்களால் போற்றப்பட்ட வ.உ.சி. போன்ற தலைவர்கள் சிறைப்படுத்தப்பட்டனர்.



படம் 59
பாலகங்காதர திலகர்


அச்சமயத்தில் முஸ்லிம்கள் தமக்குள் தனியாக *முஸ்லிம் லீக்* என்ற ஒரு கட்சியை அமைத்துக்கொண்டு பிரிட்டிஷாருக்கு ஆதரவளித்தனர். 1909ஆம் ஆண்டு மின்டோமார்லிச் சீர்திருத்தத்தின்படி முஸ்லிம்களுக்குத் தனித் தொகுதி அளிக்கப்பட்டது. 1916-ல் லட்சுமண புரியில் காங்கிரஸுடன் ஏற்பட்ட உடன்படிக்கையின்படி காங்கிரஸ் முஸ்லிம் தனித்தொகுதியை ஆதரித்தது. காங்கிரசும் முஸ்லிம் லீகும் இணைந்து ஆங்கில அரசை எதிர்த்தன.

1914-1918-ல் நடைபெற்ற முதல் உலகப் போரில் இந்தியர்கள் ஆங்கிலேயருடன் ஒத்துழைத்தனர். போர் முடிவுற்றதும் கி.பி. 1919ஆம் ஆண்டில் *மாண்டேகு-செம்ஸ்போர்டு* சீர்திருத்தச் சட்டம் இயற்றப் பட்டது. இந்தியக் காரியதரிசியாக இருந்த *மாண்டேகுவும்* இந்திய அரசப் பிரதிநிதியாக இருந்த *செம்ஸ்போர்ட் பிரபுவும்* இயற்றிய சீர்திருத்தமாகும் இது. இந்திய விடுதலை முயற்சிக்கு இச்சட்டம் எவ் விதத்திலும் உதவாததால் இந்தியர்கள் இதனை எதிர்த்தனர். விடுதலை இயக்கத்தை ஒடுக்க ஆங்கில அரசு *ரௌலட் சட்டத்தை* இயற்றியது. இச்சட்டத்தின்படி யாவரும் விசாரணையின்றிச் சிறையிடப்படலாம். இச் சட்டத்தைக் கண்டித்து நாடு முழுவதும் கூட்டங்களும் ஊர்வலங்களும் அமைதியான முறையில் நடைபெற்றன. இவ்வெதிர்ப்பினை அடக்க அரசு வன்முறையைக் கையாண்டது. 1919ஆம் ஆண்டில் ஏப்ரல் 13ஆம் தேதியன்று அமிர்தசரஸில் ஜாலியன்வாலாபாக் என்னுமிடத்தில் அமைதியாகக் கூடியிருந்த மக்களை *ஜெனரல் டயர்* என்னும் ஆங்கிலத் தளபதி எந்திரத் துப்பாக்கியால் பலமுறை சுட்டார். இதில் 400 இந்தியர்கள் கொல்லப்பட்டனர். 1200 பேர் படுகாயமுற்றனர். ***ஜாலியன்வாலாபாக் படுகொலை*** என்று கூறப்படும் இச் சம்பவம் மக்களின் ஆத்திரத்தை அதிகமாக்கியது. சுதந்திரக் கிளர்ச்சி மேலும் தீவிரமடைந்தது.

## *(ஆ) காந்தியடிகள் தலைமை*

காந்தியடிகள் 1919ஆம் ஆண்டில் விடுதலை இயக்கத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். இந்திய விடுதலைப் போராட்டம் 'நாட்டின் தந்தையெனப்' போற்றப்படும் மகாத்மா காந்தி அடிகளின் வாழ்க்கை வரலாற்றுடன் நெருங்கியத் தொடர்பு கொண்டதாகும். 1915-ல் தென்னாப்பிரிக்காவிலிருந்து இந்தியா திரும்பியதும் இங்கு நடைபெற்றுவந்த சுதந்திர இயக்கத்தை வழிநடத்திச் செல்லும் பொறுப்பை காந்திஜி ஏற்றுக்கொண்டார்.

காந்தியடிகள் இந்திய விடுதலைப் போராட்ட முறைகளில் பல புதுமைகளைப் புகுத்தினார். சத்தியம், அகிம்சை என்ற இரு புதிய போர்க் கருவிகளை இப்போராட்டத்தில் பயன்படுத்தினார். மகாத்மா காந்தியின் சத்தியாக்கிரகப் போர் மூன்று நிலைகளைக் கொண்டதாக அமைந்திருந்தது. 1920-ல் நடத்திய *ஒத்துழையாமை இயக்கம்*, 1930-ல் நடைபெற்ற *சட்ட மறுப்பு இயக்கம்*, 1942-ல் நடைபெற்ற *ஆகஸ்ட் புரட்சி* இயக்கம் ஆகிய மூன்றும் சுமார் 10 ஆண்டுக்கொருமுறை அவரது போராட்ட முறையில் அவர் கையாண்ட மாற்றத்தைக் காட்டுகிறது.



படம் 60. மகாத்மா காந்தி

1920ஆம் ஆண்டில் காந்தியடிகள் அறப் போரில் முதல் நிலையான ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்கினார். நாடு முழுவதும் இவ்வியக்கம் வேகமாகப் பரவியது. மாணவர்கள் பள்ளிகளுக்குச் செல்ல மறுத்தனர். வழக்கறிஞர்கள் நீதிமன்றங்களைப் புறக்கணித்தனர். சட்ட மன்றங்களை விட்டு உறுப்பினர்கள் வெளியேறினர். இந்தியர்களனைவரும் அந்நிய அரசுடன் ஒத்துழைக்க மறுத்தனர்.

1927ஆம் ஆண்டில் இந்திய அரசியலில் மேலும் சீர்திருத்தங்கள் செய்யும் பொருட்டு *சர் ஜான் சைமன்* என்பவர் தலைமையில் ஏழுபேர் கொண்ட குழு ஒன்று இந்தியாவிற்கு வந்தது. இந்தியர் ஒருவரும் இக் குழுவில் இடம் பெறவில்லை. எனவே, இந்தியர் இதனைப் புறக்கணித்தனர்.



படம் 61. ஜவஹர்லால் நேரு

1929ஆம் ஆண்டில் *பண்டித ஜவஹர்லால் நேருவின்* தலைமையில் கூடிய *லாகூர் காங்கிரஸ்* மாநாட்டில் முழு விடுதலை பெறுவதே இந்திய மக்களின் லட்சியம் எனத் தீர்மானிக்கப்பட்டது. இந்த லட்சியத்தை அடைய காந்தியடிகளை அறப் போர் நடத்துமாறு வேண்டியது.

1930ஆம் ஆண்டில் காந்தியடிகள் அறப்போரில் இரண்டாம் நிலையான *சட்டமறுப்பு இயக்கத்தைத்* தொடங்கினார். உப்பின்

மீதான வரியை நீக்கக் கோரி *உப்புச் சத்தியாக்கிரகப்* போரினை நடத்தினார். *தண்டி* கடற்கரையில் காந்தியடிகள் ஆரம்பித்த இவ்வறப் போரில் இலட்சக்கணக்கான இந்தியர்கள் பங்கேற்றனர். காந்தியடிகளும் அவரது தொண்டர்களும் சிறையிலடைக்கப்பட்டனர்.

இந்தியாவிற்குப் புதிய அரசியல் திட்டம் ஒன்றை வகுப்பதற்கு இங்கிலாந்தில் 1930ஆம் ஆண்டில் முதல் வட்டமேசை மாநாடு கூட்டப் பட்டது. காங்கிரஸ் அதில் கலந்துகொள்ளவில்லை. 1931-ல் அப் போதிருந்த வைசிராய் *இர்வின் பிரபு* காந்தியடிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தி சட்டமறுப்பு இயக்கத்தைத் தற்காலிகமாக நிறுத்தச் செய்தார். *காந்தி-இர்வின்* ஒப்பந்தம் என இது அழைக்கப்பட்டது. இந்த ஒப்பந்தத்தை யடுத்து நடைபெற்ற இரண்டாம் வட்ட மேசை மாநாட்டில் கலந்துகொள்ள காந்தியடிகள் இலண்டன் சென்றார். அம்மாநாடு வெற்றி பெறவில்லை. இந்தியாவிற்குத் திரும்பிய காந்தியடிகள் சட்டமறுப்பு இயக்கத்தை மீண்டும் தொடங்கினார்.



படம் 62. இர்வின் பிரபு

***1935*-ல் *இந்திய அரசியல் சட்டம்*** என்ற புதிய சட்டம் உருவாக்கப்பட்டது. இதன்படி மாநிலங்களுக்கு சுயாட்சி வழங்கப் பட்டது. காங்கிரஸ் கட்சி தேர்தலில் நிற்க தீர்மானித்தது. இச்சட்டத்தினை அமல்படுத்த 1937-ல் நாடு முழுவதும் நடைபெற்ற தேர்தல்களில் காங்கிரஸ் பெருவாரியாக வெற்றி பெற்றது. எட்டு மாநிலங்களில் காங்கிரஸ் அமைச்சரவை அமைத்தது. 1939-ல் இரண்டாம் உலகப் போர் மூண்டது. அப்போதிருந்த வைசிராய் *லின் லித்கோ* என்பவர் இந்தியரைக் கலக்காமலேயே ஆங்கிலேயருக்கு ஆதரவாக இந்தியாவை அப்போரில் ஈடுபடுத்தினார். இதனை எதிர்த்துக் காங்கிரஸ் அமைச்சரவையிலிருந்த அனைவரும் பதவி விலகினர்.


1942-ல் இரண்டாம் உலகப் போரில் ஆங்கிலேயர் நெருக்கடியான நிலையில் இருந்தபோது இந்தியரின் ஆதரவைப் பெறுவதற்கு *சர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ்* என்பவரின் தலைமையில் ஒரு தூதுக் குழு இந்தி யாவிற்கு வந்தது. இந்தியர்கள் போரில் உதவினால், போர் முடிந்ததும் இந்தியாவிற்கு முழுப் பொறுப்பாட்சி தருவதாக அக் குழு கூறியது. இந்திய தேசிய காங்கிரஸ் உடனடியாகப் பொறுப்பாட்சி வேண்டு

மென்றது. அதனால், கிரிப்ஸ் அளித்த திட்டத்தை இந்தியர்கள் ஏற்க மறுத்தனர்.

காந்தியடிகள் 1942-ல் *வெள்ளையனே வெளியேறு* என்று வீர முழக்கம் செய்து புரட்சி இயக்கத்தைத் தொடங்கினார். அவ்வாண்டு ஆகஸ்டு மாதத்தில் ஆரம்பிக்கப்பட்ட இவ்வியக்கம் *ஆகஸ்ட் புரட்சி* என்றழைக்கப்படுகிறது. இவ்வியக்கம் விடுதலைப் போராட்டத்தின் இறுதிக் கட்டமாக அமைந்தது. காந்தியடிகள் உள்பட எல்லாத் தலைவர்களும் சிறையிலடைக்கப்பட்டனர். நாடெங்கும் கலகங்களும் குழப்பங்களும் பரவின. அரசாங்கம் கடுமையான அடக்கு முறைகளைக் கையாண்டது.

## (இ) இந்திய நாட்டின் விடுதலை

இந்திய விடுதலைப் போராட்ட முன்னணி வீரர்களுள் *நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்* முக்கியமானவர். நாட்டின் விடுதலைக்காக அவர் புரிந்த பல தியாகங்களின் காரணமாக அவர் *நேதாஜி* என்று நாட்டு மக்களால் போற்றப்பட்டார். சுபாஷ் சந்திரபோஸ் வெளி நாடு சென்று ஜெர்மனி, ஜப்பான் முதலிய நாடுகளின் உதவியுடன் ஆங்கிலேயரை எதிர்க்கத் திட்டமிட்டார். உலகப் போரில் ஜப்பானிடம் சிறைப்பட்டிருந்த இந்தியப் போர் வீரர்களை ஒன்றுதிரட்டி *இந்திய தேசியப் படை* ஒன்றைத் திரட்டினார். இப்படையின் உதவியுடன் இந்தியாவை அந்நியர் ஆதிக்கத்திலிருந்து விடுவிக்கத் திட்டமிட்டார். சிங்கப்பூரில் சுதந்திர இந்திய அரசு ஒன்றை நிறுவினார். இந்தியாவின் வடகிழக்குப் பகுதி வழியாக அவர் இந்தியா மீது படையெடுத்தார். ஆனால், அம் முயற்சி தோல்வியாக முடிந்தது.



படம் 63.
நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்

1945-ல் இரண்டாம் உலகப் போர் முடிவுற்றதும் இங்கிலாந்தில் தொழிற்கட்சி ஆட்சி ஏற்பட்டது. 1946-ல் ஆங்கில அரசில் மூன்று அமைச்சர்கள் கொண்ட தூதுக் குழு ஒன்று இந்தியாவிற்கு வந்தது. இந்தியத் தலைவர்களுடன் அவர்கள் நடத்திய பேச்சுவார்த்தைக்குப் பின் ஓர் உடன்பாடு ஏற்பட்டது. அதன்படி இந்திய அரசியல் திட்டத்தை

வகுக்க அரசியல் நிர்ணய சபை ஒன்றை நிறுவவும், இடைக்கால அரசு ஒன்று அமைக்கவும் இந்தியர்கள் ஒப்புக் கொண்டனர். இதன்படி 1946-ல் *ஜவஹர்லால் நேரு*வின் தலைமையில் ஓர் இடைக்கால அரசு அமைக்கப்பட்டது. அரசியல் நிர்ணய சபை ஒன்று அமைக்கப்பட்டது. *பாபு இராசேந்திர பிரசாத்* அச்சபையின் தலைவரானார்.



படம் 64. முகமது அலி ஜின்னா

முஸ்லிம் லீக் தலைவர் *முகமது அலி ஜின்னா* முஸ்லிம் மக்களுக்குத் தனி நாடு வேண்டுமெனக் கோரிக்கை விடுத்தார். நாட்டைத் துண்டாடுவதைக் காங்கிரஸ் தலைவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. முஸ்லிம் லீக் அரசியல் நிர்ணய சபையில் சேராமல் நேரடி நடவடிக்கை என்னும் தீவிரக் கிளர்ச்சியைத் தொடங்கியது. இதன் விளைவாக வகுப்புக் கலவரங்கள் தோன்றின. அப்பொழுது இரண்டாம் உலகப் போர் முடிந்து, இங்கிலாந்தில் 1945-ல் ஜூலை மாதத்தில் தேர்தல் நடந்தது. அதில் *அட்லி* தலைமையில் தொழிற்கட்சி வெற்றி பெற்றது. அட்லி இந்தியாவிற்கு சுதந்திரம் அளிக்க முன்வந்தார். அதன் விளை




படம் 65. அட்லி




படம் 66. மௌண்ட் பேட்டன் பிரபு

வாக அரசப் பிரதிநிதியாக இருந்த *மௌண்ட் பேட்டன்* இந்திய அரசியல பிரச்சனையைத் தீர்க்கத் திட்டமொன்றை வகுத்தார். அத்திட்டத்தின்படி இந்தியா இருநாடுகளாகப் பிரிக்கப்பட்டது. முஸ்லிம்கள்




படம் 67. இந்தியா, பாகிஸ்தான் நாடுகள்

பெரும்பான்மையுள்ள பகுதிகளை ஒன்றாக்கிப் *பாகிஸ்தான்* என்ற ஒரு தனி நாடாகவும், எஞ்சிய பகுதிகள் இந்திய நாடாகவும் அமைக்கப்பட்டன. 1947ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15ஆம் நாள் இந்தியா சுதந்திரம் பெற்றது. *பண்டித ஜவஹர்லால் நேரு* சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமரானார். அரசியல் நிர்ணய சபையின் முடிவின்படி 1950 ஜனவரி 26ஆம் நாள் இந்தியா சுதந்திரக் குடியரசு நாடாக ஆயிற்று. *இராசேந்திர பிரசாத்* நமது குடியரசின் முதல் ஜனாதிபதியானார்.



படம் 68.
இராசேந்திர பிரசாத்

## வினாக்கள்

**I.** *கோடிட்ட இடங்களை நிரப்புக :*

1. சுதந்திரம் நமது பிறப்புரிமை என முழங்கியவர் ———.
2. வங்கப் பிரிவினை திட்டத்தை வகுத்தவர் ———.
3. ஜாலியன்வாலாபாக் படுகொலைக்குக் காரணமான ஆங்கிலேயத் தளகர்த்தர் ———.
4. ——— ஆண்டில் காந்திஜி இந்திய சுதந்திரப் போராட்டத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றார்.
5. சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமர் ———.

**II.** *குறுகிய விடைகள் அளிக்கவும் :*

1. இந்திய தேசியக் காங்கிரஸ் எப்பொழுது, யாரால் தோற்றுவிக்கப் பட்டது ?
2. சுதேசி இயக்கம் என்பது யாது ?
3. ஆங்கிலேய அரசை எதிர்க்க காந்தியடிகள் பின்பற்றிய மூன்று முறைகள் யாவை ?

4. சைமன் குழு ஏன் புறக்கணிக்கப்பட்டது ?

5. இரண்டாம் உலகப் போர் மூண்டதால் இந்திய அரசியலில் ஏற்பட்ட மாறுதல் யாது ?

III. விரிவான விடைகள் அளிக்கவும் :

1. முதல் உலகப் போர் வரை நடந்த இந்திய சுதந்திரப் போராட்டத்தின் வரலாற்றை விவரிக்கவும்.

2. 1939 முதல் 1947 வரை நிகழ்ந்த இந்திய விடுதலைப் போராட்டத்தை விவரித்து எழுதவும்.

## பயிற்சி

1. நமது தேசத் தலைவர்களின் படங்களைச் சேகரித்து உன் படப் புத்தகத்தில் ஒட்டவும்.

2. இந்தியப் படத்தில் இந்தியா, பாகிஸ்தான் எல்லைகளைக் குறிக்கவும்.

# 15. இந்திய அரசியலமைப்பு


## முன்னுரை

சுதந்திர இந்தியாவில் அரசாங்க அமைப்பை உருவாக்கவும், அதனை நடத்தி வருவதற்கான விதிமுறைகளை வகுக்கவும் 1946-ல் அரசியல் நிர்ணய சபை ஒன்று அமைக்கப்பட்டது. அச்சபை உருவாக்கித் தந்த அரசியலமைப்பு 1950 ஜனவரி 26ஆம் நாள் முதல் அமலுக்கு வந்தது. அதன்படி இந்தியா ஒரு *பரிபூரண ஜனநாயகக் குடியரசு* நாடாக அன்றுமுதல் செயல்பட்டு வருகிறது. அந்நாளை நாம் ஆண்டு தோறும் குடியரசு நாளாகக் கொண்டாடுகிறோம்.

இந்திய அரசியல் அமைப்பின்படி இந்தியக் குடிமக்கள் அனை வருக்கும் சில அடிப்படை உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. அவை, சமத்துவ உரிமை, சுதந்திர உரிமை, பேச்சுரிமை, சமய உரிமை, சொத்துரிமை, சுரண்டலிலிருந்து பாதுகாப்பு உரிமை, சட்ட நிவாரணம் பெறும் உரிமை, கலை, கல்வி, பண்பாட்டு உரிமை என்பனவாகும்.

### (அ) இந்தியக் குடியரசு

இந்தியா ஒரு சமய சார்பற்ற குடியரசு நாடு. இதன் தலைவருக்கு *ஜனாதிபதி* அல்லது *இராஷ்டிரபதி* என்று பெயர். இவர் இந்திய நாடாளுமன்றத்தில் இரு சபை களிலும் உள்ள *தேர்ந்தெடுக்கப்பட்ட* உறுப்பினர்களாலும், மாநிலங்களின் கீழ்ச் சபையின் *தேர்ந்தெடுக்கப்பட்ட* உறுப் பினர்களாலும் தேர்ந்தெடுக்கப்படுகின்றார். 1977ஆம் ஆண்டு திரு. *சஞ்சீவ ரெட்டி* குடியரசு தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். இவரது பதவிக்காலம் ஐந்து ஆண்டு களாகும். இந்தியாவின் ஆட்சிப் பொறுப்பு முழுவதும் இவர் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்திய அரசாங்கம் டெல்லியிலிருந்து செயல்பட்டு வருகின்றது. குடியரசு தலைவரின்



படம் 69. சஞ்சீவ ரெட்டி

மூன்று முக்கிய அதிகாரங்கள்: (1) சட்டங்களை இயற்றல், (2) சட்டங்களைச் செயல்படுத்துதல், (3) நீதியை நிலைநாட்டல். இம் மூன்று கடமைகளையும் நிறைவேற்றுவதில் அவருக்கு உதவியாக மூன்று அமைப்புகள் உள்ளன. அவைகளாவன: (1) *நாடாளுமன்றம்*—இது சட்டங்களை இயற்றுகிறது. (2) *அமைச்சரவை*—இது சட்டங்களை நிறைவேற்றுகிறது. (3) *தலைமை நீதி மன்றம்* (சுப்ரீம் கோர்ட்)—இது நீதியை நிலைநாட்டுகின்றது. குடியரசு தலைவர் நாட்டின் முப்படைகளின் தளபதியாகவும் விளங்குகிறார். குடியரசு தலைவருக்கு உதவியாகத் துணைத் தலைவர் ஒருவர் உண்டு. இவர் நாடாளுமன்றத்தின் இரு சபைகளின் உறுப்பினர்களாலும் தேர்ந்தெடுக்கப் படுகிறார். இவர் நாடாளுமன்றத்தின் மேல் சபையான இராச்சிய சபையின் தலைவராக விளங்குகிறார். குடியரசு தலைவர் இல்லாதபோது அவர் ஆற்ற வேண்டிய பொறுப்புகளைத் துணைத் தலைவர் செய்து முடிப்பார்.

குடியரசு தலைவர் பிரதமரின் ஆலோசனையின் பேரில் செயல் படுகிறார்.

## 1. *நாடாளுமன்றம்*

நாடாளுமன்றம் இரண்டு சபைகளைக் கொண்டுள்ளது. ஒன்று ***மக்கள் சபை***. மற்றொன்று *இராச்சிய சபை*. மக்கள் சபையில் 542 உறுப்பினர்கள் உள்ளனர். இவர்கள் 21 வயதுக்கு மேற்பட்ட மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். மக்கள் சபையின் தலைவர் *சபாநாயகர்* ஆவார்.

இராச்சிய சபையின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 240. இவர்களில் 12 உறுப்பினர்களைக் குடியரசு தலைவர் நியமிப்பார். இவர்கள் கல்வி, கலை, அறிவியல், சமூகத்தொண்டு ஆகிய துறைகளில் ஈடுபட்ட அறிஞர்களாக இருப்பார்கள். மற்றவர்கள் மாநிலங்களின் சட்ட சபைகளால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இராச்சிய சபை ஒரு நிலையான அமைப்பாகும். இதன் உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பங்கினரின் பதவிக் காலம் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை முடிவடையும். அவ்விடங்களுக்கு மட்டும் தேர்தலோ அல்லது நியமனமோ நிகழும்.

நாட்டின் ஆட்சிக்குத் தேவையான அதிகாரங்களை நாடாளு மன்றம் மத்திய அமைச்சரவைக்கு வழங்குகின்றது. இரு சபைகளுள் மக்கள் சபைக்குத்தான் அதிக அதிகாரங்கள் அளிக்கப்படுகின்றன. நிதி மசோதாக்கள் முதலில் மக்கள் சபையில்தான் கொண்டுவரப்பட வேண்டும். அங்கு அவை நிறைவேறிய பின்னரே இராச்சிய சபைக்கு அனுப்பப்பட வேண்டும்.

## 2. *அமைச்சரவை*

மத்திய அரசின் அமைச்சர்கள் அமைச்சரவையை அமைக்கின் றனர். அவர்கள் நாடாளுமன்றத்தின் இரு சபைகளில் ஏதேனும் ஒன்றில் உறுப்பினராக இருக்கவேண்டும். ஆனால், பிரதமர் மக்கள் சபையில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினராக இருக்கவேண்டும். பிரதமர் அமைச் சரவையின் தலைவர். அவரைக் குடியரசு தலைவர் நியமிக்கிறார். மக்கள் சபையில் பெருவாரியான பிரதிநிதிகள் ஆதரவுகொண்ட அரசியல் கட்சியின் தலைவரே பிரதமராக நியமிக்கப்படுகிறார். 1980ஆம் ஆண்டு சனவரித் திங்களில் நடந்த பொதுத் தேர்தலில் இந்திரா காங்கிரஸ் கட்சியினர் பெருவாரியான இடங்களை மக்கள் சபையில் பெற்றதால், திருமதி *இந்திராகாந்தி* பிரதமராக நியமிக் கப்பட்டார். பிரதமரின் அறிவுரை யின்படி மற்ற அமைச்சர்களைக் குடியரசு தலைவர் நியமிக்கிறார். அரசின் பொறுப்பு முழுவதும் பிரதம அமைச்சரிடம்தான் உள்ளது.




படம் 70. திருமதி இந்திராகாந்தி

அரசாங்கம் பல துறைகளாகப் பிரிக்கப்பட்டு, அமைச்சர்கள் ஒவ்வொரு வரிடமும் சில துறைகள் ஒப்படைக்கப்படும். அமைச்சரவைக்கு எல்லாத் துறைகளின் பேரிலும் கூட்டுப் பொறுப்பு உண்டு.

## 3. தலைமை நீதிமன்றம்

இந்தியாவின் தலைமை நீதிமன்றம் (சுப்ரீம் கோர்ட்) ஒரு தலைமை நீதிபதியையும் 17 நீதிபதிகளையும் கொண்டது. மத்திய அரசாங்கத்திற்கும் இராச்சிய அரசாங்கங்களுக்குமிடையே ஏற்படும் தகராறுகளையும், இராச்சிய அரசாங்கங்களுக்கிடையே ஏற்படும் தகராறுகளையும் தலைமை நீதிமன்றம் விசாரிக்கின்றது. மாநில உயர்நீதிமன்றங்களின் தீர்ப்புகள்மீது எழும் மேல் முறையீடுகளையும் (அப்பீல்கள்) இந்நீதிமன்றம் விசாரிக்கும். குடியரசு தலைவருக்குச் சட்ட ஆலோசனை கூறும் பொறுப்பும் தலைமை நீதிமன்றத்துக்கு உண்டு. மக்களின் அடிப்படை உரிமைகளைக் காப்பதும் அரசியல் அமைப்பைப் பாதுகாப்பதும் தலைமை நீதிமன்றத்தின் கடமைகளாகும்.

### மத்திய அரசு



## (ஆ) மாநில அரசு

இந்தியாவின் ஆட்சி முறை ஒரு கூட்டாட்சிமுறைக் குடியரசாகும். இந்தியாவில் பல மாநிலங்கள் உள்ளன. ஒவ்வொரு மாநிலத்திலும் மத்திய அரசாங்கத்தைப் போலவே அரசாங்க அமைப்புகள் உள்ளன. மாநில அரசு தமது உள்நாட்டு நிர்வாகத்தைத் தாமே பார்த்துக் கொள்ளும். ஆட்சி அதிகாரங்கள் மத்திய அரசாங்கத்துக்கும் மாநில அரசுகளுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. பாதுகாப்பு, இரயில்வே, தபால்-தந்தி, கப்பல், விமானப் போக்குவரத்து, நாணய வெளியீடு போன்ற துறைகள் மத்திய அரசிடம் உள்ளன. கல்வி, சுகாதாரம், காவல், உள்ளாட்சி, சாலைப் போக்குவரத்து, மின்சாரம் போன்ற துறைகள் மாநில அரசாங்கங்களின் பொறுப்பில் உள்ளன.

மத்திய அரசினைப் போலவே மாநிலங்களில் சட்டமன்றம், அமைச்சரவை, நீதிமன்றம் ஆகியவையுள்ளன. மாநில ஆட்சியின் தலைவர் ஆளுநர். மாநில நிர்வாகம் இவருடைய பெயரிலேயே நடை பெறுகின்றது. இவர் குடியரசு தலைவரால் நியமிக்கப்படுகிறார்.

சட்டமன்றம் *பேரவை*, **மேலவை** என்ற இரு சபைகளைக் கொண்டது. சில மாநிலங்களில் பேரவை மட்டுமே உள்ளது. பொதுவாக பேரவை நிறைவேற்றும் தீர்மானங்களை மேலவை பரிசீலித்துத் தனது ஆலோசனைகளை அளிக்கும். பண மசோதாக்கள் மட்டும் பேரவை ஒன்றில்தான் கொண்டு வரப்படும்.

ஆளுனருக்கு இராச்சிய நிர்வாகத்தில் துணைபுரிவது அமைச்சரவையாகும். கீழ் சட்ட மன்றத்தில் பெரும்பான்மைப் பிரதிநிதிகள் ஆதரவுகொண்ட அரசியல் கட்சியின் தலைவர் முதலமைச்சராக ஆளுனரால் நியமிக்கப்படு கிறார். தமிழ் நாட்டில் 1980ஆம் ஆண்டு மே மாதத்தில் நடந்த சட்டமன்றத் தேர்தலில் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற் றக் கழகம் வெற்றி பெற்று அக்கட்சியின் தலை வரான திரு. எம். ஜி. *இராமச்சந்திரன்* முதல்வராக நியமிக்கப்பட்டார். முதலமைச்




படம் 71.
எம். ஜி. இராமச்சந்திரன்

சரின் அறிவுரையின்படி மற்ற அமைச்சர்கள் நியமிக்கப்படுகின்றனர். இவ்வமைச்சரவை மாநில சட்டமன்றத்திற்குக் கூட்டுப் பொறுப்புள்ளதாகும்.

ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு உயர் நீதிமன்றம் உள்ளது. அதன் பிரதம நீதிபதியும் பிற நீதிபதிகளும் குடியரசு தலைவரால் நியமிக்கப் படுகின்றனர்.

**மாநில அரசு**




## (இ) உள்ளாட்சி

நமது நாட்டில் பழங்காலத்திலிருந்தே கிராமங்களில் பஞ்சாயத்து ஆட்சிமுறை நடந்து வந்திருக்கிறது. சுதந்திர இந்தியாவின் அரசியல் அமைப்பின்படி மக்கள் உள்ளாட்சியில் பங்கு பெறுவதற்கான மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தற்போது நம் நாட்டிலுள்ள உள்ளாட்சி நிறுவனங்கள் *ஊராட்சி மன்றம், ஊராட்சி ஒன்றியம், மாவட்ட*

*வளர்ச்சி மன்றம்* ஆகிய மூன்று அமைப்புகளாகச் செயல்படுகின்றன. நகரங்களில் *நகராட்சி மன்றமும்*, பெரிய நகரங்களில் *மா நகராட்சி மன்றங்களும்* உள்ளன.

கிராமங்களில் ஊராட்சி மன்றங்கள் நிறுவப்பட்டுள்ளன. இவற்றின் உறுப்பினர்களும் தலைவர்களும் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர். பல ஊராட்சி மன்றங்கள் ஒன்றாக இணைந்து ஊராட்சி ஒன்றியம் (பஞ்சாயத்து யூனியன்) அமைக்கப்பட்டுள்ளது. ஊராட்சி மன்றத் தலைவர்களும், தாழ்த்தப்பட்ட வகுப்பினர், பெண்கள் ஆகியோரின் பிரதிநிதிகளும் ஒன்றியத்தின் உறுப்பினர்களாவார்கள். ஒன்றியத்தின் தலைவரும் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார். ஊராட்சி ஒன்றியத்தின் அரசு அலுவலர் ஆணையர் எனப்படுவார்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட வளர்ச்சி மன்றம் அமைக்கப் பட்டுள்ளது. இதன் தலைவர் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆவார். நகராட்சி மன்றத் தலைவர்களும், ஊராட்சி ஒன்றியத் தலைவர்களும், மாவட்ட அதிகாரிகளும், அம் மாவட்டத்தைச் சார்ந்த நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும் இம்மன்றத்தின் உறுப்பினர்கள் ஆவர். இம்மன்றம் மக்களின் தேவைகளை அறிந்து நிர்வாகத்துறை வாயிலாக அவற்றை நிறைவேற்ற முயற்சி செய்யும்.

நகரங்களில் நகராட்சி மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. நகராட்சி உறுப்பினர்களும், நகராட்சித் தலைவரும் நகரத்திலுள்ள வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். பெரிய நகரங்களில் மாநகராட்சி மன்றங்கள் நிறுவப்பட்டுள்ளன. நமது தமிழ் நாட்டில் சென்னை, மதுரை, கோயமுத்தூர் ஆகியவற்றில் மாநகராட்சி மன்றங்கள் உள்ளன. மாநகராட்சித் தலைவர் 'மேயர்' எனப்படுவார். மாநகராட்சி, நகராட்சி மன்றங்களில் ஆணையர் என்னும் அதிகாரி நிர்வாகத்தைக் கவனித்து வருகிறார்.

கல்வி, சுகாதாரம், சாலைகள் அமைத்தல், விளக்கு வசதி, குடிநீர் வசதி முதலியவற்றைக் கவனித்துக் கொள்வது உள்ளாட்சி நிறுவனங் களின் கடமைகளாகும். அவற்றின் முக்கிய வருமானம் நில வரி, வீட்டு வரி, தொழில் வரி, சந்தை வரி, வாகன வரி முதலியவையாகும்.

## வினாக்கள்

**I. கோடிட்ட இடங்களை நிரப்புக :**

1. நாடாளுமன்றத்தின் இரு சபைகள் ————, ———— ஆகும்.
2. மாநில ஆளுநர் ————ஆல் நியமிக்கப்படுகிறார்.
3. இந்திய நாட்டின் இன்றைய ஜனாதிபதி ———— .
4. தமிழ் நாட்டின் இன்றைய முதலமைச்சர் ———— .

**II. குறுகிய விடைகள் அளிக்கவும் :**

1. 1950ஆம் ஆண்டின் வரலாற்று முக்கியத்துவம் என்ன?
2. நமது அரசியலமைப்புத் திட்டம் அளித்துள்ள அடிப்படை உரிமைகள் யாவை ?
3. தலைமை நீதி மன்றத்தின் அதிகாரங்கள் யாவை ?
4. ஊராட்சி ஒன்றிய உறுப்பினர்கள் யாவர் ?

**III. விரிவான விடைகள் அளிக்கவும் :**

1. இந்தியப் பாராளுமன்றம், அமைச்சரவை ஆகியவற்றின் அமைப்பினை விளக்குக.
2. உள்ளாட்சி மன்றங்களின் அமைப்பினையும் அவற்றின் பணிகளையும் விவரிக்கவும்.

## பயிற்சி

1. உன் பள்ளியில் மாதிரிப் பாராளுமன்றம் ஒன்றை அமைக்கவும்.
2. தற்பொழுதுள்ள மத்திய, மாநில அமைச்சர்களின் பெயர்களையும் அவர்களின் இலாக்காக்களையும் குறிப்பிடுக.

# 16. சுதந்திர இந்தியாவின் சாதனைகள்

*முன்னுரை*

விடுதலை பெற்ற பின்னர் நம் நாட்டில் பல துறைகளிலும், வியக்கத் தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. விடுதலை அடைந்தபொழுது இந்தியாவில் நூற்றுக்கணக்கான இராச்சியங்கள் தனித்தனியாக இயங்கி வந்தன. அவற்றை எல்லாம் இந்திய யூனியனில் இணையச் செய்து ஒருங்கிணைந்த பாரதமாக உருவாக்கப்பட்டது. ஐந்தாண்டுத் திட்டங் களின் பயனாக நம் நாடு பொருளாதாரத் துறையில் போற்றத்தக்க வளர்ச்சியை அடைந்துள்ளது. பிற நாடுகளுக்கெல்லாம் வழிகாட்டும் வகையில் உலக அமைதிக்காக நம் நாடு சிறந்த பணியாற்றி வருகிறது. தொன்றுதொட்டு வரும் இந்தியப் பண்பாடே இதற்குக் காரணம். உலக நாடுகளின் அரங்கில் உயரிய நிலையை அடைந்துள்ள நம் பாரத நாட்டின் அரும்பெருஞ் சாதனைகளைப்பற்றி இப்பாடத்தில் படிப்போம்.

## *(அ) இந்திய இராச்சியங்களின் ஒருங்கிணைப்பு*

1947ஆம் ஆண்டில் நம் நாடு விடுதலை அடைந்தபொழுது நம் நாட்டில் சுமார் 600 சுதேச இராச்சியங்கள் இருந்தன. இந்த இராச்சியங் களனைத்தையும் இந்திய யூனியனுடன் இணைக்க வேண்டுமென்று *சர்தார் வல்லபாய் படேல்* விரும்பினார். அவர் அப்பொழுது சுதந்திர இந்தியாவின் உள்துறை அமைச்சராக இருந்தார். அவர் வகுத்த திட்டத்தின்படி பல இராச்சியங்கள் அருகிலுள்ள மாநிலங்களுடன் இணைந்தன. சில இராச்சியங்கள் ஒன்றுசேர்ந்து பெரிய இராச்சியங் களாக உருவாயின. மத்திய அரசின் நேராட்சியின்கீழ் சில இராச்சியங்கள் கொண்டுவரப்பட்டன.

ஐதராபாத் நிஜாம் மட்டும் *ரஸாக்கர்* என்னும் தீவிரவாதி களின் செல்வாக்கினால் இந்தியாவுடன் இணைய மறுத்தார். வல்லபாய்

படேல் இராணுவ நடவடிக்கை எடுத்து ஐதராபாத்தை இந்தியாவுடன் இணையச் செய்தார்.

காஷ்மீர் மன்னரும் இந்தியாவுடன் இணைவதில் காலங் கடத்தினார். பாகிஸ்தான் படைகள் காஷ்மீரைத் தாக்கியதும் அம்மன்னர் காஷ்மீர் இந்தியாவுடன் இணைவதற்கு இசை வளித்தார். இணைப்பிற்குப்பின் இந்தியா காஷ்மீரிலிருந்து ஆக்கிரமிப்பாளர்களை விரட்ட உதவியது. ஆனால், காஷ்மீரின் வடமேற்குப் பகுதி தனித்து இயங்குகிறது.



படம் 72.
சர்தார் வல்லபாய் படேல்

தனித்தனியாக இயங்கிய எல்லா இராச்சியங்களையும் இந்தியாவுடன் இணைப்பதில் வல்லபாய் படேல் மிகத் திறமையுடனும் உறுதியுடனும் செயலாற்றினார். இப்பெரும் சாதனையை நிறைவேற்றிய சர்தார் படேல் மக்களால் *இந்தியாவின் பிஸ்மார்க்* என்றும் *இரும்பு மனிதர்* என்றும் *இணைப்புத் தந்தை* என்றும் பாராட்டப்படுகிறார்.

## (ஆ) ஐந்தாண்டு திட்டங்கள்

நம் நாடு விடுதலையடைந்தபின் நாட்டின் பொருளாதார நிலையையும், மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்த அரசு ஐந்தாண்டு திட்டங்களை உருவாக்கியது. ஐந்தாண்டுக்கால வளர்ச்சிக்குரிய திட்டங்களைத் தயாரிக்க 1950-ல் *திட்டக் குழு* ஒன்று அமைக்கப்பட்டது.

முதல் ஐந்தாண்டு திட்டம் 1951 முதல் 1956 வரை வகுக்கப்பட்டது. *உணவு விளைச்சலைப் பெருக்குவதே* முதல் திட்டத்தின் நோக்கம். இத்திட்டத்திற்குச் சுமார் 2,356 கோடி ரூபாய் செலவிடப்பட்டது.

இரண்டாம் ஐந்தாண்டு திட்ட காலம் 1956 முதல் 1961 வரையாகும். இத்திட்டத்தில் *தொழில் வளர்ச்சிக்கு* முக்கியத்துவம்

அளிக்கப்பட்டது. இத்திட்டத்திற்குச் செலவிடப்பட்ட தொகை சுமார் 7,900 கோடி ரூபாய் ஆகும்.

மூன்றாம் ஐந்தாண்டு திட்டம் 1961 முதல் 1966 வரையில் வகுக்கப்பட்டது. இத்திட்டத்திற்கு 12,767 கோடி ரூபாய் செலவிடப் பட்டது. இத்திட்டத்தின் நோக்கம் உணவு விளைச்சல் அதிகரிப்பும், தொழில் வளர்ச்சியுமாகும். பாகிஸ்தான் யுத்தமும், நாட்டில் தொடர்ந்து வறட்சியும் ஏற்பட்டதால் நான்காவது ஐந்தாண்டு திட்டம் ஒத்திவைக்கப் பட்டது. எனினும், ஆண்டுதோறும் தனித் திட்டம் தீட்டப்பட்டு 1966 முதல் 1969 வரை மூன்று ஆண்டுகளில் 6,767 கோடி ரூபாய் செலவிடப்பட்டது.

நான்காவது ஐந்தாண்டு திட்டம் 1969 முதல் 1974 வரையிலானதாகும். இத்திட்டத்தின் செலவு 25,000 கோடி ரூபாயாகும். பின்தங்கிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல், வேலை வாய்ப்பினை அதிகரித்தல், செல்வம் பரவலாக இருக்கச் செய்தல் போன்றவையே இத்திட்டத்தின் நோக்கங்களாகும்.

ஐந்தாவது ஐந்தாண்டு திட்டம் 1974 முதல் 1979 வரையிலானதாகும். இத்திட்டத்திற்கான செலவு 53,411 கோடி ரூபாயாகும். வறுமையை ஒழித்தல், தன்னிறைவு காணுதல், பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை அகற்றுதல் ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

ஐந்தாண்டு திட்டங்களின் பயனாக நம் நாட்டில் பல துறைகளிலும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அரசு மேற்கொண்ட தீவிர வளர்ச்சித் திட்டங்களின் பலனாக விளைச்சல் பெருகிப் *பசுமைப் புரட்சி* ஏற்பட்டுள்ளது. உழவுத் தொழிலுக்கு அடுத்ததாக நம் நாட்டில் பருத்தி நெசவுத் தொழில் பெருமளவில் நடைபெறுகிறது. பம்பாய் நகரில் மட்டும் 65 பருத்தி ஆலைகள் உள்ளன. பம்பாய் நகரை இந்தியாவின் *மான்செஸ்டர்* என்றும், கோயம்புத்தூரைத் *தென் இந்தியாவின் மான்செஸ்டர்* என்றும் அழைக்கிறோம்.

தொழில் துறையிலும் இந்தியா வேகமாக முன்னேறி வருகிறது. உலகின் மிகப்பெரிய இரும்பு எஃகு தொழிற்சாலை *ஜாம்ஷெட்பூரி* லுள்ள டாடா இரும்பு எஃகு தொழிற்சாலையாகும். ***பிலாய், ரூர்கேலா, துர்க்காபூர்*** ஆகிய இடங்களில் அந்நிய நாட்டு உதவி யுடன் மிகப் பெரிய இரும்பு உருக்கு ஆலைகள் அமைக்கப்பட்டுள்ளன. *பொகாரோ, விசாகப்பட்டினம், ஹாஸ்பெட், சேலம்* ஆகிய இடங்களில் இரும்புத் தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டுள்ளன.

நெய்வேலி பழுப்பு நிலக்கரித் திட்டம், விசாகப்பட்டினம் கப்பல் கட்டும் தொழில், பெரம்பூர் ரெயில் பெட்டித் தொழிற்சாலை, மேற்கு வங்கத்திலுள்ள *சித்தரஞ்சன் எஞ்சின்* தொழிற்சாலை, பெங்களூர் விமானங்கட்டும் தொழிற்சாலை, டெலிபோன் கருவிகள், கைக்கடியாரங் கள், சிறு எந்திரக் கருவிகள் ஆகியவற்றைத் தயாரிக்கும் தொழிற் சாலைகள் ஆகியவை நம் நாட்டின் தொழில் வளர்ச்சியை எடுத்துக் காட்டுகின்றன. பம்பாய், சென்னை, கல்கத்தா ஆகிய இடங்களில் மோட்டார் வாகனங்களும், ஐதராபாத், சென்னை ஆகிய இடங்களில் சைக்கிள்களும் தயாரிக்கப்படுகின்றன.

இவை தவிர நாடெங்கிலும் சிமெண்ட், காகிதம், தோல், ரப்பர், சோப், கண்ணாடி, தீப்பெட்டி, ரசாயன உரங்கள், சர்க்கரை, மின்சார சாதனங்கள் போன்ற பொருள்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை களும் நிறுவப்பட்டுள்ளன. இந்தியாவில் தயாரிக்கப்படும் பல பொருள் கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன.

நாடு முழுவதும் ரெயில் பாதைகளும் நெடுஞ்சாலைகளும் பல மைல்கள் நீளத்திற்குப் போடப்பட்டுள்ளன. உலகின் பெரிய நகரங்கள் அனைத்தும் விமானப் போக்குவரத்தால் இணைக்கப்பட்டுள்ளன. கப்பல் போக்குவரத்தும் கணிசமாக முன்னேறியுள்ளது. அறிவியல் வளர்ச்சிக் காக நாட்டில் பல இடங்களில் தேசிய ஆராய்ச்சி நிறுவனங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆறுகள் பலவற்றின் குறுக்கே அணைகள் கட்டப்பட்டுப் பெரிய நீர்மின் திட்டங்கள் பல உருவாகி வருகின்றன. இவ்வாறாக திட்ட வேலைகளின் பயனாக நாடு எல்லாத் துறைகளிலும் நல்ல வளர்ச்சியை அடைந்துள்ளது.

## (இ) இந்திய வெளி உறவுக் கொள்கை

உலக ஜனநாயக நாடுகளில் நம் நாடு இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது. தென் ஆசிய நாடுகளிலேயே மிகப் பெரிய ஜனநாயக நாடாக இந்தியா விளங்கி வருகிறது. சமாதான சகவாழ்வும், கட்சி சேரா இயல் முறையும் இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையின் சிறப் பியல்புகள் ஆகும். எல்லா நாடுகளுடனும் நட்புறவும், அமைதியான தொடர்பும் கொள்வதே நமது கொள்கை. பிற நாடுகளுக்குத் தூதுவர் களை அனுப்பியும், அந்நாட்டுத் தூதுவர்களை ஏற்றுக்கொண்டும் அந்நாடுகளுடன் நட்புறவை நம் நாடு வளர்த்து வருகிறது. நம் நாடு இங்கிலாந்துடன் சிறந்த நட்புறவு கொண்டுள்ளது. காமன் வெல்த்தில் (The Common wealth) நம் நாடு ஒரு முக்கிய உறுப்பினராக இருந்து வருகிறது.

### I. கூட்டு சேராக் கொள்கை

இந்திய நாட்டின் வெளிநாட்டுக் கொள்கை *கூட்டு சேரா இயல் முறையைப்* பின்பற்றுவதாகும். உலகின் இருபெரும் வல்லரசுகளாக விளங்கி வரும் நாடுகள் அமெரிக்க ஐக்கியக் குடியரசும் ரஷ்யாவும் ஆகும். நம் நாடு இவ்விரண்டு நாடுகளுடனும் கூட்டு சேராமல் நடுநிலைமைக் கொள்கையைப் பின்பற்றுகிறது. இந்தக் கூட்டு சேராக் கொள்கை என்பது அநீதி இழைக்கப்படுவதைக் கண்டு வாளாயிருத் தலன்று. எங்கெல்லாம் சுதந்திரத்திற்கும் அமைதிக்கும் அபாயம் ஏற்படுகின்றதோ அல்லது ஆக்கிரமிப்பு நடைபெறுகின்றதோ அதைச் சுட்டிக் காட்டுவதை நமது கடமையாகக் கொண்டுள்ளோம். காலனி ஆதிக்கம், இன வேற்றுமைக் கொள்கை, இராணுவக் கூட்டுகள் ஆகிய தீய சக்திகளை எப்பொழுதுமே எதிர்த்து வந்துள்ளோம்.

உலக அமைதியை நிலைநாட்டுவதற்குரிய சிறந்த சாதனமாகப் பஞ்சசீலக் கொள்கையை ஜவஹர்லால் நேரு வகுத்தளித்தார். பஞ்ச சீலக் கொள்கைகள் ஐந்தாகும்.

அவையாவன :

1. அமைதியான சக வாழ்வு முறை.
2. பிறநாட்டு விவகாரங்களில் தலையிடாமை.
3. ஆக்கிரமிப்பற்ற தன்மை.
4. எல்லா நாடுகளின் எல்லைகளையும் அங்கீகரித்தல்.
5. நாடுகள் தத்தமது அரசியல் பொருளாதார, சமூக அமைப்புகளையொட்டி வாழவிடுதல்.

உலக சமாதானத்திற்காக அரும்பாடுபட்ட தலைவர் ஜவஹர்லால் நேரு பஞ்சசீலக் கொள்கையை உலகெலாம் பரப்பினார். அமைதித் தூதுவராக நேருஜி ஆற்றியுள்ள தொண்டுகள் உலக நாடுகளிடையே நம் நாட்டின் மதிப்பை உயர்த்தி உள்ளது.

## II. *அண்டை நாடுகளுடன் உறவு*

நம் நாட்டிற்கு அண்மையிலுள்ள நாடுகள் ***பாகிஸ்தான், பங்களாதேஷ், திபேத், நேபாளம், ஸ்ரீலங்கா, பர்மா*** ஆகியவையாகும். இந்நாடுகளுடன் நம் நாடு நட்புறவு கொண்டுள்ளது. 1971-ல் பங்களாதேஷின் சுதந்திரத்தை இந்தியா அங்கீகரித்தது. 1972ஆம் ஆண்டில் இந்தியாவும் பங்களாதேஷும் 25 ஆண்டு நட்புறவு உடன்படிக்கை செய்துகொண்டன. நேபாளத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு நமது அரசு பல உதவிகளைச் செய்துள்ளது.

1974ஆம் ஆண்டில் ஏற்பட்ட உடன்படிக்கையின்படி இந்தியாவும் ஸ்ரீலங்காவும் பொருளாதார, தொழில்நுட்ப வளர்ச்சிக்குக் கூட்டுறவு அடிப்படையில் முயற்சி செய்யும். பர்மாவுக்கும் இந்தியாவிற்கும் நல்லுறவு நிலவி வருவதோடு நெருங்கிய வாணிபத் தொடர்பும் இருந்து வருகிறது.

'பாரத நாடு பார்க்கெலாம் திலகம்' என்று பாரதியார் பாடியுள்ளார். புவியியல் அமைப்பில் நமது நாடு நடுநாயகமாக அமைந்

துள்ளது. உலக மக்களுக்கோர் எடுத்துக்காட்டாக விளங்கி, அறவழியில் அமைதியை நிலவச் செய்வதில் நம் நாடு சிறந்த பணியாற்றி வருகிறது. 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்ற நமது நாட்டு மரபின்படி உலக மக்களனைவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மக்களாகக் கருதப்படுகின்றனர். உலக மக்கள் அனைவரும் போர் வழியை அகற்றி, அமைதி வழியையே பின்பற்ற வேண்டுமென்பது இந்தியாவின் விருப்பம். உலக அமைதிக்காக உண்மையாகப் பாடுபட்டு வரும் நமது நாடு உலக அரங்கில் உயர்ந்த நிலையை அடைந்துள்ளது.

## வினாக்கள்

**I. கோடிட்ட இடங்களை நிரப்புக :**

1. பஞ்சசீலக் கொள்கையை வகுத்தவர் ———— .
2. இந்தியாவின் இரும்பு மனிதர் என்று அழைக்கப்படுபவர் ———— .
3. உலகில் இருபெரும் வல்லரசுகளாக விளங்கும் நாடுகள் ————, ———— .
4. பாகிஸ்தான் யுத்தம், தொடர்ந்த வறட்சி ஆகிய காரணங்களால் ———— ஐந்தாண்டு திட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

**II. பின்வரும் விடைகளில் பொருத்தமானவற்றைத் தேர்ந்தெடுத்து எழுதுக :**

**பண்டித நேரு உலக மக்களின் மதிப்பைப் பெற்றதற்குக் காரணம**

(அ) அவர் மோதிலால் நேருவின் மைந்தர்.

(ஆ) அவர் காந்தியடிகளின் முக்கிய சீடர்.

(இ) தேசிய இயக்கத்தில் சேர்ந்து பலமுறை சிறை சென்றார்.

(ஈ) அவர் கூட்டு சேராக் கொள்கையைப் பின்பற்றினார்.

**III. குறுகிய விடைகள் அளிக்கவும் :**

1. ஐதராபாத் எவ்வாறு இந்தியாவுடன் இணைந்தது ?
2. ஐந்தாண்டு திட்டங்களின் நோக்கங்கள் யாவை ?

3. இந்தியாவில் இரும்பு எஃகுத் தொழில் எங்கெங்கு நடைபெறுகின்றது?

4. கூட்டு சேராக் கொள்கை என்றால் என்ன?

IV. விரிவான விடை அளிக்கவும் :

1. சுதேச இராச்சியங்கள் எவ்வாறு இந்தியாவுடன் இணைக்கப்பட்டன என்பதை விளக்கிக் கூறுக.

2. இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையின் சிறப்பியல்புகளை விளக்குக.

## பயிற்சி

1. உலக அரங்கில் பாரதம் என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை வரைக.

2. உலக நாட்டுக் கொடிகளின் படங்களைத் திரட்டி உனது படப் புத்தகத்தில் ஒட்டவும்.

# இந்திய வரலாறு கால அட்டவணை

| | | |
|---|---|---|
| கி.மு. 3250-2750 | — | சிந்து சமவெளி நாகரிகம் |
| கி.மு. ஆறாம் நூற்றாண்டு | — | புத்த, சமண சமயங்கள் தோன்றுதல் |
| கி.மு. 261 | — | அசோகரின் கலிங்கப் போர் |
| கி.பி. 300-500 | — | குப்தப் பேரரசு |
| கி.பி. 606-647 | — | ஹர்ஷரது ஆட்சி |
| கி.பி. 570 | — | முகம்மது நபியின் பிறப்பு |
| கி.பி. 712 | — | சிந்துமீது அராபியப் படையெடுப்பு |
| கி.பி. 1191, 1192 | — | முதல், இரண்டாவது தரேயின் போர்கள் |
| கி.பி. 1206-1526 | — | டில்லியில் சுல்தான்கள் ஆட்சி |
| கி.பி. 1526 | — | முதல் பானிபட் போர் |
| கி.பி. 1556 | — | இரண்டாம் பானிபட் போர் |
| கி.பி. 1739 | — | நாதிர்ஷா படையெடுப்பு |
| கி.பி. 1751 | — | ஆர்க்காட்டைக் கிளைவ் கைப்பற்றுதல் |
| கி.பி. 1757 | — | பிளாசிப் போர் |
| கி.பி. 1761 | — | மூன்றாவது பானிபட் போர் |
| கி.பி. 1765 | — | அலகாபாத் உடன்படிக்கை |
| கி.பி. 1773 | — | ஒழுங்குமுறைச் சட்டம் |
| கி.பி. 1784 | — | பிட் இந்தியாச் சட்டம் |
| கி.பி. 1857 | — | முதல் சுதந்திரப் போர் |
| கி.பி. 1858 | — | விக்டோரியா மகாராணியாரின் பேரறிக்கை |
| கி.பி. 1885 | — | இந்திய தேசிய காங்கிரஸின் தோற்றம் |
| கி.பி. 1905 | — | வங்காளப் பிரிவினை |
| கி.பி. 1909 | — | மிண்டோ-மார்லி சீர்திருத்தங்கள் |
| கி.பி. 1917 | — | ஆகஸ்டு அறிக்கை |
| கி.பி. 1919 | — | ஜாலியன் வாலா படுகொலை |
| கி.பி. 1929 | — | லாகூர் காங்கிரஸ் |
| கி.பி. 1930 | — | சட்ட மறுப்பு இயக்கம் |
| கி.பி. 1931 | — | காந்தி-இர்வின் ஒப்பந்தம் |
| கி.பி. 1935 | — | இந்திய அரசாங்க அரசியல் சட்டம் |
| கி.பி. 1942 | — | ஆகஸ்டு புரட்சி |
| கி.பி. 1947, ஆகஸ்டு 15 | — | இந்தியா சுதந்திரமடைதல் |
| கி.பி. 1950, ஜனவரி 26 | — | இந்தியக் குடியரசு ஆரம்ப தினம் |

Wrapper Printed at Prasanna Offset, Madras-600 014